# நேர்காணல் 2

சந்திப்பு: பவுத்த அய்யனார் செப்டம்பர் - நவம்பர் 2010 ரூ. 15




என்னைப் பிட்டேன்
உலகமாயிற்று.
உலகத்தைப் பிட்டேன்
நானானேன்.

☯

பகை அல்லது முரண்பாடு
தாவரம் தானென்றாலும்
ஆப்பிள் மரமும்
தேவதாருவும் ஒன்றாகாத உலகமிது.
ஊர்வன, பறப்பன, மிருகங்கள்கூட.
திமிங்கலமும், சிலேபி மீனும்
மீனினமென்று கடையில் விற்றாலும்
பகையறியாமல் போவேனோ?
ஆனபோதும் மீனினம் மீனினம்தான்.
தாவரம்
தாவரமே.

☯

**வண்ணநிலவன்**

**ஆசிரியர்**

பவுத்த அய்யனார்

ayyapillai@gmail.com

***நிர்வாக ஆசிரியர்***

முத்துமீனாள்

mul.muthumeenal@gmail.com

***அட்டை வடிவமைப்பு:***

ஏ. லோகநாதன்

**இதழ் வடிவமைப்பு:**

**புலம்**, சென்னை-5

*044 - 4556 7517*

**வெளியீடு:**

*மீனாள் பப்ளிஷிங் ஹவுஸ்*

*3/363, பஜனை கோவில் தெரு*

கேளம்பாக்கம் - 603 103

*செல்: 9688086641*

***புகைப்படங்கள்:***

மதுரை சோமு

***நன்றி***

வழக்கறிஞர் திரு.சுவாமிநாதன்,
திரு. கண்ணன்
நிர்வாக இயக்குநர்
ஸ்ரீராம் குழுமம்,
திரு. விஜயா வேலாயுதம்,
பூர்வீகா மொபைல் வேர்ல்டு.

***தனிச்சுற்றுக்கு மட்டும்.***




# சில வார்த்தைகள்

'நேர்காணல்' முதல் இதழுக்குக் கிடைத்த வரவேற்பு ஆச்சர்யம் கொள்ளத்தக்கதல்ல. தமிழில் புதிய முயற்சிகளுக்கு எப்போதும் வரவேற்பு உண்டு. குறைவான வாசகர்களே சிற்றிதழ்களை வாசித்து வந்தாலும், அதற்குரிய வரலாற்று மதிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஜனவரி 2010 சென்னை புத்தகக் கண்காட்சியில் ஒருசில இடங்களில் கொடுத்திருந்தும் கூட 250 பிரதிகள்வரை விற்றது. இலங்கை, ஹாங்ஹாங், செகந்திரபாத் என தமிழகத்திற்கு வெளியிலிருந்தும் இதழைப் படித்துவிட்டு மின்னஞ்சலிலும் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டார்கள்.

முதல் இதழை கூத்துப்பட்டறை ந. முத்துசாமி அவர்கள் வெளியிட மூத்த பத்திரிகையாளரும் எங்கள் குடும்பத்தின்மீது அன்பு கொண்டவருமான சின்னக்குத்தூசி ஐயா பெற்றுக் கொண்டார். விழாவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்புவரை மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையில் இருந்தார் ஐயா. எழுதிக் கொடுத்ததைப் படித்துவிடுகிறோம் என்று சொல்லியும், ஒருவர் துணையுடன் விழாவில் பங்கேற்றது நெகிழ வைத்தது. விழாவில் அவர் பேசிய சொற்கள் மிகுந்த மனவெழுச்சி தரக்கூடியதாய் இருந்தது. நேர்காணல் இதழ் 'தமிழில் முதல் முயற்சி'தான் என்பதை ஐயா சின்னக்குத்தூசி உறுதிப்படுத்திப் பேசியது பெருமையளிப்பதாக இருந்தது.

வண்ணநிலவன் அவர்களின் படைப்பும் அவரது குண நலன்களும் எல்லாத் தரப்பினராலும் விரும்பப்படுவது. பல மாதங்களுக்கு முன்பாகவே இதழுக்கான விசயங்கள் தயாராய் இருந்தும் இதழ் வெளிவர காலதாமதமாகிவிட்டது. கரூரில் இருந்து நாங்கள் இப்போது சென்னை வந்துவிட்டோம்; எனது வேலை நிமித்தமாக. இடமாற்றம் மட்டுமல்லாது பொருளாதார ரீதியான பிரச்சினைகளும் தாமதத்திற்குக் காரணம். இனி அதிகத் தாமதமில்லாமல் இதழ் தொடர்ந்து வெளிவரும்.

என் மனைவி முத்துமீனாளின் 'முள்' நூலைப் படித்துவிட்டு திரு. கமல்ஹாசன் எங்களைச் சந்திக்க விரும்பியது ஆச்சர்யமளித்தது. 2009 ஜனவரியில் 'முள்' நூலை வெளியிட்ட கார்ட்டூனிஸ்ட் திரு. மதன், கமல்ஹாசனிடம் 'முள்' நூலை அறிமுகப்படுத்தினார். நடிகர் திரு. நாசர் கமல்ஹாசனிடம் எங்களை அறிமுகப்படுத்தினார். 'முள்' நூலின் ஆங்கில வடிவம் 'Thorn' ஜப்பானின் நிப்பான் பவுண்டேஷன் உதவியுடன் வெளிவந்தது. அத்துடன் எனது 'மேன்ஷன் கவிதைகள்' நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 'Room' இரண்டு நூல்களையும் எங்களது Meenal Publishing House மூலமே வெளியிட்டுள்ளோம். இந்த இரண்டு நூல்களையும் திரு. கமல்ஹாசன் எங்களது வேண்டுகோளுக்கு இணங்கி வெளியிட்டதையும் பெருமைக்குரியதாய் நினைக்கிறோம். வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் எனக்குப் புதிய முகங்கள். அவர்களுக்கு நன்றி. அண்ணன் நக்கீரன் கோபால் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டது கூடுதல் மகிழ்ச்சி அளித்தது.

- **பவுத்த அய்யனார்**

நேர்காணல்

# வண்ணநிலவன்



சந்திப்பு : பவுத்த அய்யனார்

## உ.நா. ராமச்சந்திரன் (வண்ணநிலவன்)

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | *15.12.1949* |
| பிறந்த ஊர் | : | திருநெல்வேலி |
| தந்தை | : | உலகநாதபிள்ளை |
| தாய் | : | ராமலட்சுமி அம்மாள் |
| வசித்த ஊர்கள் | : | தாதன்குளம்,<br>திருநெல்வேலி,<br>ஸ்ரீவைகுண்டம்,<br>பாளையங்கோட்டை,<br>பாண்டிச்சேரி, சென்னை |
| எழுதத் தொடங்கிய ஆண்டு | : | *1970* |
| முதல் கதை | : | மண்ணின் மலர்கள் |
| முதல் நாவல் | : | நேசம் மறப்பதில்லை நெஞ்சம் |
| திருமண வருடம் | : | *07.04.1977* |
| மனைவி | : | சுப்புலட்சுமி |
| மகன் | : | ஆனந்த் சங்கர் |
| மகள்கள் | : | சசி, உமா |
| பேரன் | : | அபிஷேக் |
| பேத்தி | : | ஸ்ரீசஞ்சனா |

**வெளிவந்துள்ள நூல்கள்**

**நாவல்:** நேசம் மறப்பதில்லை நெஞ்சம் (1975), கடல்புரத்தில் (1977), கம்பாநதி (1979), ரெயினீஸ் அய்யர் தெரு (1981), காலம்(2006)

**சிறுகதை:** எஸ்தர் (1976), தர்மம் (1983), உள்ளும் புறமும் (1990), தாமிரபரணிக் கதைகள் (1992), தேடித் தேடி கதைகள்(1996), யுகதர்மம்(1996), வண்ணநிலவன் கதைகள்(2001).

**கவிதை:** மெய்ப்பொருள்(1981), காலம்.

**பதிப்பகங்கள்:**

கவிதா(நச்சினார்க்கினியன்), நர்மதா, பூஞ்சோலை, அன்னம், சந்தியா, விகடன், வைகறை (கோவை), பரிசல், கிழக்கு.

இப்போது வண்ணநிலவனின் கதைகள், நாவல்கள், கட்டுரைகள் எல்லாவற்றையும் கிழக்குப் பதிப்பகம் நூலாக்கி வருகிறது.

இவரது பல கதைகள் ஆங்கிலம், இந்தி, மலையாளம் மற்றும் கவிதைகள் ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

தொடர்பு முகவரி:

**வண்ணநிலவன்**
ஜி-1, சின்முத்ரா அபார்ட்மெண்ட்ஸ்
14, முதல் குறுக்குத் தெரு
யுனைடெட் இந்தியா காலனி, கோடம்பாக்கம்
சென்னை - 600 024.
தொடர்பு எண்கள்: 044-2473 1929, 97899 83529.

என்னுடைய பூர்வீகம் என்று பார்த்தால், நான் தாதன்குளத்துக்காரன். திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் ரயில் பாதையில் திருநெல்வேலியிலிருந்து மூன்றாவது ஸ்டேஷன் தாதன்குளம். இதுதான் என் முன்னோர்களின் ஊர். என்னுடைய முதல் வகுப்புக் கல்வி இந்த ஊரில்தான் ஆரம்பமாயிற்று.

அந்தக் காலத்தில் முதல்முதலாகப் பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதைப் 'படிக்கப் போடுவது' என்பார்கள். இப்போது உள்ளது போல் ஜூன் மாதம் படிக்கப் போடாமல், சரஸ்வதி பூஜையின் போதுதான் படிக்கப் போடுவார்கள். என்னைப் படிக்கப் போடுகிற நிகழ்ச்சி பெரிய வைபவமாகவே நடந்தது. பல உறவினர்களும் அதற்கு வந்திருந்தார்கள். (ஆனால், இறுதி வரை எனக்குப் படிப்பே வரவில்லை என்பது வேறு விஷயம்).

என்னுடைய அப்பாவழித் தாத்தாவுக்கு கொழும்பு சம்பாத்தியம். அவரைக் கொழும்புப் பிள்ளை, கருத்த முத்தையா பிள்ளை என்பார்கள். அம்மாவுடைய பூர்வீகம் அனவரதநல்லூர். எங்களுடைய குடும்பங்களில் ஏழு ஊர்களுக்குள்தான் திருமண உறவுகள் இருந்தன. அதனால் ஏழு ஊர்ப் பிள்ளைமார் என்பார்கள்.

அப்பா கொக்கிரகுளத்தில் நில அடமான வங்கியில் வேலை பார்த்தார்கள். தினசரி காலை ரயிலில் ஆபீஸுக்குச் சென்றார்கள். அப்போது திருநெல்வேலி ஜங்ஷனுக்கும் பாளையங் கோட்டைக்கும் நடுவே 'குறிச்சி' என்ற ஸ்டேஷன் இருந்தது. (அதை இப்போது எடுத்துவிட்டார்கள்). தாதன்குளத்திலிருந்து குறிச்சிக்கு வந்து, அங்கிருந்து கொக்கிரகுளத்துக்கு நடந்தே வரவேண்டும். அதுபோல் மாலையிலும் பயணம் செய்ய வேண்டியதிருந்தது.

அம்மாவைப் பெற்ற தாத்தாவும், ஆச்சி (பாட்டி)யும் திருநெல்வேலி டவுன் சம்பந்தமூர்த்தி கோவில் தெருவில் இருந்தார்கள். தினசரி ரயிலில் சென்று வருவது அப்பாவுக்குச் சிரமமாக இருந்ததால், அப்பா தன் மாமனார் வீட்டுக்கே வந்துவிட்டார்கள். சம்பந்தமூர்த்தி கோவில் தெருவுக்குப் பின்புறமிருந்த குரவர் தெருவில் ஒரு முனிஸிபல் ஆரம்பப் பள்ளி இருந்தது. அந்தப் பள்ளியில் என்னைச் சேர்த்து விட்டனர். அங்கே சில மாதங்கள் படித்தேன். அதுவும் சரிப்பட்டு வரவில்லை.

அதற்குள் அப்பா தன் குடும்பத்தை டவுன் தெற்குப் புதுத்தெருவுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். தெற்குப் புதுத் தெருவிலே ஷாஃப்டர் உயர்நிலைப் பள்ளியின் கிளைப் பள்ளி, ஈஸ்டர்ன் பிராஞ்ச் என்ற பெயரில் செயல்பட்டது. (இப்போதும் இந்தப் பள்ளிக்கூடம் தெற்குப் புதுத்தெருவில் உள்ளது.) ஈஸ்டர்ன் பிராஞ்ச்சைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளியில் இரண்டாவது முதல் ஐந்தாவது வகுப்பு வரை படித்தேன். பிறகு ஈஸ்டர்ன் பிராஞ்சில் ஆறாவது வகுப்பு. அப்போது ஃபர்ஸ்ட் பார்ம் படித்தேன்.

என்னுடைய ஐந்தாவது வயதில் என் மூத்த தங்கை பிறந்தாள். நான் நாலாவது படிக்கும்போது என் இரண்டாவது தங்கை பிறந்தாள். அப்போதுதான் திருநெல்வேலிக்கு நேரு வந்தார். அவரைச் சந்திப்பிள்ளையார் முக்கில் பார்த்தது இன்றும் நினைவிருக்கிறது.

ஈஸ்டர்ன் பிராஞ்சில் ஃபர்ஸ்ட் பார்ம் படிக்கும்போதுதான் அதே பள்ளியில் கல்யாணி (வண்ணதாசன்) தேர்ட் ஃபார்ம் படித்துக் கொண்டிருந்தார். அப்போது கல்யாணியை எனக்குப் பழக்கமில்லை. ஆனால், அவர் வீட்டுக்கு எதிரே சுடலைமாடன் கோவில் தெருவிலிருந்த அவருடைய சின்னத்தாத்தாவுடைய மகன் சிவசங்கரன்தான் எனக்கு வகுப்புத் தலைவன். அவனைப் பார்க்க அடிக்கடி அவன் வீட்டுக்குச் சென்றிருக்கிறேன்.

ஸ்ரீவைகுண்டத்தில் என் சிற்றப்பா இருந்தார்கள். செகண்ட் ஃபார்ம் படிக்க அப்பா என்னைச் சிற்றப்பா வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். அங்கேயுள்ள குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளியில் செகண்ட் ஃபார்ம் படித்தேன். பெயிலாகி விட்டேன். மீண்டும் இரண்டாவது வருடம் அந்தப் பள்ளியிலேயே செகண்ட் ஃபார்ம்மைத் தொடர்ந்தேன். செகண்ட் ஃபார்ம் இரண்டாவது வருஷம் படிக்கும்போது எங்கள் குடும்பம் திருநெல்வேலியிலிருந்து கருங்குளத்துக்குக் குடியேறியது. கருங்குளம் தாதன்குளத்திற்கு அருகே உள்ள ஊர். திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் ஆற்றின் கரையோரம் அக்ரஹாரத்தில் 1960ல் தாத்தாவுடன் குடியேறி னோம். நான் தினசரி கருங்குளத்திலிருந்து ஸ்ரீவைகுண்டத்துக்குப் பஸ்ஸில் சென்று படித்து வந்தேன். அப்போது எனக்கு பஸ்ஸில் டிக்கெட் 25 பைசா.

இதற்குள் அப்பாவின் அலுவலகம் கொக்கிர குளத்திலிருந்து பாளையங்கோட்டைக்கு மாறி விட்டது. அப்பாவுக்கும் கருங்குளத்திலிருந்து தாதன்குளத்துக்கு நடந்தே சென்று ரயிலைப் பிடித்து அலுவலகம் சென்று வருவது கஷ்டமாக இருந்தது. அதனால் 1961ல் திரும்பவும் குடும்பம் பாளையங்கோட்டைக்குச் சென்றது. தாத்தா மட்டும் கருங்குளத்தில் தனியே பொங்கிச் சாப்பிட்டுக் கொண்டு, சொத்துக்களைப் பராமரித்துக் கொண்டு



இருந்தார்கள். என்னை அப்பா பாளையங்கோட்டை கதீட்ரல் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்து விட்டார்கள். பாளையங்கோட்டையிலிருந்தபோது என் மூன்றாவது தங்கை பிறந்தாள்.

கருங்குளத்தில் மாவட்ட நூலகக் கிளை ஒன்று இருந்தது. நூலகர் ஆறுமுகம் அப்பாவின் நண்பர். கருங்குளத்தில் நாங்கள் இருந்தபோது கல்கியின் 'பொன்னியின் செல்வன்', 'அலை ஓசை'யை எல்லாம் படித்தேன். இது தவிர கருங்குளம் அக்ரஹாரத்திலேயே யூத் அஸோஷியேஷன் ஒன்று இருந்தது. இந்த அஸோஷியேஷனில் தமிழ்வாணனின் நாவல்கள் எல்லாம் இருந்தன.

ஸ்ரீவைகுண்டத்தில் இருந்த பஞ்சாயத்து நூலகராக இருந்தவர் என் மாமா ரத்தினம் பிள்ளை. அந்த நூலகம் கோட்டை அருகே இருந்தது. ஸ்ரீவைகுண்டத்தில் இருந்தபோது இந்த நூலகத்துக்குத் தினசரி சென்று விடுவேன். இங்குதான் எமிலிஜோலாவின் 'நானா', 'சுரங்கம்' போன்ற மொழிபெயர்ப்பு நாவல்களைப் படித்தேன். ஸ்ரீவைகுண்டத்தில் என் சிற்றப்பா வீட்டினருகே தெக்ஷிணமாற நாடார் சங்கத்திற்கருகில் எம்.ஜி.ஆர் மன்றம் ஒன்றை திருவை அண்ணாமலை என்பவர் ஆரம்பித்தார். இதன் திறப்பு விழாவுக்கு கே.ஆர்.ராமசாமியும், கருணாநிதியும் வந்திருந்தார்கள். அப்போதுதான் முதல்முதலாகக் கருணாநிதியைப் பார்த்தேன்.

பாடப்புத்தகங்கள் படிப்பதற்குக் கடுமையாக இருந்தன. இயல்பாகவே எனக்குக் கல்வியில் போதிய நாட்டமும் இல்லை. அதனால் பத்திரிகைகள், நாவல்கள் படிப்பதில் மெய்மறந்து ஈடுபட்டேன். பால்யத்தில் எனக்குத் திக்குவாய் மிக அதிகமாக இருந்தது. யாருடனும் பேசவே பயப்படுவேன். நண்பர்களும் அதிகமில்லை. அதனால் கதை உலகம் என்னை ஆக்கிரமித்துக் கொண்டது. பாளையங்கோட்டைக்கு வந்த பிறகு நாவல்களைப் படிக்கிற பைத்தியம் முற்றிவிட்டது.

கதீட்ரல் உயர்நிலைப் பள்ளியில் நல்ல நூலகம் ஒன்று இருந்தது. நூலகரின் பெயர் உயிர். இங்குதான் க.நா.சுப்ரமணியம், வல்லிக்கண்ணன் என்ற பெயர்கள் அறிமுகமாயின. க.நா.சு., வல்லிக்கண்ணன் மொழிபெயர்த்த பெர்ல் பதிப்பக நாவல்கள் எல்லாம் பள்ளி நூலகத்தில் இருந்தன.



அவற்றை ஒன்றுவிடாமல் படித்து முடித்தேன். இதுவும் போதாமல் பாளையங்கோட்டையில் இருந்த மாவட்ட மைய நூலகம், கரையாளர் நூலகம் என்று தேடித்தேடிச் சென்று, பைத்தியம் போல் படித்துக் கொண்டே இருந்தேன்.

ஏற்கனவே படிப்பில் மகாமட்டம். கதீட்ரல் உயர்நிலைப் பள்ளியில் கடைசியில் இருக்கிற மாணவர்களை, வகுப்பின் பின்னால் கடைசி பெஞ்சில் உட்காரவைத்து விடுவார்கள். இதற்கு மாப்பிள்ளை பெஞ்ச் என்று பெயர். நான் இந்த மாப்பிள்ளை பெஞ்சில் தவறாமல் இடம்பிடித்து வந்தேன். நாங்கள் குடியிருந்து வந்த வடக்கு ரத வீதியில் முத்துக்கிருஷ்ணன் என்ற நண்பர் செயிண்ட் சேவியர் கல்லூரியில் பி.எஸ்.ஸி. படித்து வந்தார். அவர் வி.ஸ.காண்டேகரின் அபிமானி. காண்டேகரின் நாவல்களை அவரிடமிருந்து இரவல் வாங்கிவந்து படித்தேன். இவர்தான் எனக்குத் தாமரையையும், தீபத்தையும் அறிமுகப்படுத்தினார்.

1965ல் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் எழுந்தது. நான் போராட்டத்தில் நண்பர் முத்துக்கிருஷ்ணனுடன் தீவிரமாகப் பங்கு கொண்டேன். அந்த வருடம் மார்ச்சில் நடக்க வேண்டிய பள்ளியிறுதித் தேர்வு மே மாதம்தான் நடந்தது. பள்ளியிறுதித் தேர்வில் எப்படியோ தேர்வு பெற்றேன். அத்துடன் என் கல்விக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

அதற்குள் குடும்பம் பெரும் வறுமைக்குள் விழுந்தது. குடும்பத்திலிருந்த சொத்துக்கள் எல்லாம் கடன், கேஸ் என்று செலவாகிவிட்டன. 1965 வாக்கில் பாளையங்கோட்டையில் உருவாகி வந்த பக்தவச்சலபுரத்துக்குக் குடிபெயர்ந்தோம். சாதாரணக் குடிசை வீட்டில் அப்பா, அம்மா, மூன்று தங்கைகளுடன் இருந்தோம். அம்மா மூன்று தங்கைகளையும் கன்னியாஸ்திரீகளின் உதவியுடன் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இலவச போர்டிங்கில் சேர்த்து விட்டாள். நானும் அம்மாவும் பெல்பின்ஸ் என்ற கம்பெனியில் தினசரிக் கூலிகளாக வேலை பார்த்தோம்.

பெல்பின்ஸில் ஊக்கு தயாரிக்கிற இயந்திரத்தில் எனக்கு வேலை. ஒரு வருடம் இந்த வேலையைப் பார்த்தேன். மதுரையில் என் தாய்மாமனார் இருந்தார். அங்கே போனால் வேறு நல்ல வேலை தேடலாம் என்று மதுரைக்குச் சென்றேன். அங்கே மேலக்கோபுரவாசலில் முருகன் ஜோதி ஸ்டோர் என்ற ஜவுளிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தேன். தீபாவளி சமயத்தில் உடல்நலம் கெட்டு வேலை பார்க்க முடியாமல் ஊருக்கே திரும்பி விட்டேன். மீண்டும் பழைய பெல்பின்ஸ் கம்பெனியிலேயே வேலைக்குச் சேர்ந்தேன்.

1961 முதல் கதீட்ரல் உயர்நிலைப் பள்ளியில் என்னோடு படித்தவன் ரவிக்குமார் என்ற நண்பன். அவர்கள் வீட்டுக்கு குலசேகரப் பட்டிணத்திலிருந்து நாகூர்மாமா என்ற நண்பர் அடிக்கடி வந்து போவார். அவர் குலசேகரப் பட்டிணம் அருகே உள்ள உடன்குடியில் சைக்கிள் கடை வைத்திருந் தார். குலசேகரப்பட்டிணத்திற்கு அருகில்தான் மணப்பாடு. அவருடன் சிறிது காலம் சைக்கிள் கடையில் வேலை பார்த்தேன். அப்போதுதான் அந்தக் கடைக்கு வரும் மீனவர்களுடன் பழக்கம் ஏற்பட்டது.

1969ல் மீண்டும் பாளையங்கோட்டைக்கே வந்தேன். ரவிக்குமாரின் உறவினரான ஸ்ரீனிவாசகம் அட்வகேட்டாக இருந்தார். ரவிக்குமாருடைய அப்பா என்னை ஸ்ரீனிவாசகத்திடம் வக்கீல் குமாஸ்தாவாகச் சேர்த்துவிட்டார். 1969 முதல் 1973 வரை அவரிடம் வக்கீல் குமாஸ்தாவாக வேலை பார்த்தேன்.

1969ஆம் வருஷம் ஜூன் வாக்கில் கோர்ட் கோடை விடுமுறைக்குப் பின் திறந்திருந்த சமயம். ஒரு வழக்கு விஷயமாக வண்ணார் பேட்டையிலிருந்து ஆர்.டி.ஓ. கோர்ட்டில் ஆஜராக வேண்டியிருந்தது. அப்போது அதே கோர்ட்டுக்கு நடராஜன் என்ற கட்சிக்காரரும் வந்திருந்தார். நடராஜனுடைய வக்கீல் ஊரில் இல்லாததால் எங்கள் வக்கீலிடம் கேஸை நடத்தச் சொன்னார். கேஸ் வாய்தாவுக்கு வந்தது. நடராஜனுக்குத் தென்காசி. வாய்தாதோறும் அவருக்குக் கடிதம் எழுதித் தெரிவிப்போம். ஒருமுறை அவரிடமிருந்து டி.கே.சி. நினைவுநாள் சொற்பொழிவு பற்றிய அழைப்பிதழ் எங்கள் அட்வகேட் முகவரிக்கு வந்தது. அப்போது தான் தெரியும் அந்தக் கட்சிக்காரர் நடராஜன் வேறு யாருமல்ல டி.கே.சி.யின் பேரனான தீப. நடராஜன் தான் அது என்று.

அந்த அழைப்பிதழில் பேச்சாளர்களின் பெயர்களில் வல்லிக்கண்ணன் - ராஜவல்லிபுரம் என்று போட்டிருந்தது. ஒரே ஆச்சரியம். அட, வல்லிக்கண்ணன் பக்கத்திலுள்ள ராஜவல்லி புரத்துக்காரர்தானா என்று ஒரே சந்தோஷம். உடனே ஒரு இண்லேண்ட் லெட்டர் எழுதி வல்லிக்கண்ணன், ராஜவல்லிபுரம், திருநெல்வேலி தாலுகா என்று முகவரி எழுதிப் போட்டேன். உடனே இரண்டாம் நாளே வல்லிக்கண்ணனிடமிருந்து பதில் வந்தது. பிறகு வாரம் இரண்டு மூன்று கடிதங்கள் ஒன்றில் பக்கத்திலுள்ள டவுனில்தான் வண்ணதாசன் இருக்கிறார் என்று வ.க. எழுதியிருந்தார்கள்.

வல்லிக்கண்ணனின் கடிதங்களை என் நண்பரான செல்வக்குமாரிடம் தவறாது காண்பிப்பேன். நானும் செல்வக்குமாரும் சேர்ந்து ‘பொருநை’ என்ற கையெழுத்துப் பத்திரிகையை

நடத்தி வந்தோம். வல்லிக்கண்ணன், வண்ணதாசன் இருவரையும் நேரில் சென்று சந்திக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால், நேரில் சந்திக்கத் தயக்கமாகவும் இருந்தது. அவர்களிடம் என்ன பேசுவதென்ற கூச்சம் வந்து தடுத்தது.

1970 மார்ச் வாக்கில் ஒரு நாள் மாலை இரண்டு நண்பர்கள் என்னைத் தேடி வந்தார்கள். அவர்கள் தங்களை நம்பிராஜன், சுப்பு. அரங்கநாதன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். இருவரும் வல்லிக்கண்ணனையும், வண்ணதாசனையும் சந்தித்துவிட்டு என்னைச் சந்திக்க வந்திருந்தனர். வல்லிக்கண்ணன்தான் என் முகவரியை அவர்களுக்குக் கொடுத்தவர். மூவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அந்த மாத தீபத்தில் வண்ணதாசனின் ‘வேர்’ என்ற சிறுகதை வெளி வந்திருந்தது. அதைப்பற்றி மூவரும் பேசினோம்.

சில தினங்கள் கழித்து நானே துணிந்து ஒரு ஞாயிறு அன்று வல்லிக்கண்ணனைப் பார்க்கச் சென்றேன். மூன்று, நான்கு மணி நேரம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தோம். வ.க.வைச் சந்தித்தபின் ஒரு நாள் சுடலைமாடன் கோவில் தெருவில் கல்யாணியையும் சென்று சந்தித்தேன். நம்பிராஜன் அப்போது புனைபெயர் வைத்துக் கொள்ளவில்லை. முதலில் சங்கரி மணாளன் என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தார். பிறகுதான் விக்கிரமாதித்யன் என்ற பெயரை வைத்துக் கொண்டார்.

கல்யாணியும் நானும் அடிக்கடி ராஜவல்லிபுரம் சென்று வ.க.வைப் பார்த்துவிட்டு வருவோம். ஒருமுறை ராஜவல்லிபுரம் சென்றிருந்த போது நான் எழுதி வைத்திருந்த இரண்டு சிறுகதைகளை வ.க.விடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னேன். ஒரு வாரம் கழித்து தூத்துக்குடியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ‘சாந்தி’ என்ற பத்திரிகை என் முகவரிக்கு வந்தது. எனது சிறுகதை ஒன்று ‘மண்ணின் மலர்கள்’ என்ற தலைப்பில் வெளியாகியிருந்தது. எழுதியவர் வண்ணநிலவன் என்று போட்டிருந்தது. அது வ.க.விடம் கொடுத்த கதைதான். வ.க.வே எனக்குப் புனைபெயர் சூட்டி அதைச் சாந்தி பத்திரிகைக்கு அனுப்பிப் பிரசுரிக்கச் செய்திருந்தார்கள். இது நடந்தது 1970 செப்டம்பரில். அன்றுமுதல் வண்ணநிலவன் என்ற பெயரில் எழுத ஆரம்பித்தேன்.

**திருநெல்வேலியிலிருந்து புலம் பெயர்ந்த பிறகான வாழ்வனுபவங்கள் பற்றிச் சொல்லுங்கள்?**

ப : திருநெல்வேலியிலிருந்தால் முன்னேற முடியாது என்று தோன்றியது. எஸ்.எஸ்.எல்.சி.யில் மார்க் மிகக் குறைவு. வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஒரு இண்டர்வியூ கார்டு கூட வரவில்லை. அக்கால இளைஞர்களைப் போல் டைப் ரைட்டிங் பயிற்சிக்குச் செல்வதற்கான வசதி இல்லை. கடைசியாகப் பாளையங்கோட்டையில் பார்த்த வக்கீல் குமாஸ்தா வேலையில் இரண்டு நேரம் சாப்பாடு போக முப்பது ரூபாய்தான் சம்பளமாகக் கிடைத்தது. துணிமணி வாங்கக்கூட வழியில்லை. செல்வக்குமார் வீட்டில் கொடுத்த வேஷ்டியும், கல்யாணி கொடுத்த சட்டைகளும் தான் என்னிடமிருந்த சொத்து. இது தவிர சொந்த வாழ்வில் ஏற்பட்ட சில இழப்புகளும் ஊரை விட்டுக் கிளம்பக் காரணமாக இருந்தன.

சென்னையில் தி.க.சி., எனது உறவினரான பாப்பையா அண்ணாச்சி, நம்பிராஜன் மூவருக்கும் கடிதம் எழுதிப் போட்டு விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டு விட்டேன். சென்னைக்கு அப்போது திருநெல்வேலியிலிருந்து 16 ரூபாய் டிக்கெட். இந்தத் தொகையை கல்யாணியிடம் கேட்டால் கொடுத்து உதவியிருப்பார். ஆனால், கேட்கவில்லை. கையில் இருந்த நான்கு ரூபாயை எடுத்துக் கொண்டு மதுரைக்கு ரயிலேறினேன். மதுரைக்கு மூன்றேகால் ரூபாய்தான் ரயில் சார்ஜ். மதுரை மேலமாசி வீதியில் ஒரு சித்தப்பா இருந்தார்கள். அந்தச் சித்தப்பாதான் எனக்கு எஸ்.எஸ்.எல்.சி. இறுதித் தேர்வு எழுத பீஸ் கட்டி உதவியவர்கள். அவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு சென்னைக்குப் போகலாம் என்று முடிவு செய்து மதுரைக்குப் போனேன்.

சித்தப்பா வீட்டில் இரண்டு மூன்று நாட்கள் இருந்தேன். சித்தப்பா பதினைந்து ரூபாய் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொண்டு 1973 ஜூன் 21ஆம் தேதி சென்னைக்குப் பாண்டியன் எக்ஸ்பிரஸில் ஏறினேன். ரயில் ஏற மங்கம்மா சத்திரத்துக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது கவிஞர் பரிணாமனைப் பார்த்தேன்.

கவிஞர் பரிணாமனை ஏற்கெனவே ஒரு முறை, மதுரையில் நா. வானமாமலை வெளியிட்ட ‘புதிய முளைகள்’ என்ற சிறுகதைத் தொகுப்பு விழாவில் காலேஜ் ஹவுசில் வைத்துச் சந்தித்திருக்கிறேன். புதிய முளைகள் சிறுகதைத் தொகுப்பில் என்னுடைய சிறுகதையும் இருந்தது. தொகுப்புக்கு அட்டைப்படம் கல்யாணி வரைந்து கொடுத்தார். வெளியீட்டு விழாவுக்கு திருநெல்வேலியில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றிய பா.ஜெயப்பிரகாசத்தின் அலுவலக ஜீப்பில் ஜே.பி.யுடன் நானும், கல்யாணி, கலாப்ரியாவும் சென்று வந்தோம்.

பரிணாமன் டீ வாங்கிக் கொடுத்தார். இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப்

பிரிந்தோம். நான் பாண்டியனில் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். நம்பிராஜன், அப்போது கவிஞர் நா.காமராஜன் நடத்திவந்த 'சோதனை' பத்திரிகையில் சேர்ந்திருந்தார். நா.கா.வின் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

அவருடன் ராம.சுப்பையாவும் தங்கியிருந்தார். ராம.சுப்பையாவும் ஆசிரியர் குழுவில் ஒருவர். ராம. சுப்பையா மைலாப்பூர் நல்லியில் வேலை பார்த்து வந்தார். கோடை விடுமுறைக்காக நா.கா. குடும்பத்துடன் ஊருக்குச் சென்றிருந்தார். சோதனை அலுவலகமான நா.கா.வின் வீடு லாயிட்ஸ் ரோட்டில், லாயிட்ஸ் காலனிக்கருகே இருந்தது. (அந்த வீடு இருந்த இடத்தில் இப்போது அபார்ட்மெண்ட் வந்துவிட்டது).




எக்மோர் ஸ்டேஷனில் இறங்கும்போது சட்டைப் பையில் ஒரு ரூபாய் முப்பது பைசாதான் இருந்தது. அப்போது அது பெரிய தொகைதான் எனக்கு. ஒரு ரூபாய்க்கு மதியச் சாப்பாடே ஹோட்டலில் சாப்பிடலாம். டீ பத்து பைசாதான். நா.கா. வீட்டு முகவரியை விசாரித்தபோது, எக்மோரிலிருந்து 23பியில் சென்றால் லாயிட்ஸ் ரோடு போகலாம் என்றார்கள். 23பி ஏறி லாயிட்ஸ் ரோட்டில் இறங்கினேன். நா.கா.வின் வீடு மாடியில் இருந்தது. வீட்டைக் கண்டுபிடித்து மாடி ஏறினேன். அப்போது ஒருவர் மாடியி லிருந்து இறங்கிக் கொண்டிருந் தார். எதிரேவந்த என்னை விசாரித்தார். நான் விபரத்தைச் சொன்னதும் "வீடு பூட்டிக் கிடக்கிறது. நம்பிராஜன் வெளியே போயிருக்கிறார் போல. என்னுடன் என் வீட்டுக்கு வாருங்கள்" என்று அழைத்துச் சென்றார். அவர்தான் பாலகுமாரன். பாலகுமாரனுடைய வீடு பக்கத்திலிருந்த டீச்சர்ஸ் காலனியில் இருந்தது.

பாலகுமாரன் என்னைக் குளிக்கச் சொன்னார். இருவரும் சாப்பிட்டோம். பாலகுமாரனைப் போலவே அவரது அம்மா, தங்கை, தம்பி எல்லோரும் ரொம்பப் பிரியமாக இருந்தார்கள். சிறிதுநேரம் கழித்து பாலகுமாரன் அலுவலகத்துக்குப் புறப்பட்டார். நான் என் துணிப் பையைத் தூக்கிக் கொண்டு மீண்டும் நா.கா. வீட்டுக்கு வந்தேன். நம்பி, ராம.சுப்பையா இருவருமே இருந்தார்கள்.

சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தபின் நம்பிராஜன் என்னை அழைத்துக் கொண்டு தி.க.சி.யைப் பார்க்கக் கிளம்பினார். தி.க.சி. வேலை பார்த்த சோவியத் நாடு அலுவலகம் தி. நகர் தியாகராய ரோட்டில் (பாண்டிபஜாரின் கிழக்குப் பகுதி) இருந்தது. தி.க.சி. எங்களை உற்சாகமாக வரவேற்றார்கள். இருவரையும் உடனே செக்ரட்டேரியட் சென்று கந்தர்வனைச் சந்திக்குமாறு கூறி, கந்தர்வனுக்கு ஒரு கடிதமும், செலவுக்குப் பணமும் கொடுத்து உதவினார்கள். நம்பி என்னை அழைத்துக் கொண்டு செக்ரட்டேரியட் வந்தார். தேடி விசாரித்து கந்தர்வனைப் பார்த்தோம். அவர் உடனே ராம.கண்ணப்பனைச் சந்திக்குமாறு கூறினார். அப்போதுதான் 'கண்ணதாசன்' மாத இதழ் மீண்டும் வெளிவர ஆரம்பித்திருந்தது. ராம.கண்ணப்பன்தான் பொறுப்பாசிரியர். கண்ணதாசனில் வேலைக்குச் சேரலாம் என்று கந்தர்வன் சிபாரிசு செய்தார்.

ராம.கண்ணப்பன் கவிஞர் கண்ணதாசனின் தம்பி. கவிஞரு டனேயேதான் எப்போதும் இருப்பார். பகல் பூராவும் ஸ்டுடியோக்களில் இருப்பார். சாயந்திரம் பாண்டி பஜார் அருகே ராஜாபாதர் தெருவின் எதிரே இருந்த ஆந்திரா கில்லி ஷாப்பில் (இந்தக் கடை இப்போதும் இருக்கிறது) கண்ணப்பனைச் சந்திப்பது எளிது என்றார் கந்தர்வன். அவர் சொன்னபடியே இரவு ஏழு மணி சுமாருக்கு கண்ணப்பனிடம் என்னை நம்பிராஜன் அழைத்துச் சென்றார். விஷயத்தைச் சொன்னோம். நாளைக்கே வேலைக்கு வந்து விடுங்கள் என்றார் கண்ணப்பன்.

இப்படித்தான் கண்ணதாசனில் முதல் முதலாக வேலைக்குச் சேர்ந்தேன். அப்போது கண்ணதாசன் அலுவலகம் பிராட்வே பிரான்ஸிஸ் ஜோசப் தெருவில் இருந்தது. கண்ணதாசனை நடத்தியவர் ராமச்சந்திர ரெட்டியார் என்பவர். இவர்தான் 'பிலிமாலயா' என்ற சினிமா மாத இதழையும் (ஆசிரியர் பஞ்சு அருணாசலம்), வேறு இரண்டு தெலுங்குப் பத்திரிகைகளையும் நடத்தினார். எல்லா அலுவலகங்களும் ஒரே இடத்தில் இயங்கி வந்தன. 1974 ஜனவரி பொங்கல் மலருடன் கண்ணதாசன் நின்றுவிட்டது. 150 ரூபாய் சம்பளமும் போய் விட்டது.

ராம.கண்ணப்பன் கண்ணதாசனிடம் சொல்லி அவருடைய கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் அலுவலகத்திலேயே எனக்குத் தங்குவதற்கும் வசதி செய்து கொடுத்திருந்தார். கண்ணதாசன் புரொடக்ஷன் அலுவலகம் ஆழ்வார்பேட்டையில் ராணி சின்னம்மா ரோட்டில் இருந்தது. இப்போது பிரபலமான வி.டி. என்கிற சினிமா எடிட்டர் அப்போது எங்களுடன் தங்கியிருந்தார். அவரை நாங்கள் 'விஜி' என்று அழைப்போம். அவரது சொந்த மாநிலம் கேரளா. அவரது அண்ணன் கருணாநிதியின் பூம்புகார் பிக்சர்ஸில் டிரைவராக வேலை பார்த்தார். கண்ணதாசன் நின்றுவிட்டாலும் மேலும் சில வாரங்கள் கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் ஆபீஸிலேயே இருந்து வந்தேன். மீண்டும் வேலை தேடும் படலம்.

அகிலன் கண்ணன் எனக்கு நல்ல பழக்கம். அவர் கஸ்தூரி ரங்கனிடம் பேசி என்னைக் 'கணையாழி'யில் சேர்த்து விட்டார். அதே 150 ரூபாய் சம்பளம். 'கணையாழி' அலுவலகம் கிரிக்கெட் ஸ்டேடியத்துக்கு எதிரே சேப்பாக்கத்தில் பெல்ஸ் ரோட்டில் இருந்தது. நான் ஸ்டார் டாக்கீஸ் எதிரே என் அண்ணாச்சி பாப்பையா அவர்களின் உதவியுடன் ஒரு லாட்ஜில் குடியேறினேன்.

சோதனை மூன்றே மூன்று இதழ்கள் தான் வந்தது. அதனால் நம்பிராஜன் வாசுதேவ நல்லூருக்குச் சென்று விட்டார். நான் கணையாழியில் சேர்ந்த போது அவர் மீண்டும் சென்னைக்கு வந்து வேலை தேடினார். கவிஞர் நாரா. நாச்சியப்பனின் அச்சகம் திருவல்லிக்கேணி ஜானிஜான்கான் ரோட்டில் இருந்தது. அங்கே புரூப் ரீடராக நம்பிக்கு வேலை கிடைத்தது. கணையாழி வேலை ஒத்துவரவில்லை. 1974 மார்ச்சில் கணையாழியில் சேர்ந்தேன். ஜூனில் வேலையை விட்டுவிட்டேன். பெங்களூரில் என் நண்பன் ரவி பாரத் எலெக்ட்ரானிக்ஸில் வேலை பார்த்து வந்தான். அங்கே ஏதாவது வேலை தேடலாம் என்று பெங்களூர் சென்றேன்.

எங்கே சென்றாலும் நண்பர்களுடன் கடிதத்தொடர்பு இருந்தது. பெங்களூரில் ரவியுடன் இரண்டு மாதம் இருந்தேன். வேலையும் கிடைக்கவில்லை. அப்போது பாண்டிச்சேரியிலிருந்து பிரபஞ்சன் கடிதம் எழுதி, என்னை உடனே வரச்சொல்லியிருந்தார். ஒரு தினசரிப் பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார்கள், அதில் வேலை இருக்கிறது என்று எழுதியிருந்தார். ரவி என்னை பெங்களூரிலிருந்து பாண்டிச்சேரிக்கு அதிகாலை ஆறு மணி பஸ்ஸில் ஏற்றிவிட்டான். பாண்டிச்சேரி வரும்போது இரவு ஏழு மணி ஆகிவிட்டது. ஒரே மழை. பிரபஞ்சன் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தேன். இரவு அவர் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டு அவருடன் படுத்துத் தூங்கினேன்.

காலையில் என்னை 'வண்ணங்கள்' என்ற சிறு பத்திரிகையை நடத்திவந்த சொக்கு சுப்பிரமணியம் என்ற நண்பரிடம் வைத்தி (பிரபஞ்சன்) அழைத்துச் சென்றார். சொக்கு சுப்பிரமணியத்தின் நண்பரான எம்.பி.ஜான் என்பவர் புதுவைக் குரல் என்ற தினசரியைத் தொடங்கி யிருந்தார். அதில் சொக்கு சுப்பிரமணியம் என்னைச் சேர்த்து விட்டார். அது நான்கே பக்கங்களைக் கொண்ட மாலை தினசரி. செய்திகளை மொழி பெயர்ப்பது, புரூப் பார்ப்பது எல்லாம் நான்தான். எப்படியோ வண்டியை ஓட்டிக் கொண்டிருந் தேன். என் துரதிருஷ்டம் புதுவைக் குரலும் நிறுத்தப் பட்டது. 1974 ஆகஸ்ட் முதல் 1975 மார்ச் வரை புதுவைக் குரலில் வேலை பார்த்தேன். பிறகு பாண்டிச்சேரியை விட்டு ஊருக்கே சென்று விட்டேன்.




1975 ஜூன் வாக்கில் தி.க.சி. சென்னை யிலிருந்து 'அன்னை நாடு' என்ற காங்கிரஸ் தினசரியில் வேலை இருக்கிறது, வாருங்கள் என்று எழுதியிருந்தார்கள். கல்யாணி சென்னை செல்லப் பணம் தந்தார். மீண்டும் சென்னை வாசம். அன்னை நாட்டில் உதவி ஆசிரியர் வேலை. மலர்மன்னன்தான் ஆசிரியர். செய்திகளை மொழிபெயர்க்க வேண்டிய வேலை. அன்னை நாடு வேலை டிசம்பர் வரை ஓடியது. அன்னை நாடும் நின்றுவிட்டது.

தி.க.சி.யின் வீட்டிலும், நண்பர்கள் வீட்டிலுமாகச் சாப்பிட்டுக் கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தேன். நண்பர் ஜெயபாரதியை சென்னைக்கு வந்த காலம் முதலே தெரியும். ஒரு



நாள் ஜெயபாரதியும் நானும் ராயப்பேட்டையிலிருந்த ஒரு பிரிவியூ தியேட்டரில் பி.வி.காரந்தின் 'சோமன துடி' படம் பார்க்கச் சென்றோம். படத்துக்கு வந்திருந்த ருத்ரய்யாவை எனக்கு ஜெயபாரதி அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின் ஜெயபாரதியும் நானும் அடிக்கடி ருத்ரையாவைச் சந்தித்து வந்தோம். ருத்ரையா மூலம் அனந்து பழக்கமானார்.

எல்லோரிடமும் புலம்புவது போல் அனந்து சாரிடமும் வேலை இல்லாமலிருப்பதைப் பற்றிப் புலம்பினேன். (இந்த அனந்துதான் டைரக்டர் பாலசந்தரின் உதவியாளர்). ஊருக்கே திரும்பிப் போய் விடலாம் என்று இருக்கிறேன் என்றேன். அனந்து சார் என்னை, ஒரே ஒரு வாரம் மட்டும் இருக்கச் சொன்னார். வேலைக்கு முயற்சிப்போம். முடியாவிட்டால் நானே உங்களை ரயில் ஏற்றி அனுப்பி வைக்கிறேன் என்றார். அவரது சினிமா கம்பெனியின் ஆர்ட் டைரக்டர் ராமசாமி. இதே ராமசாமிதான் சோவின் நாடகக் குழுவுக்கும் ஆர்ட் டைரக்டர். அந்த ராமசாமியிடம் 'துக்ளக்'கில் ஏதாவது வேலையில் சேர்த்து விடும்படி அனந்து சார் கேட்டுக் கொண்டார். ஏதோ என் நல்ல நேரம் அப்போது 'துக்ளக்'கில் புரூப் ரீடர் வேலை காலியாக இருந்தது. எனக்கு அந்த வேலை கிடைத்தது. 1976 ஜூனில் துக்ளக்கில் வேலைக்குச் சேர்ந்தேன்.

பதின்மூன்று ஆண்டுகள் துக்ளக்கில் உதவி ஆசிரியராக வேலை பார்த்தேன். நியூரோஸிஸ் என்ற நோய் வந்து வேலையை விட்டுவிட்டேன். மீண்டும் மூன்று நான்கு ஆண்டுகள் வீட்டில் பொழுதைப் போக்கினேன். 1993 ஜூனில் சுபமங்களாவில் வேலை கிடைத்தது. ஆனால், சுபமங்களாவும் 1995 டிசம்பருடன் நின்றுவிட்டது. இப்போது துக்ளக்கில் ரீடெய்னராக பணிபுரிகிறேன்.

**சென்னை வாழ்க்கை உங்களுக்குக் கற்றுக் கொடுத்தது என்ன?**

நிறைய பத்திரிகைத் தொழில் சம்பந்தமாக, குறிப்பாக எழுத்து சம்பந்தமாக நிறையத் தெரிந்து கொண்டேன்.

**கிராமம் நல்லவர்களைக் கொண்டதாகவும், நகரம் கெட்டவர்களைக் கொண்டதாகவும் பொதுப் புத்தியில் உறைந்துள்ள கருத்து சரியானது தானா?**

தவறு. நல்லவர் - கெட்டவர் என்பது கிராமம், நகரம், இனம், மொழி, ஜாதி, நாடு எவை சார்ந்தும் இல்லை. முழுக்க முழுக்க நல்லவர் என்றோ, கெட்டவர் என்றோ யாரும் இல்லை. இரண்டும் கலந்த கலவைதான் மனிதர்கள்.

**அன்பும் குரோதமும் வெறுப்பும் எல்லாம் கலந்த உங்கள் எழுத்தில் அன்புக்கு மட்டும் அதிக முக்கியம் வருகிறது. கிறித்துவ வாழ்க்கை முறை உங்களுக்குள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதோ?**

எனது மொழிநடையில் கிறிஸ்தவ வேதமான பைபிளின் தாக்கம் 'கடல்புரத்தில்' நாவலிலும், 'எஸ்தர்' போன்ற சிறு கதைகளிலும் உண்டு. பாளையங்கோட்டையில் படித்த காலத்திலிருந்தே பல கிறிஸ்தவ நண்பர்கள் எனக்குப் பழக்கம். குடும்ப வறுமை காரணமாக என் நண்பன் ரவியின் குடும்பத்தில் அவர்கள் வீட்டுப் பிள்ளை போலவே இருந்திருக்கிறேன்.

எனது கதைகள் அன்பைப் பற்றி மட்டும் பேசவில்லை. பல்வேறுவிதமான மானுட

குணங்களையும் என்னால் இயன்றவரை படைப்புகளில் கொண்டுவர முயற்சி செய்திருக்கிறேன்.

**'கடல்புரத்தில்', 'கம்பா நதி' நாவல்களை 80களில் நான் படித்தபோது இருந்த fressnessஐ இப்போதும் அனுபவித்தேன். மேலும் அப்போது புரிபடாத வாழ்வின் அபாயங்கள், கவனங்களை இப்போது என் வாழ்வின் ஊடே உணர்கிறேன். அப்போதே எப்படி வாழ்வின் உண்மைகளை உணர்ந்தீர்கள்?**

ஏராளமான சிறுகதைகள், நாவல்களைப் படித்ததுதான் காரணம். கல்கியின் நாவல்களை என் பால்ய காலத்தில் படித்தேன். அவரது நாவல்களில் உள்ள கதாபாத்திரங்களின் குணச்சித்திரங்கள் இன்றும் பசுமையாக அப்படியே நினைவில் உள்ளன. இலக்கியத்தின் பக்கம் வந்தால் புதுமைப் பித்தனிடமும் இந்தத் திறமை இருக்கிறது. ஜெயகாந்தனின் கதாபாத்தி ரங்கள் தனித்துவமானவை. கு.ப.ரா.வின் நூருன்னிஸா, 'ஆற்றாமை' கதைகளில் வருகிற மென்மையான உணர்வுகள் படிக்கும்போது நம்மைத் தொற்றிக் கொள்கின்றன.



கதைகளின் வழியாகவும் உலகத்தைப் பார்க்கிறோம். நமது நேரடி அனுபவங்களின் மூலமாகவும் உலகத்தைப் பார்க்கிறோம். புஸ்தகங்கள், நேரடி அனுபவங்கள் இவைதான் நம்மைப் பட்டை தீட்டுகின்றன. உலகத்தைப் புரிய வைக்கின்றன.

**ஒரு சிறுகதை, ஒரு நாவல், ஒரு கவிதை உங்களிடம் எப்படி உருவாகிறது? அதன் படிநிலை (Process) பற்றி விளக்க முடியுமா?**

ஏராளமான படைப்புகளைப் படித்துப் படித்து மனம் ஒருவிதமான மொழிசார்ந்த தளத்தில் பக்குவமாக இருக்கிறது. இதனுடன் நமது சொந்த அனுபவங்கள் சேரும்போது படைப்பு வெளியாகிறது என்று நினைக்கிறேன்.

என்னுடைய முதல் சிறுகதையான 'மண்ணின் மலர்கள்' என்ற சிறுகதை, சாலையோர மரம் ஒன்று வெட்டப்படுவதைப் பற்றியது. இது ஒரு உண்மைச் சம்பவம். பாளையங்கோட்டையில் முருகன்குறிச்சி பஸ் நிறுத்தத்தில் பலருக்கும் நிழல் தந்த மரத்தை எதனாலோ வெட்டினார்கள். அது எனக்குக் கஷ்டமாக இருந்தது. அந்த மனநிலையைத்தான் சிறுகதையாக எழுதினேன்.

குலசேகரன்பட்டிணம், உடன்குடியில் இருந்தபோது சில மீனவர்களைத் தெரியும். குலசேகரன்பட்டிணத்தில் அடிக்கடி கடற்கரைக்குச் செல்வேன். குலசேகரப் பட்டிணத்தை விட்டு பாளையங்கோட்டைக்கு வந்த பிறகு தினமலர் நாளிதழில், திருச்செந்தூர் அருகே உள்ள வீரபாண்டியன் பட்டிணத்தில் இயந்திரப் படகுக்காரர்களுக்கும், கட்டுமரத்துக்காரர்களுக்கும் ஏற்பட்ட மீன்பிடிக்கும் போட்டியில் கொலைகள் விழுந்தன என்ற செய்தியைப் படித்தேன். கடல்புரத்தில் நாவல் எழுதத் தூண்டியது அந்தச் சிறு செய்திதான். பிலோமி, வாத்தி, செபஸ்தி, குரூஸ் மைக்கேல் என்று கதாபாத்திரங்கள் தானாகவே மனதில் உருவாகின.

ஒருமுறை திருநெல்வேலியிலிருந்து பாணடிச் சேரிக்குப் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். அப்போது மாநிலமெங்கும் கடும் வறட்சி நிலவியது. கிராம மக்கள் குடும்பம்குடும்பமாக வேலை தேடி ஊர்விட்டு ஊர்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். இதுதான் எஸ்தர், மிருகம் ஆகிய சிறுகதைகளின் பொறி.

'காலம்' நாவல் எனது வக்கீல் குமாஸ்தா, கோர்ட் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியது. எழுதுவதற்கு ஏதோ ஒரு பொறி தேவைப்படுகிறது. அதை ஊதி ஊதிப் பெரிதாக்குகிறான் எழுத்தாளன்.

**அன்பும், மென்மையும், தீவிரமும் கொண்ட எழுத்துக்களை எழுதிய நீங்கள் 'துர்வாசர்' ஆகி தார்மீகக் கோபம் கொண்ட எழுத்துக்களை எழுதத் தூண்டியது எது?**

துக்ளக்கில் ஆரம்ப காலத்திய சினிமா விமர்சனங்களை இயக்குனர் மகேந்திரன் எழுதி வந்தார். நான் துக்ளக்கில் சேர்ந்த பிறகு சினிமா விமர்சனங்களை எழுதும் வாய்ப்பை எடிட்டர் என்னிடம் கொடுத்தார். என்னுடைய மயான காண்டம், யுகதர்மம் போன்ற ஆரம்ப காலத்துச் சிறுகதைகளில் கிண்டலும், கோபமும் உண்டு. அந்தக் கிண்டல், கோபத்தை சினிமா விமர்சனப் பகுதியில் காட்டினேன்.

பிறகு நான் தனிக்கட்டுரைகளை எழுதலாம் என்று ஆசிரியர் கூறினார். அப்போது எடிட்டர் எனக்கு 'துர்வாசர்' என்ற பெயரை வைத்தார். துர்வாசர் என்ற பெயரில் நான் துக்ளக்கில் எழுதிய கட்டுரைகள் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

**80களில் எனக்கு வெங்கட்சாமிநாதனின் 'பாலையும் வாழையும்', 'கலை வாழ்க்கை அனுபவம் வெளிப்பாடு' முதலிய நூல்கள் பல நூல்களைத் தேடிப் படிக்கத் தூண்டுவதாகவும், ஓவியம் மீதான ஈடுபாட்டையும், விமர்சனப் பார்வையையும் உருவாக்கிக் கொள்ள உதவியது. 70, 80களின் இலக்கியச் சூழல் எப்படி இருந்தது?**

எழுபது, எண்பதுகளில் இப்போது உள்ளதைப் போல் அந்த நாட்களிலும் தீபம், கணையாழி, தாமரை, எழுத்து, கசடதபற, அஃ, வானம்பாடி, ஞானரதம், சதங்கை, தெறிகள், பிரக்ஞை என்று ஏராளமான சிற்றிதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன. சுதேசமித்திரன் ஆண்டுதோறும் வெளியிட்ட தீபாவளி மலர்கள் கூட இலக்கியத்தரமாக இருந்தன. இடதுசாரி மனோபாவம் கொண்டவர்கள் முற்போக்கு இலக்கியம், பிற்போக்கு இலக்கியம் என்று கூறிவந்தனர். இன்று பிரபல மார்க்ஸிய விமர்சகராக அறியப்படுகிற கோவை ஞானி வானம்பாடியில் எழுதிய 'கல்லிகை' என்ற நெடுங்கவிதையின் மூலம் இலக்கிய உலகத்துக்கு அப்போதுதான் அறிமுகமானார்.

இடதுசாரி இலக்கியத்துக்கென்று 'தாமரை', 'செம்மலர்', கோவை ஈஸ்வரனின் 'மனிதன்', இளவேனிலின் 'கார்க்கி', கே.எம். வேணுகோபாலின் 'சிவந்த சிந்தனை', 'வானம்பாடி', புதிய தலைமுறை, உதயம் முதலான பல பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆர்.ராஜேந்திரசோழன் 'அஸ்வகோஷ்' என்ற பெயரில் செம்மலரிலும், உதயத்திலும் பிரச்சார வாடை வீசாத பல அற்புதமான சிறுகதைகளை எழுதி வந்தார். ஆர்.ராஜேந்திரசோழன் தொடர்ந்து கதைகள் எழுதாமல் போனது ஒரு பேரிழப்புதான். அவரை அசோகமித்திரன் 'Promising Writer' என்று பாராட்டியிருக்கிறார். இதேபோல் பிரக்ஞையிலும், கணையாழியிலும் அற்புதமான சிறுகதைகளை எழுதிய சிவசங்கரா, ஆர்.பழனிவேலு போன்றோர் பின்னால் எழுதாமல் போய்விட்டார்கள்.

இந்த இடதுசாரி இதழ்களில உதயமும், பிரக்ஞையும் தீவிரமான இடதுசாரி அரசியல், இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை வெளியிட்டன. தாமரையும், செம்மலரும் இன்றுபோல் அன்றும் வலது இடது கம்யூனிஸ்ட் ஆதரவு இலக்கியப் பத்திரிகைகளே. இதனுடன் இலங்கையிலிருந்து வெளிவந்த டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை' என்ற பத்திரிகையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் மல்லிகையைவிட 80களில் இலங்கையிலிருந்து வெளியான 'அலைகள்' பத்திரிகை மிக முக்கியமான சிற்றிதழ். சிறிகனகரட்ணா என்ற அற்புதமான இடதுசாரி விமர்சகரின் கட்டுரை அலைகளில்தான் படித்தேன்.

கைலாசபதியின் கட்டுரைகள் அப்போதே புத்தகமாக வெளிவந்து விட்டது. கா.சிவத்தம்பியும் அப்போது நூல்களை எழுதியிருக்கவில்லை என்றாலும், தனது கட்டுரைகளின் மூலம் தமிழகத்தில் பரிச்சயமாகி இருந்தார். இது இடதுசாரி இயக்கத்தின் சூழல்.

வலதுசாரி இலக்கியம் என்பது தெளிவாக வரையறுத்து விடமுடியாது. ஆனால், க.நா.சு., சி.சு.செல்லப்பா, வெங்கட்சாமிநாதன் போன்ற விமர்சகர்கள் தங்களது கட்டுரைகளின் மூலம் இலக்கியத்தில் உணர்ச்சிக்கும், கலாபூர்வமான அழகியலுக்கும் அதிக அழுத்தம் தந்து எழுதினர். புதுக்கவிதையை இயக்கமாக வளர்த்தெடுத்த பெருமை க.நா.சு.வுக்கும், செல்லப்பாவுக்குமே உண்டு. க.நா.சு. பண்டித மனோபாவத்தை எதிர்த்த மாதிரி, வெங்கட்சாமிநாதன் திராவிட, இடதுசாரி மனோபாவத்தை இலக்கியத்தில் எதிர்த்தார்.

இலங்கையில் மு.தளையசிங்கம் தனது போர்ப்பறை, மெய்யுள் முதலான கட்டுரைத் தொகுதிகளில் இடதுசாரி இலக்கியத்தைச் சாடினார். இலக்கியத்திலும், தத்துவச் சிந்தனையிலும் 'நற்போக்கு' என்ற கருத்தை வலியுறுத்தினார். அவரது சிந்தனை கொஞ்சம் வறட்சியானதுதான் என்றாலும், தளையசிங்கம் மிக முக்கியமான பாதிப்பை அங்கு ஏற்படுத்தியவர். வறட்சி தட்டாத, கலைக்கு அழுத்தம் கொடுத்த இடதுசாரி விமர்சகர்களில் சிறிகனரட்ணாதான் முக்கியமானவர் என்று எனக்குப் படுகிறது.

சி.சு.செல்லப்பாவின் கட்டுரைகள் கூட வறட்சியானவைதான். ரொம்ப டெக்னிக்கலாக செல்லப்பா இலக்கியத்தைக் கல்லூரிப் பேராசிரியர் மாதிரி அணுகுவார். ஆனால், வெங்கட்சாமிநாதன் அப்படியல்ல. அவரது எழுத்தில் வறட்டுத்தனம் தலைகாட்டாது.

க.நா.சு.வின் படித்திருக்கிறீர்களா? தொகுதிகள், இலக்கிய விசாரம் இம்மூன்றும் மிக முக்கியமானவை. இலக்கிய விசாரத்தில், எழுத்தாளன் சோதனை முயற்சிகளைச் செய்து பார்க்க வேண்டும் என்று கூறியிருப்பார். இது எனக்கு வேத

வாக்காயிற்று. எனது சிறுகதை, நாவல்களில் பல்வேறுவிதமான நடை, உருவ சோதனைகளைச் செய்து பார்த்திருக்கிறேன். இதற்குக் க.நா.சு. தான் காரணம். வறட்சியைப் பற்றிய சிறுகதைகள்தான் எஸ்தரும், மிருகமும். ஆனால், இரண்டிலும் வித்தியாசமான மொழிநடை, உருவங்களைக் கையாண்டிருக்கிறேன். பாம்பும் பிடாரனும் போன்ற சில சிறுகதைகள் வித்தியாசமான நடையில் எழுதப்பட்ட சிறுகதைகள். கடல்புரத்தில் நாவலில் மேலோங்கி நிற்கும் உரைநடை பைபிள் உரைநடை.

வெங்கட்சாமிநாதன் 'மார்க்ஸின் கல்லறையி லிருந்து' என்று எழுதிய கட்டுரை அப்போது பரவலாகச் சர்ச்சிக்கப்பட்ட, பேசப்பட்ட கட்டுரை. நவீன நாடகம், ஓவியங்கள், சினிமா என்று வெ.சா., தனது கலையனுபவத்தை இலக்கியம் தாண்டி பிற கலைத் துறைகளுக்கும் விரித்திருக்கிறார்.

ஒரு நல்ல மிடில் மேகஸின் எப்படி இருக்கும் என்பதற்கு 70க்கள் வரையிலான தீபம் இதழ்களைச் சொல்லலாம். இதே தீபம் 80களில் வறட்டுத்தனமான சிறுகதைகள், கட்டுரைகளை வெளியிட ஆரம்பித்து விட்டது என்பது வேறு விஷயம். சில இதழ்களே வெளிவந்தாலும் அஃ ஒரு அருமையான இலக்கியச் சிற்றிதழ். அதன் விஷயத் தேர்வுகளிலும், வடிவமைப்பிலும் கலையம்சம் ஓங்கி நின்றது.

இதேபோல 'நடை'யும் சில இதழ்களே வெளிவந்தாலும், அதுவும் தனித்துவத்தோடு வெளிவந்து நின்றது. நடையைப் பின்பற்றி 'கசடதபற' வெளிவந்தது. ஜெயகாந்தனை ஆசிரியராகக் கொண்டு 'ஞானரதம்' வெளியானது. முதலில் கிரௌன் சைஸில் வெளியான ஞானரதம் பின்னர் ராயல் சைஸில் வெளியாக ஆரம்பித்தது. ஆறேழு ஆண்டுக்காலம் எழுதாமலிருந்த சுந்தர ராமசாமியின் சிறுகதை, நீண்ட இடை வெளிக்குப்பின் ஞானரதத்தில் வெளிவந்தது.

எழுபதுகளின் இறுதியில்தான் நவீன நாடகங்கள் மேடையேற ஆரம்பித்தன. 'கூத்துப் பட்டறை', ஞாநியின் 'பரீக்ஷா' போன்ற நாடக இயக்க முயற்சிகள் தோன்றின. பாதல் சர்க்கார் தமிழகத்துக்கு வந்தார். காந்தி கிராமத்தில் நாடகப் பயிற்சிப்பட்டறை நடந்தது. சினிமாத் துறையில் பிரக்ஞை நண்பர்கள் எழுபதுகளின் இறுதியில் 'பூர்வா' என்ற திரைப்படச்சங்கத்தைத் துவக்கினார்கள்.

சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவின் 'திக்கற்ற பார்வதி' பாபுநந்தன் கோடின் 'தாகம்', ருத்ரையாவின் 'அவள் அப்படித்தான்', ஜான் ஆபிரஹாமின் 'அக்கிரஹாரத்தில் கழுதை' போன்ற புதிய அலைத் திரைப்படங்கள் இதே 70, 80களில்தான் வெளிவந்தன. பூனா பிலிம் இன்ஸ்டிடியூட்டிலிருந்து சதீஷ் பகதூர் என்பவர் வந்து சென்னையில் சினி அப்ரிஷியேஷன் கோர்ஸ்களை நடத்தியதெல்லாம் இந்தக் காலக்கட்டத்தில்தான். கலை எழுச்சி மிகுந்த காலகட்டம் அது.

**இன்றைய தமிழ் இலக்கிய உலகில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டுவரும் ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன் முதலியவர்களின் எழுத்துக்கள் பற்றி,**

இருவருமே நிறைய எழுதி வருகின்றனர். இந்தத் தலைமுறை நான் லீனியர், பின் நவீனத்துவம் என்று பேசுகிறது. எஸ்.ராமகிருஷ்ணனும், ஜெயமோகனும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், க.நா.சு. கூறிய பரிசோதனை எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதை அறுபதுகளிலேயே நகுலன் செய்து பார்த்திருக்கிறார். அவரது 'நினைவுப்பாதை' தமிழின் மிக முக்கியமான நாவல். நேர்கோட்டில் சொல்லப்படாத சில சிறுகதைகளையும் நகுலன் எழுதிப் பார்த்திருக் கிறார். நகுலனுக்குப் பிறகு தமிழவனும் நேர்க் கோட்டில் சொல்லப்படாத நாவலை எழுதியுள்ளார். சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள் மிக வெற்றிகரமான, தமிழ் இலக்கியச் சூழலைப் பாதித்த முக்கியமான நாவல். இதுவும் மையம் அழிந்த எழுத்து வகையைச் சேர்ந்ததே. இந்த மரபைத்தான் தற்காலத்துக்கு ஏற்ப ஜெயமோகனும், எஸ். ராமகிருஷ்ணனும் செய்து வருகின்றனர்.

ஜெயமோகனின் 'பின்தொடரும் நிழலின் குரல்' மிக முக்கியமான நாவல். ஆனால், அவரது 'விஷ்ணுபுரம்' அலுப்பூட்டுகிறது. எஸ். ராமகிருஷ்ணன் 'ஷங்கண்ணா' என்ற பெயரில் பல அற்புதமான சிறுகதைகளை எழுதியுள்ளார். எஸ்.ராமகிருஷ்ணன் என்ற பெயரில் எழுதியுள்ள தற்காலச் சிறுகதைகளும் நன்றாக இருக்கின்றன. அவரது நாவல்கள் எதையும் என்னால் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை.

இருவருமே சினிமாத் துறையில் தொடர்ந்து செயல்பட முயற்சிக்கின்றனர். ஜெயமோகனை விட எஸ்.ராமகிருஷ்ணன் திரைப்படத் துறையில் அதிகமாகப் பங்கு பெறுகிறார். இருவரது திரைப்படப் பங்களிப்புகள் பற்றிப் பெரிதாகச் சொல்ல ஏதுமில்லை.

**70கள் 80களில் குறைவாக எழுதுவதே நல்ல எழுத்து என்ற போக்கு இருந்தது. இப்போது ஒரு எழுத்தாளர் 10 நூல்களை ஒரே சமயத்தில் வெளியிடுகிறார்களே?**

குறைவாக எழுதுவது நிறைய எழுதுவது என்பது ஒரு விஷயமே அல்ல. எழுதியவற்றில்

கலாபூர்வமாக, இலக்கியபூர்வமாக எத்தனை தேறும் என்றுதான் பார்க்க வேண்டும். புதுமையான நடை, உருவ சோதனைகளில் எந்தளவுக்கு ஒரு ஆசிரியன் அல்லது கவிஞன் ஈடுபடுகிறான், அவற்றில் எத்தனை படைப்புகள் தேறுகின்றன, மொழியை அவனது படைப்புகள் எந்தளவுக்கு வளப்படுத்தியிருக் கின்றன என்பதையெல்லாம் தான் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நிறைய எழுதும்போது அழகுணர்ச்சி குன்றிப் போய், காலப்போக்கில் வறண்டுவிடும் ஆபத்து நிறைய உண்டு. 90 சதவீத எழுத்தாளர்களின் ஆரம்பகாலப் படைப்புகளில் உள்ள கலையுணர்வு, இறுக்கம், அழகு எல்லாம் போகப் போகக் காணாமல் போய்விடுகின்றன. வயதான காலத்தில் அவர்கள் எழுதும் எழுத்துக்களைப் படிக்கவே முடிவதில்லை. அந்தளவுக்கு வறட்டுத்தனமாகி விடுகிறது அவர்களுடைய எழுத்து. எனக்குத் தெரிந்தவரை மிகக் குறைவாக எழுதியதால் மௌனியின் சிறுகதைகள் அதன் அழியா இளமையுடன் இருக்கின்றன. இறுதி வரை தன்னைச் சட்டை உரித்துக் கொண்டு, வறண்டு போகாம லிருந்த ஒரே எழுத்தாளர் சுந்தர ராமசாமிதான். பெரும் பாலான, எழுதிய, எழுதிக் கொண்டிருக்கிற எழுத்தாளர் களின் எழுத்துக்களில் கிழடு தட்டிவிட்டது என்பதே உண்மை.




**காவேரிக்கரை எழுத்தாளர்கள், தாமிரபரணிக் கதை எழுத்தாளர்கள் முக்கியப் படைப்புக்களைத் தமிழுக்குத் தந்துள்ளார்கள். அவற்றுக்கும் நல்ல எழுத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?**

ஆற்று நாகரீகத்துக்கும் எழுத்துக்கும் பெரிய சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. பாரதி பிறந்த எட்டயபுரம், கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணனின் இடைசெவல் போன்ற ஊர்கள் வறண்ட கரிசல் பூமிதான். இந்த ஊர்களிலிருந்து இவர்கள் எழுதி பல படைப்புகளைத் தமிழில் தரவில்லையா?

நதிக்கரை என்பதைவிடச் சூழல்தான் மிக முக்கியம் என்று தோன்றகிறது.

**நேரடியான கதை சொல்லல் முறை மட்டுமே உங்களுக்குப் பிடித்தமானதா?**

இல்லை. தற்போது எழுதப்படும் நான்லீனியர் எழுத்தாளர்களின் படைப்புகளையும் படிக்கிறேன். ரசிக்கிறேன். சிலர் சற்று விரசமாக எழுதுகிறார்கள் என்பதைத் தவிர, மௌனியையும், நகுலனையும் விரும்பிப் படித்த மாதிரி, இன்று எழுதுகிற ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன், எம்.யுவன் போன்றோரின் நான்லீனியர் எழுத்துக்களையும் ரசித்துப் படிக்கிறேன்.

**உங்களுக்கு ‘துக்ளக்’ இதழில் வேலை வாங்கிக் கொடுத்த திரு. அனந்த் பற்றிப் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். உங்களுக்கும் அவருக்குமான உறவு எப்படியானது?**

‘அனந்து’ என்ற அனந்துசார் ஒரு பரோபகாரி. எனக்கு என்றில்லை பலருக்கும் அவர் உதவிக் கொண்டே இருந்தார். சிறிதுகூட சினிமா உலகின் பந்தா இல்லாதவர். மிக எளிமையான மனிதர். உலக சினிமாப் பற்றி அவரிடம் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருக்கலாம்.

‘அவள் அப்படித்தான்’ படத்தின் கதை விவாதத்தின் போது அவருடன் பல நாட்கள் கழித்திருக்கிறேன். அபாரமான கற்பனை வளம் அவரிடம் இருந்ததைக் கண்டு வியந்திருக்கிறேன். கவிஞர் கண்ணதாசனிடம் ஒரு வரி பிடிக்கவில்லை என்று சொன்னால் அந்த இடத்திலேயே மளமளவென்று வேறு வரிகளைச் சொல்லுவார். அந்த மாதிரி அனந்து சாரிடம் காட்சிகள் மளமளவென்று கொட்டும். ஒரு ஸீன் சரியில்லை என்று சொன்னால், உடனே சட்டென்று பல காட்சிகளை விவரிப்பார். நாம்தான் நமக்குத் தேவையானவற்றைப் பொறுக்கிக் கொள்ள வேண்டும்.

என் மீது அவருக்கு மிகுந்த பிரியம் இருந்தது. திருமணமான புதிதில் ஆதம்பாக்கத்தில் ஒரு மூலையில் வீடு வாடகைக்குப் பிடித்தேன். அவரது அலுவலக வேனிலேயே என்னையும், என் மனைவியையும் வீட்டுச் சாமான்களையும்

ஏற்றிக்கொண்டு ஆதம்பாக்கத்துக்கு வந்தார். ஆதம்பாக்கம் வீட்டை விட்டுத் திரும்பவும் சென்னை நகரத்துக்குள்ளேயே வர நேர்ந்தது. அப்போதும் அவர்தான் மந்தைவெளியில் எனக்கு ஒரு வீடு பார்த்துக் குடியேற்றி வைத்தார்.

ஒரு முறை நியூரோ சர்ஜன் டாக்டர் ராமமூர்த்தியைப் பார்க்க வேண்டியதிருந்தது. அனந்து சார்தான் ராமமூர்த்தியிடம் அப்பாயிண் மெண்ட் வாங்கித் தந்தார். வேலையின்றி இருந்த காலத்தில் தி.க.சி.யிடம் பல முறை உதவி பெற்ற மாதிரி அனந்து சாரிடம் பல தடவை நூறு, இருநூறு என்று பணம் வாங்கியிருக்கிறேன். அனந்து சார் செய்த உதவிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆச்சரியமான மனிதர் அவர்.

**பொதுவாக எந்த இலக்கியக் குழுக்களிலும் பொருத்திக் கொள்ளாத இயல்பை எப்படி அடைந்தீர்கள்?**

'குழு' என்பதைவிட ஒத்த கருத்துடைய வர்கள், சஹிருதயர்கள், நண்பர்கள் வட்டம் சாதாரண மனிதர்களுக்கு மத்தியில் கூட இருக்கிறது. அரசியல், சினிமா, எழுத்து போன்ற துறைகளில் இவை வெளிப்படையாகத் தெரிகிறது. தற்கால ஐ.டி. கம்பெனிகளில் 'டீம்' என்கிறார்கள். கூட்டமாகச் சேர்ந்து பணிபுரிவது என்பது சமுதாயப் பழக்கம். இது எல்லாக் காலங்களிலும் உள்ளதுதான். தவிர்க்க முடியாததும் கூட.

என்னைப் பொறுத்தவரை என் ஆரம்ப காலத்திலேயே தாமரையிலும் எழுதியிருக்கிறேன். தீபம், கணையாழியிலும் எழுதியிருக்கிறேன். ஒரு எழுத்தாளன் எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதலாம். ஒரு வட்டத்துடன் சுருக்கிக் கொள்ள வேண்டியதில்லை.

**இலக்கியக் கூட்டங்களைத் தவிர்த்து விடுகிறீர்கள். இதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதாவது உண்டா? பரிசுகளைக் கூடத் தவிர்த்து விடுகிறீர்கள் என்ற பேச்சும் உண்டு. பரிசுகள் மீதான உங்கள் அபிப்ராயம் என்ன?**

கூட்டங்களில் என்னால் பேச முடியாது. காரணம் எனக்குக் கோர்வையாகப் பேசவராது. பேசும்போது திக்குவாய் வந்துவிடுமோ என்று பயப்படுகிறேன். மேலும் பரிசுகள் தேர்வு செய்யப்படும் முறையும் யாரோ சிலரது விருப்பு வெறுப்புகளைச் சார்ந்துதான் உள்ளது. இலக்கியத்தை இலக்கியமாக மட்டுமே அணுகுவது என்பது இன்று எழுத்துலகில் அறவே இல்லை. காய்தல், உவத்தல் இன்றி நிர்ணயம் செய்து தரும் பரிசு, விருது என்பது உலகத்திலேயே இல்லை. இது ஒரு லட்சிய நிலைதான். ஞானபீட விருது தொடங்கி, ஆயிரம் ரூபாய் பரிசு வரை, ஆண்டுதோறும் நடத்தப் படும் பண்டிகை, திதி மாதிரி யாந்திரீகமாகத் தரப்படுகிறது.

பரிசு கொடுக்கும் எந்த அமைப்பாவது, இந்த ஆண்டு தகுதியான இலக்கியப் படைப்பு எதுவும் இல்லை என்று எந்த ஆண்டாவது பரிசு அல்லது விருது வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கிறதா? தரம், தகுதியான படைப்பு என்பதே ஒரு வட்டத்தின் ரசனைக்கு ஏற்பத்தான் அமைய நேரிடுகிறது. மேலும், பரிசு, விருதுகள் வாங்கினால் அதற்கு நன்றி தெரிவித்து, ஏற்புரை வழங்கும் சம்பிரதாயம் வேறு உலகத்தைப் பீடித்திருக்காது. இவை எல்லாம் எனக்கு ஒத்துவரவில்லை. அதனால் பெரும்பாலும் தற்போது பரிசுகள், விருதுகளைத் தவிர்த்து விடுகிறேன்.

என்றாலும், ஆரம்ப காலத்தில் இலக்கியச் சிந்தனைப் பரிசு, தமிழக அரசின் பரிசு, ராமகிருஷ்ண ஜெய் தயாள் மனிதநேய விருது போன்றவற்றைப் பெற்றிருக்கிறேன்.

**வண்ணதாசன், கலாப்ரியா, விக்கிரமாதித்யன் நட்பைத் தாண்டி அவர்களது எழுத்துக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மூவருமே தனித்துவமான எழுதும் பாணிகளைக் கொண்ட எழுத்துக் கலைஞர்கள். மூவர் மீதும் எனக்கு மதிப்பும், மரியாதையும் இருக்கிறது. கலாப்ரியா சமீப காலமாகத் தன் இளமையில் நடந்த சின்னச் சின்னச் சம்பவங்களைக் கூட நினைவில் வைத்து எழுதும் கட்டுரைகள் ரொம்ப நன்றாக இருக்கின்றன.

**'துக்ளக்' இதழில் பல வருசங்களாகப் பணிபுரிகிறீர்கள். 'சோ' பொதுமக்களிடையே நகைச்சுவை நடிகராகவே புகழ் பெற்றவர். ஆனால் கறாரான விமர்சனப்பார்வை கொண்ட விமர்சகராகவும் உள்ளாரே? 'சோ'வைப் பற்றிய உங்கள் பார்வை?**

அபாரமான அறிவுஜீவி. திறமைசாலி. நுணுக்கமான பார்வை கொண்டவர். அரசியல், சமூகம் சார்ந்து மட்டுமல்ல, மனித சுபாவங்களைப் பற்றியும் ஆழமான புரிதல் கொண்டவர். நாளைய அரசியல், சமூகம் எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே உணரும் உள்ளுணர்வு நிரம்பியவர்.

அவரது நாடகங்களிலும், விமர்சனக் கட்டுரைகளிலும் இழையோடும் நகைச்சுவை யுணர்வு முன்னுதாரணம் கூற முடியாதது. மிகுந்த தனித்துவமானது. அவரது விமர்சனங்களில் அலசல் போக்கு இருக்கிறது. அபாரமான உருவப் பிரக்ஞை

அவருக்கு உண்டு. அவர் வாராவாரம் எழுதும் தலையங்கக் கட்டுரை களிலேயே இதை நாம் உணர முடியும். எதையும் நுணுகி நுணுகி ஆராயும் திறமை அவரிடம் சர்வசாதாரணமாக, அவரது எழுத்தின் இயல்பாகவே உள்ளது.



சட்டத்தின் நுணுக்கங்கள், அதன் ஆழ, அகலங்களை அவரது கட்டுரைகளில் பார்க்க முடிகிறது.

எந்த ஒரு விஷயத்திற்கும் சட்டம், அரசியல், சமூகம் ஆகிய முப்பரிமாணங்கள் உண்டு. இந்த முப்பரிமாணங்களையும் சிக்கு சிடுக்கு இல்லாமல், தெளிவாக, ஸ்படிகம் போல் தன் எழுத்தில் வடிக்க முடிந்தவர் அவர். அறிவுஜீவி என்று யார் யாரையோ சொல்கிறோம். இவர் ஒரு முதல்தரமான அறிவுஜீவி.

அதேசமயம் இரக்கம் மிகுந்தவர். சிறந்த மனிதாபிமானி. கருணாநிதி, ஜெயலலிதா இருவருடைய அணுகுமுறைகளையும் கடுமையாக விமர்சித்திருக்கிறார். ஆனால், தனிப்பட்ட முறையில் யார் மீதும் பகையுணர்ச்சியோ, விரோதமோ துளிக்கூட இல்லாதவர். பிரகாசமான அறிவு, மனதை ஈர்க்கும் கருணை. இதுவே எடிட்டர்.

**'அவள் அப்படித்தான்' படத்திற்குப் பிறகு திரைப்படம் சார்ந்து நீங்கள் செயல்படவில்லை. உங்கள் திரைப்பட அனுபவங்கள் எப்படியானது?**

'அவள் அப்படித்தான்' திரைப்படத்தில் பணிபுரிய நேர்ந்தது தற்செயலானது. நண்பர் ருத்ரையாவின் சொந்தப் படம் என்பதால் என்னையும் வசனம் எழுதச் சொன்னார். அவ்வளவுதான். சினிமாவில் பணிபுரிவது என்னுடைய இயல்புக்கு ஒத்து வராது.

**திரைப்படங்கள் பற்றிய உங்கள் பார்வை என்ன?**

திரைப்படங்களைத் தூர விலகியிருந்து நம்மைப் போன்றவர்கள் பார்த்து ரசிக்கலாம். ஆனால், திரைப்படத் தயாரிப்பில் பங்கு பெறக் கூடாது. நம் மனதுக்கு விரும்பிய கதையை ஒழுங்காக எழுதுவதே கடினமாக இருக்கும்போது, நமக்குப் பிடித்தமான திரைப்படத்தில் பங்கு பெறுவது என்பது மிகக் கடினம். கலைப்படமாக இருந்தாலும் சரி, கமர்ஷியல் படமாக இருந்தாலும் சரி திரைப்படம் ஏராளமான பொருள்செலவில் தயாரிக்கப் படுகிறது.

நண்பர் ருத்ரையா சினிமா என்பது கலை யல்ல, வியாபாரம், தொழில் என்பார். இது தான் சரியானது.

சினிமாவை கலை, கமர்ஷியல் என்று பிரிப்பதைவிட நல்ல படம், மோசமான படம் என்று பிரித்துப் பார்க்கலாம். சத்யஜித்ராய் போன்ற இயக்குநர்கள் யதார்த்தத்தை விட்டு விலகாமல் தங்கள் திரைப் படங்களை இயக்கியிருக் கிறார்கள். ஆனால், யதார்த்தம் என்ற பெயரில் ஒருவன் நடப்பதையே ஐந்து நிமிஷத்துக்குக் காட்டிக் கொண்டிருக்க முடியாது. அது அபத்தமாகத்தான் இருக்கும். நாவல், சிறுகதைகளில் உள்ள காலப் பிரமாணம் வேறு, சினிமாவில் உள்ள காலப்பிரமாணம் வேறு. இதை சத்யஜித்ராய் தனது படங்களில் கலையழகுடன் கையாண்டிருக்கிறார்.

இதேபோல் பாட்டு, நடனம் போன்றவற்று டன் இயக்கப்பட்ட நல்ல, தரமான திரைப்படங் களும் உள்ளன. ஸ்ரீதர், கே.பாலசந்தர் போன்றோரின் ஆரம்ப காலப் படங்கள் நன்றாகத்தான் இருக்கின்றன.

**உங்கள் நூல்களை இதுவரை வெளியிட்டுள்ள நர்மதா ராமலிங்கம், அன்னம் கவிஞர் மீரா, சந்தியா நடராஜன், பரிசல் செந்தில்நாதன், கிழக்கு பத்ரி சேஷாத்திரி, விகடன் பா. சீனிவாசன் இவர்களைப் பற்றி...**

என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி, என்னுடைய நூல்களை வெளியிட்ட அவர்களுக்கு என் நன்றிகள் உரித்தாகின்றன.

**வாழ்க்கை ஏன் இவ்வளவு துக்கமாக இருக்கிறது?**

ஹிந்து மதம் நம் கஷ்டங்களை முன்வினைப் பயன் என்கிறது. ஒரு பிரச்சினையிலிருந்து இன்னொரு பிரச்சினைக்குச் சென்று கொண்டிருப்பது தான் வாழ்வு என்றாகிவிட்டது. காலப்போக்கில் மனம் துன்பங்களுக்குப் பழகி, மரத்துப் போய் விடுகிறது.

**உங்கள் குடும்ப உறுப்பினர்கள்?**

என் தாயார் மதுரையில் என் தங்கையுடன் இருக்கிறார். அப்பா இறந்து பல வருடங்களாகி விட்டன. என் மனைவி தான் இந்த குடும்பத்தைத் தாங்கிக் கொண்டிருப்பவள். என் மூத்த மகன் அமெரிக்காவிலிருக்கிறான். மூத்த பெண் கோயம்புத்தூரில். இளைய மகள் சென்னையில். எல்லோருக்குமே திருமணமாகிவிட்டது.

**இன்றைக்கு வரை இந்த வாழ்க்கை கற்றுக் கொடுத்தது என்ன?**

நிறையக் கற்றுக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. என்றாலும், சமயங்களில் திண்டாட்டமாகவும் இருக்கத்தான் செய்கிறது.

**வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்வு ஒன்றே ஒன்றை மட்டுமே சொல்ல வேண்டுமென்றால் எதைச் சொல்வீர்கள்?**

ஒன்றல்ல பல இருக்கின்றன. பல நண்பர்களை முதன்முதலாக அறிமுகம் செய்து கொணட அந்தத் தருணங்களை எல்லாம் இன்றும் மறக்க முடியவில்லை.

☯

# மெய்ம்மை

வண்ணநிலவன்



மனவெளியில் அலைந்துருகும்

கருங்காக்கை

முகந் திரும்பிப் பார்த்தாலோ

அகங்காரக் கரைச்சல்

(நின்றாலும் கொத்திப் பிடுங்கும்)

என்னூர் என் தேசமென

உவப்பற்றுத் திகழும்

வாழ்வியல் மெய்ம்மையே...ஏ...ஏ...

அப்பாவுக்குப் பிண்டச் சோறும்

குழந்தைக்குப் பீத்துணியும்

எனக்குப் பொருத்திக் கொள்ளவொரு

யோனி முடுக்கும் போதுமோ?

Vincent Van gogh

*Think Mobile ! Think Poorvika !*

Mobiles @ lowest price in India




Exchange your old mobile to latest mobile

poorvika mobile world

**Call : 99406 88855** www.poorvikamobile.com

Poorvika – The very first thought in people mind when they desire to purchase a mobile.

Being a leading retailer in Mobile industry, Poorvika offers wide ranges of Mobile phone with lowest rate. People from all ages and segments prefer to buy handsets, accessories, Bluetooth, Camera and satellite connections from Poorvika due to the way of service, kind approach and also the lowest rate with best customer care.

Poorvika having more than 350 varieties of handsets with 10 major brands and keep updating them. Poorvika Offers free SIM card for every mobile purchase with exciting gifts. In addition they are doing mobile insurance and Mobile services also.

Poorvika having a website of fully updated where people find dynamic solution for their mobile needs. www.poorvika.com plays a major role and be active like an outlet. It's time to thank all our customers who made Poorvika the successful brand. "Think Mobile Think Poorvika"

Showrooms across TamilNadu

CHENNAI : Adambakkam I Adyar I Ampa skywalk I Annanagar I Arumbakkam I Avadi I Ayanavaram I Chengalpattu I Ekkattuthangal I Guduvanchery I Kilpauk Madipakkam I Manali I Mylapore I Old washermenpet I Pallavaram I Parry's I Perambur I Pondicherry I Pondy Bazaar I Poonamallee I Porur I Purasawalkkam Ranganathan Street I Tambaram I Thirumangalam I Thiruvottriyur I T. Nagar I T.V.K Nagar I Triplicane I Vadapalani I Valasarawalkam I Velachery I Virugambakkam

**KANCHIPURAM, VILLUPURAM, PONDICHERRY, MADURAI, THIRUVANAMALAI, DINDIGUL, SALEM, NAMAKKAL, KARUR, PALANI, COIMBATORE, ERODE, TINDIVANAM, HOSUR**

## திரு. விக்கிரமாதித்யன்
### கவிஞர்



★ ராமச்சந்திரன் வாழ்க்கையில் பெரிய அக்கறையோடு இருந்ததில்லை எந்த நாளுமே. இலக்கியத்திலும் அப்படியொன்றும் தீவிரமாக இருந்ததாகச் சொல்ல முடியாது. தொடக்கத்தில், திருநெல்வேலியில் பிழைக்கமுடியாத நிலையில், சென்னைக்கு வந்த பிறகுதான், ஒரு மாயம் நடந்த மாதிரி, அவ்வளவு சாதனைகளும் செய்தார். நதியின் சுழல்கள் வெளித் தெரிவதில்லை. அப்படித்தான் வண்ணநிலவன் மனசு. ஒரே ராத்திரியில் மூன்று, நான்கு சிறுகதையெல்லாம் எழுதிய கலைஞன். கடுமையான விமர்சகன்.

★ வண்ணநிலவன் கதைகள் பரந்துபட்டவை. வேறு வேறு உலகங்கள். கலைஞனுக்கு மட்டுமே முகம்காட்டும் வாழ்க்கைகள். பல தரப்பட்ட மனிதர்கள். தமிழிலேயே இவ்வளவு விஸ்தீரண மான சிறுகதைப் பிரதேசம் வேறு யாருக்கும் வாய்க்கவில்லை. எளிமை, நுணுக்கம், பூடகம் எனக் கலையின் பரிபூரண குணங்கள் கொண்ட கதைகள். வேறு எந்த மொழியிலாவது இப்படி ஒரு சிறுகதைக் கலைஞன் இருந்தால் கொண்டாடியிருப்பார்கள். வண்ணநிலவன் கதைகள் ஒட்டுமொத்தமான தமிழ்வாழ்வின் தன்மையும் சாராம்சமும் கொண்டவை. தமிழ்ச் சிறுகதையை அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்குக் கொண்டுபோனவை. ஒரு சிறுகதைக் கலைஞன் அதில் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து பார்த்தவர் அவர்.

★ வண்ணநிலவன் தண்ணீர் மாதிரி. யாருடன் இருக்கிறாரோ, அவர் மாதிரியே ஆகிவிடுவார். கிறிஸ்துவ நண்பர்களோடு இருந்தபோது பைபிள், மாதாகோயில் இப்படி கம்யூனிஸ்ட் தோழர்களோடு இருந்த நாள்களில் இயங்கியல் பொருள் முதல்வாதம், மார்க்ஸியம் என்று. 'துக்ளக்'இல் இருந்த சமயம், மகாபாரதம், மதுரை சோமு தண்டபாணி தேசிகர் என. அதேவேளையில் தன் சுயத்தையும் இழந்துவிடமாட்டார்.

*('நால்வர் ' கட்டுரையிலிருந்து)*

---

## திரு. சோ. ராமசாமி
### ஆசிரியர், துக்ளக்.



திறமையுள்ள எழுத்தாளர்கள் எல்லோரும் எக்ஸன்ட்ரிக் (Excentric) ஆக உள்ளவர்கள். இவர்களைப் பொதுவான அளவுகோலில் அடைக்க முடியாது. அப்படியான வர் ராமச்சந்திரன். சுலபமாக உணர்ச்சிவசப்படக்கூடியவர். இவர் லாப நஷ்டங்கள் பார்த்து காரியங்கள் ஆற்றுவதில்லை. தன்னை அறியும் நோக்கிலேயே இன்றும் இருப்பவர். நேர்மையானவராக இவர் இருப்பதால் நேர்மையற்றவர்களைப் பார்த்துக் கோபம் கொள்வார். இதனால் நிறைய வாய்ப்புக்களை இழந்தவர். நிர்ப்பந்தப்படுத்தி இவரை எழுத வைக்க முடியாது. அவரது விருப்பம் சார்ந்தே எழுதக்கூடியவர். யாரையும் சுலபமாக நம்பிவிடுவார். நம்பியவர்கள் தவறுசெய்தால் தாங்கமாட்டார். எழுத்து அவருக்கு இயல்பாக வருகிறது. தனித்துவமாக எழுதும் திறன் கொண்டவர். இவரது நடை வித்தியாசமானது. சிறு தவறு நடந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். 'துக்ளக்'கில் தவறு நடக்காதா எனக் கேட்டீர்களேயானால், எங்களைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை தொடர்ந்து அவருக்கு இருக்கிறது. இவரது படைப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை. ராமச்சந்திரனின் எழுத்துக்குக் கிடைத்துள்ள மதிப்பு குறைவாகவே உள்ளது. இன்னும் அதிகம் அவர் பாராட்டைப் பெற வேண்டும் என்பது என் ஆசை. எங்கள் எல்லோருக்கும் அவர் மிக நல்ல நண்பர்.



**திரு. பவா செல்லதுரை**
**எழுத்தாளர்**

வண்ணநிலவனின் ஒரு புதிய கதை படித்த மனதோடுதான் நான் வீட்டைவிட்டுக் கிளம்புவது என்றான காலம் ஒன்று எனக்கிருந்தது.

'' கடைசியில் எஸ்தர் சித்தியை ஊரிலேயே விட்டு விட்டுப் போவதென்று முடிவானது'' என்ற எஸ்தர் கதையின் முதல் வரியை கடப்பதற்கு எனக்கு ஒரு முழு நாள் தேவைப்பட்டது. எஸ்தர் சித்தியின் ஊர், அதன் நிலப்பரப்பு, அவர்களின் பெருங்குடும்பம், அப்போது தலைவிரித்தாடிய பஞ்சம், அதற்கு பலிகொடுத்த மனிதாயம் ...என் காய்ச்சல் கூடி நான் நினைவிழக்க இருந்த தருணமது.

புதிய வாசிப்பு, புதிய படைப்பு, புதிய படைப்பாளிகள் எதுவும், எதையும் செய்ய முடியாத என் மனவெளியின் ரகசிய அறைகளில் பாசிபடிந்த அதன் பழமையோடு அவரின் வரிகளை, வாழ்வைப் பாதுகாக்கிறேன். எப்போதும் எடுத்துப் பருகும் தூரத்தில் வாழ்வு அவர் முன் துயரம் நிரம்பிய குப்பிகளை மட்டுமே அவருக்குக் கொடுத்தது. அதைக் கூட சிந்தாமல் சிதறாமல் மற்றவர்கள் மீது பட்டுவிடாமல் தான் மட்டுமே அருந்திய கலைஞன் அவன்.

ஒரு முறை அவரை நேரில் பார்க்க நண்பர் ஒருவருடன் சென்னைக்குப் போனேன். மேற்கு மாம்பலத்தில் ஒரு நல்ல வெய்யிலேறிய பகலில் அவர் வீட்டை அடைந்தோம். திறக்கும் கதவின் சத்தம் மற்றவர்களை தொந்தரவுபடுத்தும் என்ற ஜாக்கிரதையோடு கதவைத் திறந்தார். என் கண்களில் தெரிந்த சோர்வையும், தூக்கத்தையும் பார்த்து 'படுத்து ஓய்வெடுக்கிறீர்களா?' எனக்கேட்டார். பேச எதுவுமற்று பத்து நிமிடங்கள் கடந்தன. பிரியத்தைப் பகிர்ந்துக் கொள்ள வார்த்தைகள் தேவையற்றதாகிவிட்டிருந்தது. அருகாமையில், விரல்களின் ஸ்பரிசமும், போதுமானதாய் இருந்தது. எதுவும் பேசாமலேயே திரும்பினேன். ரொம்ப தூரம் வந்து திரும்பப் பார்த்தேன். அந்த அடுக்கு மாடிக் குடியிருப்பின் பால்கனியில் நின்று என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். போக மனமின்றி நானும் கொஞ்ச நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தேன். விடுபடும் கண்ணிகளைத் தொடவே முடியவில்லை. எப்படி இணைக்க?.


புதிய முயற்சிக்கு நல்வாழ்த்துகள்

நல்ல நூல்களுக்கான ஓர் தளம்

**விஜயா பதிப்பகம்**
**20, ராஜ வீதி,**
**கோயம்புத்தூர் – 2**
**0422 – 2394614/2382614**

Advt

திரு. **சா. கந்தசாமி**

எழுத்தாளர்



# கடல்புரத்தில்

கடல்புரத்தில், பரபரப்பூட்டும் சம்பவங்களும் கிளர்ச்சி தரும் காட்சிகளும் கொண்ட நாவல் அல்ல. ஆனால், இது ஒரு நல்ல நாவல். கலைத்தன்மை நிறைந்த உயர்வான நாவல். படித்தவர்கள் மனத்தில் பல காலத்துக்கு அழுத்தமாக நிற்கக்கூடியது. இதன் கதாபாத்திரங்கள் இயல்பாக வளர்ந்து, இயல்பாகப் பேசி, இயல்பாக நடந்து, இயல்பாகவே நம் கவனத்தில் இடம்பிடித்துக் கொள்கிறார்கள்.

ஒரு தேர்ந்த சிறுகதையைப் போல போராட்டத்துடன் தொடங்குகிறது நாவல். அனாதி காலமாகத் தந்தைகளுக்கும் மகன்களுக்கும் இடையில் நிலவிவரும் நெருடல், உள்ளார்ந்த இணக்கமின்மை என்ற இழைகளோடு மின்னல் வெட்டு போன்ற சம்பவத்துடன் முழு வீச்சோடு ஆரம்பமாகிறது. ஆனால், போகப் போக நெருடல்களும் கோபங்களும் அமிழ்ந்துபோக, கடல்புரத்து மக்களின் ஜீவ சரித்திரம் - குரூஸ் மிக்கேல், அவன் மனைவி மரியம்மை, மகன் செபஸ்தி, இளைய மகள் பிலோமி, பணியாள் சிலவை, பக்கத்து வீட்டுக்கார ஐசக், பிலோமியின் நிநேகிதி ரஞ்சி, பிலோமிக்குப் பிரியமான சாமிதாஸ், மரியம்மையின் பிரிய வாத்தி எல்லோருக்கும் பிரியமான பவுலுப் பாட்டா இவர்களின் கதையாகி - மனிதர்களின் இதயங்களில் இயல்பாகக் குடிகொண்டுள்ள மூர்க்கக்குணம் வெறித் தன்மையோடு, ஆனால் களங்கமின்றி விவரிக்கப்படுகிறது.

வாழ்க்கையின் முரண்பாடான அம்சங்களை மிகவும் யதார்த்தமாகவும் தீவிரமாகவும் எதிர்க்க வேண்டிய அம்சங்களை மென்மையாகவும் சாத்தியமே என ஏற்றுக்கொள்ளும்படி சொல்லுகிறது இந்த நாவல். விஷயத்தைவிட, சொல்லும் முறையில் அபூர்வமான கலைத்தன்மை பூரணம் பெறுகிறது. இந்த நாவலின் சிறப்பு அம்சமே இதன் பாஷைதான். மென்மையும் குளுமையும் உயர்த் துடிப்பும் கொண்ட பாஷை, எதையும் சாதிக்கவல்ல பாஷை, இந்த நாவலையும் ஸ்தாபிக்கிறது. இன்னும் பல காலத்துக்குக் கடல்புரத்தில் சிறந்த நாவலாகவே இருக்கும். **(கடல்புரத்தில் பின்னட்டைக் குறிப்பிலிருந்து)**

திரு. **ராமலிங்கம்**

பதிப்பாளர், நர்மதா பதிப்பகம்



1977-ல் கவிஞர் குயிலனின் பதிப்பகத்தைச் சேர்ந்த நச்சினார்கினியனைப் பார்க்கச் சென்றபோது அவரது மேஜையில் ‘கடல்புரத்தில்’ நாவலின் கையெழுத்துப் பிரதி இருந்தது. “இது ராமச்சந்திரனின் நாவல். இது வாசகர் வட்டம் மூலம் வெளியிடாமல் திரும்பி வந்தது. இதைக் கொண்டுவர இப்போது பண வசதி இல்லாமல் இருக்கிறது” என்றார் அவர். அப்போது “நான் வேண்டுமானால் படிக்கிறேன்” என்றேன். அதற்கு “நீங்கள் வெளியிட்டால் ராமச்சந்திரன் மகிழ்வடைவார்” என்றார் நச்சினார்கினியன்.

நானும் அந்தக் கையெழுத்துப் பிரதியை எடுத்துவந்து ஒரே இரவில் படித்துவிட்டேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ராமச்சந்திரனுக்குப் போன் செய்து சம்மதம் கேட்டேன். மகிழ்வுடன் சம்மதித்தார். அமுதோனிடம் அட்டைப்படம் வரையக் கொடுத்தேன். அட்டையில் 1977இன் சிறந்த நாவல் எனப் போடச் சொன்னேன். அவரும் நர்மதா முத்திரையுடன் வரைந்து கொடுத்தார். அப்படியே வெளியிட்டோம். அதேபோல அந்த ஆண்டின் சிறந்த நாவலுக்கான இலக்கிய சிந்தனைப் பரிசு பெற்றது. அது எங்களுக்குப் பெருமை அளித்தது. அப்போது மிகுந்த சிரமத்துடன்தான் புத்தகம் போட்டேன். இப்போதைப் போல புத்தகம் வெளிவந்தவுடன் அதைத் தெரிவிக்கும் சாத்தியம் அப்போது இல்லை. புதிய புத்தகம் வந்ததைத் தெரிவிக்க வாசகர்களின் முகவரியை வைத்துக் கடிதம் போடுவோம். இப்படியான நூல்களைப் படிக்க நானூறு பேர் இந்தியா முழுக்க இருந்தார்கள். அவர்கள்தான் நல்ல இலக்கிய நூல்களை ஊக்குவித்தார்கள். ராமச்சந்திரன் மிக எளிமையும், தளும்பும் அன்பும் கொண்டவர். கடல்புரத்திற்குப் பிறகு அவரது ‘எஸ்தர்’, ‘கம்பாநதி’, ‘ரெயினீஸ் அய்யர் தெரு’, ‘தர்மம்’ முதலிய நூல்களையும் எங்களது நர்மதா பதிப்பகம் மூலமே வெளியிட்டோம்.

## திரு. வண்ணதாசன்
## எழுத்தாளர்



**ச**னிக்கிழமை மத்தியானம் பாங்க் லீவு. எப்போது சனிக்கிழமை வரும் என்றுதான் நானும் ராமச்சந்திரனும் இருப்போம். மத்தியானத்திற்கு மேல் கிளம்பி ஒன்பதாம் நம்பர் பஸ் பிடித்து ராஜவல்லிபுரம் போய் விடுவோம். நடுத்தெருவில் உள்ள அவருடைய பூர்வீக வீட்டில்தான் வல்லிக்கண்ணன் இருப்பார். அவருடன் பேசிக் கொண்டிருப்போம். சிலசமயம் செப்பறைவரை நடந்தே போய் ஆறுவரை போய்விட்டு வருவோம். எங்களுக்கு வல்லிக்கண்ணனுடைய பெரிய அண்ணன், கல்யாணி அண்ணாச்சியை ரொம்பப் பிடிக்கும். நாலைந்து நாள் தாடி, சிகரெட், அருமையாக ஒரு அசலான சிரிப்பு, தம்பியைப் பார்க்கவந்திருக்கிறார்கள் என்பதில் எங்களைப் பற்றி ஒரு சந்தோஷம் எல்லாம் அவர் முகத்தில் இருக்கும். இருட்டியும் இருட்டாத கருக்கலில் மறுபடியும் திரும்புவோம். ஆல மரத்தடி பஸ் ஸ்டாப் வரை வல்லிக்கண்ணன் வழியனுப்ப வருவார்.

**ரா**மச்சந்திரன் கதைகள் தாமரை, சாந்தி எல்லாவற்றிலும் வர ஆரம்பித்துவிட்டது. ராமச்சந்திரன் "பொருநை" கையெழுத்துப் பத்திரிக்கையைக் கொண்டுவந்தார். நானும் கோபாலும் அதில் கதை கவிதைகள் எழுதினோம். நான் படம் போட்டேன். ஒரு பிரதி எங்கேயோ இருக்கிற ஞாபகம். கிடைத்தால் புதையல்தான். இதை விட இன்னொரு புதையல் அவர் எழுதிக்கொண்டுவந்து காட்டின 'கடல்புரத்தில்'. பின்னால் 'கம்பா நதி', 'ரெயினீஸ் ஐயர் தெரு' என்று எத்தனை வந்தாலும், கையெழுத்தில் படித்த அந்தக் கடல்புரத்தில் போல வராது. இன்னும் ப்ரேமியும் ரஞ்சியும் சாமிதாஸும் வாத்தியும் ராமச்சந்திரனின் அந்தக் கையெழுத்துப் பிரதியில் இருந்து எழுந்துவந்து ஆழி சூழ் உலகத்திலும் கொற்கையிலும் எங்களுடன் நடமாடிக் கொண்டு இருக்கிறார்கள். எஸ்தர் தொகுப்பு அச்சான நாட்கள் ஆனித் திருவிழாவை விட எங்களுக்கு முக்கியமானவை. அந்தத் தொகுப்புக்கு அட்டைப்பட அமைப்பு என்னுடையது.

சோவியத் லிட்டரேச்சரில் வெளியாகியிருந்த ஒரு படத்தை வெட்டி ஒட்டி, அதை வடிவமைத்ததில் எனக்கு இன்றைக்கு வரை சந்தோஷம். புத்தக அடுக்கில் ஒளித்துவைத்திருக்கும் ஒரே ஒரு எஸ்தர் பிரதியை திடீரென்று எடுத்துப் பார்த்துக் கொள்வேன். லயோனல்ராஜ், சுப்பு அரங்கனாதன், நம்பிராஜன், அம்பை பாலன், அய்யப்பன் எல்லாம் கலந்துரையாடுவது போன்ற அந்த முன்னுரையின் குரலும் கணிப்பும் இப்போது கூடப் பின்னுக்குப் போய்விடவில்லை. சிவசு சார் தன்னுடைய 'மேலும்' பதிப்பகத்தின் மூலம் வெளியிட்ட 'பாம்பும் பிடாரனும்' தொகுப்பில் இருந்த ஏழெட்டுக் கதைகளின் உச்சம் ஒரு அபூர்வமான கலைஞனுக்கே உரியது.

அவர் எப்போது என்னைப் பார்க்க வருவார், நான் எப்போது அவரைப் பார்க்கப் போவேன் என்றெல்லாம் சொல்லவே முடியாது. சிலசம்யம் அப்போதுதான் விடிந்திருக்கும். வாசல் தெளித்துக் கோலம் கூடப் போட்டிருக்க மாட்டார்கள். ராமச்சந்திரன் வந்து விடுவார். கொஞ்சம் வாய் திக்குமில்லையா? "என்ன கல்யாணி" என்று சிரித்துகொண்டே வருவார்.

நான் அவரைப் பார்க்க, திருவனந்தபுரம் ரோட், முருகன் குரிச்சி, வக்கீல் சீனிவாசன் சார் வீட்டுக்குப் போவேன். அங்கே இல்லாவிட்டால், கோட்டூர் ரோட், சொக்கலிங்கசாமி கோவில் தெரு குமார் வீட்டில் இருப்பார். குமார், சுகுணா, வசந்தா, கண்ணன், மீனா, பாஸ்கரத்தான் என்று அந்த வளவு பூராவுமே அபூர்வமான ஆட்கள். அதையொட்டின நாட்கள் ஒன்றிலதான், எனக்கு வேலை கிடைத்தது. சாக்லேட் வாங்கிக் கொண்டுபோய் எல்லோருக்கும் கொடுத்தது ஞாபகம் இருக்கிறது. சுகுணா கூட அப்போது தோசைக்கு அரைத்துக்கொண்டு ஆட்டுரலில் இருந்தபடி கையை நீட்டி வாங்கிக்கொண்டு வாழ்த்துச் சொன்னாள்(ர்). நான் சென்ட்ரல் டாக்கீஸ் பக்கத்தில் இருக்கும் ஸ்டேட்பாங்க் கிளையில் இருந்தேன். காஷியர் வேலை. நிமிர முடியாது, இவர் கவுண்டருக்கு முன்னால் சத்தமே காட்டாமல் வந்து நிற்பார். ரொம்ப நேரத்துக்கு முந்தியே வந்திருப்பார். ஆனால் "இப்பதான் வந்தேன்" என்று சிரிப்பார். ராமச்சந்திரன் சிரிப்பை ராமச்சந்திரன் மட்டுமே சிரிக்கமுடியும்.

"இந்தப் பக்கம் ஒரு ஜோலியா வந்தேன்.அப்படியே எட்டிப் பாத்துட்டுப் போலாம்னு தோணுச்சு" என்பார். அப்பவும் அதே சிரிப்புத்தான். அவர் சிரிப்பை வைட் ஆங்கில் ரவிசங்கரன் தான் சரியாகப் பதிவு பண்ணிவைத்திருக்கிறார். அந்தச் சிரிப்பு இன்றைக்குவரைக்கும் அப்படியேதான் இருக்கிறது. மனசு அப்படியே இருந்தால்தான் சிரிப்பும் அப்படியே இருக்கும். இருக்கிறது.

பாவிக்கு இன்றைக்கும் அப்படியே கொஞ்சம் கூட மாறாத திருநெல்வேலிப் பேச்சுத்தான்.சென்னைக்கு அவர் வந்து நாற்பது வருஷமும், குடும்பத்தோடு இருந்து முப்பத்தைந்து வருஷமுமாவது இருக்கும். இன்னும் ஒரு சொல் கூட மெட்ராஸ் பாஷை கிடையாது. இது பெரிய விஷயம். இதில் என்னய்யா பெரிய விஷயம் இருக்கிறது என்று தோன்றும். ஆனால் இது நிஜமாகவே ரொம்பப் பெரிய விஷயம். சென்னை அப்படியெல்லாம் சரி இருந்துவிட்டுப் போ என்று சும்மா இருந்துவிடாது. கையையும் காலையும் அமுக்கி மடியில் போட்டு,குடிக்கிறாயா இல்லையா என்று அதன் சகல கலா பாஷையைப் பாலாடையில் அவர் வாயில் புகட்டத்தான் செய்தது. ஆனால் அவர் ஒரு மடக்குக் கூட, உள் நாக்கு தாண்டி தொண்டைக்குழிக்குக் கீழ் இறக்கவே இல்லை. இன்றைக்கு நேற்று இல்லை, மா நகரங்களும் அதிகாரமும் தொடர்ந்து அசல் கலைஞர்களிடம் தன் ஜம்பம் பலிக்காமல் தோற்றுக்கொண்டேதான் வருகின்றன. ராமச்சந்திரனுக்கு அதைப்பற்றியெல்லாம், அதைப்பற்றியென்றால் ஜெயிக்கிறது தோற்கிறது பற்றியெல்லாம், ஞாபகம் கிடையாது. அவருக்கு எப்போதும் திருநெல்வேலி ஞாபகம் மட்டுமே.

**எ**னக்கு, கோபாலுக்கு, சமயவேலுக்கு எல்லாம் ஒரு தீராத ஆசை. நாங்கள் எங்களுக்குத் தெரிந்த வாழ்வை இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ராமச்சந்திரனும் சொல்லவேண்டும்.

## திரு. கலாப்ரியா
### கவிஞர்



ஸகி......

நாற்பது வருடங்கள் ஓடி விட்டன. இப்போது யோசிக்கையில், அந்த இருபது வயதில் என்ன முதிர்ச்சி இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.ஆனால் அந்த நேரத்து வாழ்வும் மனமும் தந்த படைப்பின் எளிமையான ஆன்மா, இப்போது அனுபவத் தர்க்கங்கள் முக்கிப் பிரசவிக்கும், தட்டுத் தடுமாறிப் பிறக்கும் சோதனைக் குழாய் படைப்புக்கு இருக்குமா தெரியவில்லை.

"உயிர் காதலிலே
உடல் மேடையிலே - இந்த
வாழ்க்கையின் முடிவெங்கே....." என்ற வரிகளை உள்ளடக்கிய
"மன நாட்டிய மேடையில் ஆடினேன்
கலை காட்டிய பாதையில் வாடுகிறேன்" என்ற மீண்ட சொர்க்கம் பாடலை நானும் ராமச்சந்திரனும் விரும்பிக் கேட்போம். அது எங்கள் 'பிராணகீதம்', அந்தக் காலத்தில். அவருக்கு இந்தி நடிகை ராக்கியை ரொம்பப் பிடிக்கும்.இரண்டு பேருக்கும் நடிகை சாரதாவை ரொம்பப் பிடிக்கும்.சாரதா படங்களைச் சேகரிப்பது ஒரு இஷ்டமான காரியம், அப்போது. 'பொம்மை'சினிமாப் பத்திரிக்கையில் நடுப்பக்கத்தில் வந்த சாரதா படம் ஒன்றை நான் கனத்த அட்டையில் ஒட்டி, என் படிக்கிற மேஜை அருகே தொங்க விட்டிருப்பேன்.அவர் அதே இதழில் வந்த சிறிய படமொன்றை மேஜையில் வைத்திருப்பார். மேஜை என்றால்,அது வக்கீல் குமாஸ்தாவான அவரது சிறிய அறையில் இருக்கும் வக்கீல் சார் வீட்டு மேஜை. அவர் வைத்திருந்த சாரதா படம் தொலைந்து போய் விட்டது.அதைக் குறித்து அவர் என்னிடம் ரொம்ப வருத்தப் பட்டார்.என்னிடமிருக்கும் பெரிய படத்தை வைத்துக் கொள்ள அவரது வாழ்வியல் சுதந்திரம் அப்போது அனுமதித்திருக்காது, அதனால் அதைத் தர முன் வந்த போது மறுத்து விட்டார்.

அந்த நாட்களின் காலைகளில், அநேகமாக என்னைப் படுக்கையிலிருந்து எழுப்புகிறவர் அவராய்த்தான் இருக்கும்.கையில் 'கடல்புரத்தில்; நாவலின் அத்தியாயம் ஒன்றோ இரண்டோ வைத்திருப்பார்.முந்தின இரவில் எழுதியது.கண்ணில் பீளை கூட விலகாமல் அதைப் படிப்பேன்.என்ன அற்புதமான படைப்பு, எப்படிப்பட்ட அற்புதமான கலைஞன்.அவரைப் போல், அவர் நாவலின் ஒரு அத்தியாயம் போல, ஒரே ஒரு கதை எழுதி விட்டால்ப் போதும், பேனாவைத் தூர எறிந்து விடலாம் என்றிருக்கும்.அதை அவர் இரண்டு விதமாக முடித்திருந்தார். ஒன்றில் பிலோமி இறந்து விடுவாள்.இன்னொன்றில் அவள் தனது தாயின் சிநேகிதரான வாத்தியாருடன் போய் தங்கிக் கொள்ளுவாள்.எனக்கு முதல் முடிவு பிடித்திருந்தது. வண்ணதாசன், "இரண்டாவது முடிவுதான் அற்புதம், நீ சொல்கிறதை யார் வேண்டுமானாலும் எழுதி விடலாம், இதுதான் புதுசாய் இருக்கிறது, இதில்தான் ராமச்சந்திரனின் வியக்தி இருக்கிறது" என்றார். எனக்கு அப்போதுதான் உரைத்தது. ஆமாம் இரண்டாவதில் ஒரு அபூர்வ முதிர்ச்சி இருக்கிறது என்று. வண்ணதாசனின் புதியவற்றிற்கான தாகமும், ராமச்சந்திரனுடைய அதுவும் இதுவுமான கலையும், என் அமுதிர்ச்சியும் அன்று தெளிவாகப் புரிந்தது.

வக்கீல் சார் வீடு நான் கல்லூரிக்குப் போகும் வழியில்தான் இருந்தது.ரமச்சந்திரன் இரண்டு நாளைக்கு ஒரு தரம் என்னையும் கல்யாணியையும் பார்க்க வந்து விடுவார். ஆனாலும் அவ்வப்போது திடீரென்று ஒரு போஸ்ட் கார்டு வரும், அற்புதமான வரிகளைத் தாங்கி. ஒரு கார்டில் உற்சாகம் கொப்பளிக்க எழுதியிருந்தார், "அன்புமிக்க கோபால்,தொலைந்து போன சாரதா படம் கிடைத்து விட்டது, ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது.அதற்காகவே அது இன்னொரு தரம் தொலையலாம் போலிருக்கிறது", என்று எழுதியிருந்தார்.மறு நாள் கல்லூரி போகிற காலை நேர அவசரத்துக்கிடையே அவரையும் அந்தப் படத்தையும் (ஏற்கெனவே பார்த்ததுதான்) பார்ப்பதற்காக அவரது அறைக்குப் போனேன்.அதைக் காட்டிக் காட்டி மகிழ்ந்தார்.

அவர் பிலிமாலயா சினிமாப் பத்திரிக்கையில் கொஞ்ச நாள் வேலை பார்த்தபோது ஒரு அழகான சாரதா ஸ்டில்லை அனுப்பியிருந்தார், வேறு கடிதம் எதுவும் எழுதாமல். நினைவுகளின் சாட்சியங்களாக எல்லாமே பத்திரமாக இருக்கிறது.

"அலைக்கழிந்து போவதற்கே
மேகங்கள்
காற்று வரும் வரை
காத்திருக்கின்றன.." என்று ஒரு கார்டில் எழுதியிருந்தார்.

# நண்பன் தந்த கொடை

திரு. ருத்ரய்யா
திரைப்பட இயக்குநர்



வண்ணநிலவன் என்ற ஒரு எழுத்தாளன் - நண்பன்.

அவரை ஒரு நண்பனாகச் சொல்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன். ஒரு வகையில் அதுதான் எனக்குத் தெரியும் என்பது தான் உண்மை.

நான் சென்னைத் திரைப்படக் கல்லூரிக்கு வந்து சேர்ந்த சமயம். மயிலாப்பூரின் லஸ் கார்னரின் ஒரு பெட்டிக் கடையில் கணையாழி இதழ் தொங்கிக் கொண்டிருக்க, பெயரின் விநோதத்தால் அதை வாங்கினேன். அதில் ‘கடல் புரத்தில்’ தொடர் வந்துகொண்டிருந்தது. படித்தேன். ஏதோ ஒரு ஈர்ப்பு. படிக்காமலேயே அதன் அடுத்தடுத்த அத்தியாயங்களை கிழித்துப் பத்திரப்படுத்த ஆரம்பித்தேன்.

மவுண்ரோடின் எல்.எல்.ஏ. பில்டிங்கில் எழுத்தாளர் வண்ணநிலவனுக்குப் பாரட்டு விழா. சென்று அமர்ந்திருந்தேன். வலம்புரிஜான் தனக்கே உரிய திராவிட அடுக்குமொழியில் பேசிக் கொண்டிருந்தார். பரதவகுலத்தைப் பற்றி பனுவல் செய்த மகாகலைஞன் என்ற ரீதியில் பேச்சு போய்க் கொண்டிருந்தது. கடைசியில் அவருக்கு மரியாதை செய்ய அவரை அழைத்தபோது மதிக்கத்தக்க உடையணியாத ஒருவர் பவ்யமாய் சன்ன நடுக்கமும் சங்கோஜமும் ததும்ப எழுந்து போனார். இதுவரை என் பக்கத்தில் ஓசையின்றி அமர்ந்திருந்தவர்தான் அந்த வண்ணநிலவன். அப்போதும் நான் அவரிடம் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. என் இயல்பின் சுபாவம் அது. இந்த மனிதன்தான், என் வாழ்வின் அடுத்தடுத்த ஆண்டுகளில் அற்புத மாற்றங்களை நிகழ்த்த இருக்கிறவன் என்பதை அப்போது நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

நண்பர் ஜெயபாரதி ஒரு நாள் ஒரு எழுத்தாளர் இடமின்றி அவஸ்தைப்படுவதாகவும் அவரை உங்கள் அறையில் தங்கவைத்துக் கொள்ள முடியுமா என்றும் கேட்டார். அவர் யார் என்று கூட கேட்காமல் எழுத்தாளன் என்றதும் ஓ.கே. என்று சொன்னேன்.

ஒரு நாள் காலை துவைத்த வேஷ்ட்டி, ஜிப்பா, ஒரு மஞ்சள் பை, யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றலாம் என்று தெளிவாகத் தெரிந்த ஒருஅப்பிராணியான தோற்றத்துடன் வண்ணநிலவன் என் அறைக்கு வந்து சேர்ந்தார். அதன் பிறகு எவ்வளவோ சம்பவங்கள், சம்பாஷணைகள், ஊடல்கள், கேலி கிண்டல்கள். அவருக்குத் திருமணம் ஆகும்வரை அவர் என்னோடு இருந்த அந்த மீண்டுவராத அக்காலத்தில் நான் பெற்றது ஏராளம்.

ஆனாலும் எங்கள் நட்பில் இன்றுவரை எந்த இடைவெளியும் இல்லை.

சேலத்துக் காட்டான் என்று பெயர் எடுத்திருந்த எனக்குள் வண்ணநிலவனும் நம்பிராஜனும் இல்லையென்றால் மென்மைத்தன்மைகள் கூடிய புரிந்துணர்வு சேகரமாகியிருக்காது என்பது சத்தியம்.

காட்டுத்தனமாகத் திரிந்த என்னிடம் உணர்வுமொக்குகளை அரும்ப விட்டதில் இருவருக்கும் பெரும்பங்கு உண்டு.

எல்லாவிதமான கஷ்டங்களின் போதும் கூட, பங்கப்பட்டு விடாத அவரின் மேன்மை வணங்கத்தக்கது. மனிதர்களிடம் பெரும்பாலும் குறைகளையே பார்த்துக் கொண்டிருந்த அந்த நாளில் எனக்கு எதிராளியின் பார்வையிலிருந்தும் ஒரு விஷயத்தைப் பார்க்க வேண்டுமென சொல்லித்தந்தவர் வண்ணநிலவன். அவரது செம்மாந்த அருங்குணங்கள் அவர் சொல்லாமலேயே என்னுள் பல மாற்றங்களை நிகழ்த்தியது.

ஒரு மண் சரிவை எதிர்கொண்ட மலைப்பாதைபோல் என் கடுமைகள் சரிந்து விழுவதை அப்போது கண்டேன். அவர்தான் என் பார்வையை எனக்குக் கூர்மையாக்கித் தந்தார்.

இன்றுவரை என் வாழ்வின் துயர இருட்டினை அவர் தந்த விளக்கின் வழியாகவே கடந்து வருகிறேன். இது என் நண்பன் எனக்கு தந்த கொடை.



# ஒளி குன்றாத புள்ளிகள்

## வண்ணநிலவனின் சிறுகதைகள்

திரு. பாவண்ணன்
எழுத்தாளர்

காலை நேரத்தில் அலுவலகத்துக்குச் செல்ல பேருந்து நிறுத்தத்தில் நான் நின்றிருக்கும்போது தினந்தோறும் ஒரு பெரியவரைப் பார்ப்பேன். இரண்டடிக்கு மூன்றடி அளவுள்ள பைகளை கைக்கு ஒன்றாகத் தூக்கிக்கொண்டு மிகமிக மெதுவாக நடந்து வருவார். இரண்டு பைகளிலும் எலுமிச்சை, தயிர்ச்சோறுப் பொட்டலங்கள். சுமை தாங்கமுடியாமல் இருபது முப்பது அடிகளுக்கு ஒருமுறை பைகளைத் தரையில் வைத்துவிட்டு சிறிதுநேரம் நிற்பார். இறுகிவிடும் கைவிரல்களைத் தளர்த்தி ஊதிவிட்டுக்கொள்வார். வலது கையால் இடதுதோளையும் இடதுகையால் வலதுதோளையும் மாறிமாறிப் பிடித்துக்கொள்வார். இரண்டு கைகளையும் இடுப்புக்குப் பின்னால் அழுத்தியபடி கழுத்தை அண்ணாந்து மடக்குவார். ஆசுவாசமடைந்த பிறகு மீண்டும் பைகளை எடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்குவார். இரண்டுமூன்று கட்ட ஓய்வுகளுக்குப் பிறகு நிறுத்தத்துக்கு வந்து சேர்வார். நெற்றியில் முத்துமுத்தாகத் தேங்கி நிற்கும் வியர்வைத் துளிகளை கைக்குட்டையால் ஒற்றி எடுத்தபிறகு வலிக்கும் கைகளை உதறித் தளர்த்திக்கொள்வார். இப்படி கைகளை உதறியும் கால்களை நீவிவிட்டுக்கொண்டும் கழுத்தை நிமிர்த்தித் திருப்பியும் சுமைவலியிலிருந்து சற்றே நிவாரணமடைந்து மீண்டும் சுமந்துசெல்ல முயற்சி செய்யும் முதியவர்களும் பெண்களும் சிறுவர்களும் நகரத்தில் பல இடங்களில் பார்வையில் தினந்தோறும் பட்டபடி இருக்கிறார்கள். சுமைவலி என்பது ஒருவகையில் வாழும் வலி. அது அவர்களுடைய ஒவ்வொரு அசைவிலும் வெளிப்பட்டபடி இருக்கிறது. வாழும் வலியால் தவிப்பவர்கள் காலம்காலமாக நகரின் விளிம்பில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். எந்தப் பெரிய வெற்றியையும் பற்றிய கனவுகள் அவர்கள் நெஞ்சில் இல்லை. நிம்மதியாக ஒருநாள் பொழுது கழிந்தால் போதும் என்று இருப்பவர்கள் அவர்கள். ஒவ்வொரு கணமும் வலியோடு வாழ்ந்து மறைபவர்களின் எண்ணிக்கை கோடிகளைத் தாண்டக்கூடும். நகரத்துக்கோ அல்லது உலகத்துக்கோ, ஒருபோதும் அவர்கள் முகங்கள் நினைவில் இருப்பதில்லை. ஆனால் அவர்களுடைய தடங்கள் எழுத்துலகில் காணக்கிடைக்கின்றன. முக்கியமாக வண்ணநிலவனின் கதைகளில்.

அறுபதுகளின் இறுதிப்பகுதியில் விலைவாசி ஏற்றத்தாலும் தொடர்ச்சியாக மழைபொய்த்துப் போனதாலும் தமிழ்ச்சமூகம் உள்ளொடுங்கித் தவித்தது. விவசாயம் செய்ய முடியாதவர்கள் வந்த விலைக்கு நிலத்தை விற்று பிழைப்பதற்கு வழிதேடி பிறந்த ஊரைவிட்டு வெளியேறினார்கள். உழைப்புக்கூலிகளாக இருந்தவர்கள் ஊர்மாறி, இடம்மாறி, கிடைக்கும் வேலைகளைச் செய்து பிழைப்பதற்கு ஏற்றபடி தம்மைத்தாமே தகவமைத்துக்கொண்டார்கள். வெளியேற மனமில்லாதவர்கள் செய்யத்தகாத வேலைகளையெல்லாம் செய்து சிறுமைப்பட்டு அவமானத்தால் குன்றிப் போனார்கள். கிராமப் பள்ளிப்படிப்புமட்டுமே மிகப்பெரிய படிப்பாகத் தோன்றிய காலம் அது. தொடர்ந்து படிக்கவும் வழியில்லாமல் உழைப்புக்கூலிகளோடும் ஒன்றவும் முடியாமல் அவர்கள் அடைந்த திரிசங்கு வேதனைகள் ஓராயிரம் பக்கங்களில் எழுதினாலும் தீராத கதைகள். பஞ்சத்தையும் பசியையும் சுட்டிக்காட்டி "அரிசிவிலை என்னாச்சி?", "பருப்புவிலை என்னாச்சி?" என்று முழக்கமிட்டு, பொய்நம்பிக்கை ஊட்டி ஆட்சி மாற்றத்துக்கு வித்திட்டவர்களால் எவ்விதமான மாறுதல்களும் பெரிய அளவில் நிகழாதது ஒருவித வரலாற்று ஏமாற்றம். இந்த இருட்டிலிருந்தும் வெப்பத்திலிருந்தும் இடிபாடுகளிலிருந்தும் குகையிலிருந்தும் சரிவிலிருந்தும் சகதியிலிருந்தும் முட்காடுகளிலிருந்தும் வண்ணநிலவனின் மனிதர்கள் ஒவ்வொருவராக எழுந்து வந்தார்கள்.

"சாமி, எங்கஷ்டத்த தீருமையா..." என்று சுடலைமாடன் முன் நின்று சங்கெடுத்து ஊதி நிற்கும் செல்லையா பண்டிதனின் பாத்திரம் வண்ணநிலவன் கதைகள் முன்வைத்த பாத்திரங்களில் முக்கியமான ஒன்று. பண்டிதனுக்கு நாவிதம் மட்டுமல்ல, வெட்டியான் தொழிலும் கிராமத்தில் உண்டு. இரண்டு வாரங்களாக, ஊரில் எந்தப் பிணமும் விழவில்லை. தொழிலும் நடக்கவில்லை. அதனால் வருமானமும் இல்லை. கையில் இருந்த சில்லறைகள் கொஞ்சம்கொஞ்சமாகக் கரைந்துவிட்டன. பசியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஊரைப் பார்த்து அவன் நேரிடையாக முறையிடமுடியாது. மரபு அதற்குத் தடையாக நிற்கிறது. பண்டிதனுக்கு ஏழெட்டு வயதிருக்கும்போது இந்த மாதிரி கஷ்டம் வந்து, இதே சுடலைமாடன் சாமியின் முன்னால் நின்று அவன் தகப்பன் ஊதியதை நினைத்துக்கொள்கிறான். அதன்பின் அவன் தந்தை சாகும்வரை இப்படி முறையீடு செய்ததில்லை. இந்த முறையீடு, தெய்வத்தைநோக்கிமட்டுமல்ல, மறைமுகமாக ஊராரைநோக்கி விடுக்கும் முறையீடாகும். தனித்தனி மனிதர்களாக இல்லாமல், ஒட்டுமொத்தமாக ஊரைநோக்கி முன்வைக்கும் முறையீடு. மறுநாள் காலை, ஊர்ப்பெரிய மனிதர்கள் எல்லோரும் அவன் வீட்டுக்கு வந்து ஏதாவது பணமோ தானியமோ கொடுத்து உதவுவதற்கு அந்த சங்கொலி தூண்டுதலாக இருக்கும். தம்மையும் தம் கிராமத்தையும் அண்டி இருப்பவனை ஆதரிப்பதைத் தன்

கடமையாக நினைத்த மனிதர்கள் தேடிவந்து உதவிகளை வழங்குவார்கள். அப்பாவின் காலத்தில் ஒரேஒருமுறை ஊதி முறையீடு வைத்ததோடு சரி, அதற்குப் பிறகான காலங்களில் அப்படி ஒரு அவசியம் நேரவில்லை. சில்லறைக்கஷ்டங்கள் வருவதுண்டு, போவதுண்டு என்றாலும் ஒருநாளும் இப்படி ஒரு யோசனை உதித்ததில்லை. இரண்டுவாரமாக தொழிலில்லாத சோகமும் மூன்றுநாள் பட்டினியும் சேர்ந்து பண்டிதனுக்குள் அந்த எண்ணத்தை விதைத்துவிட்டன. இருட்டு இறங்கிய பிறகு, பம்பரக் கயிற்றில் கட்டி தொங்கவிட்டிருந்த இரட்டைச்சங்கை எடுத்துக்கொண்டு சுடலைமாடன் கோயிலுக்குச் செல்கிறான். சத்தம் போட்டு ஆலமரமே அதிர்ந்து விழுகிறமாதிரி கத்திவிட்டு, சங்கை வாயில் வைத்து மூச்செடுத்து ஊதுகிறான். வயிற்றுப் பசியையெல்லாம் வாய்வழியே காற்றாக்கி ஊதுகிறான். அவன் சங்கொலி ஆற்றங்கரை மணல், ஆற்றுத் தண்ணீர், பச்சைவயல்கள், வண்டிப்பாதை, வெள்ளிமலைக்குன்று எல்லாவற்றையும் தொட்டுத்தொட்டு போய்க்கொண்டே இருக்கிறது. மனசில் கொட்டிக்கிடந்த ஆவேசம் தீரும்மட்டும் ஊதிவிட்டு நிறுத்துகிறான். சிறிது நேரம் அவன் கண்கள் சுடலைமாடனையே வெறித்துப் பார்க்கின்றன. சட்டென்று சாமிமுன்னால் நகர்ந்துபோய் ஆலமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த தகர உண்டியலைப் பிடுங்கியெடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்கிறான். கதையின் இந்த இறுதிப்புள்ளி கவித்துவம் நிறைந்தது. தொடக்கத்தில் அவன் சாமியைப் பார்க்கும்போது, சாமியின் முன்னால் உள்ள உண்டியலைத் தொட அவன் நினைக்கவேயில்லை. அவன் நோக்கமெல்லாம் முறையிடுவதுமட்டுமே. முறையிட்டு மனபாரத்தை இறக்கிவைத்த பிறகுதான் அவன் பார்வை உண்டியலின் பக்கம் செல்கிறது. நெஞ்சையே நடுங்கவைக்கிற முறையீடு, தெய்வத்தையும் கண்டிப்பாக நடுங்கவைத்திருக்கும். அந்தத் தெய்வமே, தன்னை உற்றுப் பார்ப்பவனுடைய பார்வையை உண்டியலின் திசையில் செலுத்தியிருக்கும் என்று நினைப்பதற்கான வாய்ப்புகளே அதிகம். அது ஒருவகையில் தெய்வம் காட்டிய வழி. தெய்வம் தன் மடியில் சேகரித்துவைத்திருப்பதை, ஆபத்துச் சமயத்தில் தன் பிள்ளைகளுக்குக் கொடுப்பதில் தவறென்ன இருக்கமுடியும்? மக்களின் உதவிகள் மறுநாள் காலை கிடைத்தாலும் கிடைக்கலாம். ஒருவேளை கிட்டாமல் போனாலும் போகலாம். தெய்வம் விடியும்வரை காத்திருக்கவில்லை. உடனடியாக உதவுகிறது.

"மயான காண்டம்" என்னும் தலைப்புடன் மிகவும் நெருக்கமாகத் தொடர்புகொண்ட ஒரு பெயர் அரிச்சந்திரன். அரசனாக இருந்தாலும் விதிப்பயனால் மயானத்தில் வெட்டியானாக வேலை செய்யும் நெருக்கடிக்கு ஆளானவன். எவ்வளவோ இடர்ப்பாடுகள் நேர்ந்தாலும் தன் மனம் கொண்ட உறுதியிலிருந்து பின்வாங்காதவனாக இருந்தவன். இறுதிக்கட்டத்தில், தன் மனைவியையே வெட்டுவதற்கு ஓங்கிய அவன் வாள், பூமாலையாக அவள் கழுத்தில் விழுந்தது. செல்லையா பண்டிதனுடைய கை மாலைக்குப் பதிலாக உண்டியலை எடுத்துக்கொள்கிறது. சத்தியமான ஆவேசத்தின் உச்சத்தில் பண்டிதன் தெய்வத்துக்கு நெருக்கமாக சில கணங்கள் நின்று பிறகு மெல்லமெல்ல தரைக்கு இறங்கிவருகிறான். மயான காண்டம் கதையின் மையம் மிக எளிமையானது. கிராமமோ, நகரமோ, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாத்திரம் உருவகிக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பாத்திரங்களுக்கும் அடியில் அது வாழும் வலி படர்ந்திருக்கிறது. அடர்த்தியான முள்பரப்பைப்போல.

இல்லாத கொடுமையால் தவிக்கும் பண்டிதனையும் முறையீட்டின் நியாயத்தை உணரும் தெய்வத்தையும் இருவேறு புள்ளிகளாக இடம்பெற்ற மயானகாண்டம் சிறுகதைக்கு நேர்மாறாக, இரண்டு குணங்களும் ஒருங்கே ஒரே மனிதரிடம் இயங்கும் அற்புதக்கணத்தைச் சித்தரிக்கும் சிறுகதை யுகதர்மம். அக்கதையில் இடம்பெறும் குமாஸ்தாப்பிள்ளையின் தவிப்புகளுக்கு முடிவே இல்லை. முப்பது வருட குமாஸ்தா வாழ்வில் பசிக்கு உணவைத் தேடமுடிந்ததைத் தவிர வேறெதையும் செய்ததில்லை. தாயில்லாத பிள்ளைகளுக்கு சரியான உணவு இல்லை. திருமணவயதைத் தாண்டும் பெரியவளுக்கு ஒரு வழியைக் காட்ட இயலவில்லை. ஒருநாள் வருமானத்தில் எஞ்சிய சில்லறையில் மூத்தவளுக்கு ரிப்பன் வாங்கிக்கொண்டு திரும்பியபோது, அவள் தன் மனத்துக்குப் பிடித்தவனோடு வீட்டைவிட்டு வெளியேறிப்போன செய்தி கிடைக்கிறது. அதிர்ச்சியாக இருந்தாலும் அவர் நிலைகுலையவில்லை. குத்துக்கல்லாக சிறிதுநேரம் நிற்கிறார். பிறகு, இதைத்தவிர வேறென்ன வழி அவளுக்கு இருக்கிறது என்று அவளுடைய கோணத்திலிருந்து யோசித்து உணர்மையை உணர முயற்சி செய்கிறார். "கொஞ்ச நாளைக்கி சந்தி சிரிக்கும்.... பரவாயில்ல..." என்று தன்னையே தேற்றிக்கொள்கிறார். தனக்கு அவள் இரண்டாம் தாரமாகவாவது கிடைக்க மாட்டாளா என்று ஏக்கத்துடன் காத்துக்கிடந்தவன் துக்கம் விசாரிக்கிற சாக்கில் உலகதர்மத்தைப்பற்றிப் பேசத் தொடங்கியதும் ஆத்திரம் தாங்கமுடியாமல் வெடிக்கிறார். அவள் செய்கையில் உள்ள நியாயத்தை அழுத்தமாகச் சொல்லி கடைக்காரப்பிள்ளையின் வாயை அடைக்கிறார். யுகதர்மம் என்பது எழுதிவைக்கப்பட்ட நிரந்தர விதியல்ல. சங்கடத்தைத் தாண்டிச் செல்ல உதவுகிற ஒரு பற்றுக்கோல். அவ்வளவுதான். ஒவ்வொரு தருணத்திலும் அதன் கோலமும் வெளிப்பாடும் மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படி கோடிக்கணக்கில் உருவான கோலங்களைக் கொண்டதுதான் யுகதர்மம். ஓங்கிய குரலில் பேசும் குமாஸ்தாப்பிள்ளை தன் மகளுக்காக மட்டும் பேசவில்லை, ஒரு தரப்பின் குரலாக நின்று பேசுகிறார் என்றும் வாசிக்கமுடியும். வறுமைக்கோலத்தாலும் வசதியின்மையாலும் பெற்ற பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் செய்ய வேண்டிய திருமணத்தைக்கூட செய்ய வழியில்லாமல் தவித்துத் தடுமாறுகிற தரப்பின் சார்பில் அவர் குரல் கடைக்காரப்பிள்ளையின் முன்னால் ஒலிக்கிறது. ஆபத்தில் துணையாக நிற்கமுடியாத தர்மத்தைப் பொருட்படுத்தாமல் மனசாட்சிப்படி நடப்பதை ஒரு புதிய தர்மமாக நிறுவுவதை அவர் குரலில் உணரமுடிகிறது. வாழும் வலியை ஒவ்வொரு கணமும் உணர்கிற ஒருவரால்மட்டுமே அப்படி பொங்கியெழமுடியும்.

ஒரு தரப்பின் குரலாக ஒரு பாத்திரம் பேசும்போது பொதுவாக கலையழகு குலைந்துபோவதுதான் வழக்கம். தமிழில் பிரச்சாரத்துக்காக எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான கதைகள் இப்படிக் குலைந்துபோனவை. ஆனால், வாசகர்கள் மனமொன்றிப் படிக்கும்படியும் கலையழகில் குறை வைக்காமலும் எழுதியவர் வண்ணநிலவன். கதைத் தருணங்களை அவர் மனம் கண்டடையும் சமயத்திலேயே அதற்குரிய சட்டகமும் மிகச்சிறந்த முறையில் பொருத்தமாக

உருவாக்கிவிடுகிறது. அந்தத் தேர்ச்சி, மிகச்சிறந்த சிறுகதையாசிரியராக வண்ணநிலவன் விளங்குவதற்கான காரணங்களில் ஒன்று.

"சாரதா" சிறுகதையில் வெளிப்படும் அழகம்மை பாத்திரம்கூட பாதிக்கப்பட்ட ஒரு தரப்பின் அடையாளம் என்றே சொல்லவேண்டும். இரண்டாம்தாரமாக மணந்துகொண்ட தன் மனைவி, மூத்த மனைவியின் மகளுக்கு இழைக்கும் கொடுமையைப் பார்க்க முடியாதவராக, தந்தையே அவளுடைய தோழி புவனேஸ்வரி வீட்டுக்கு பஸ் ஏற்றிவிடுகிறார். சான்றிதழ்களையெல்லாம் எடுத்துக்கொண்டு உருவாகப் போகும் ஒளிமயமான எதிர்காலத்தைக் கனவு கண்டபடிதான் அவளும் பயணமாகிறாள். துரதிருஷ்டவசமாக அந்தத் தோழி, அவள் எடுத்துச் சென்றிருந்த முகவரியில் வசிக்கவில்லை. வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய்விட்டதாகச் செய்தி கிடைக்கிறது. இருட்டு நேரத்தில் பேருந்து நிலையத்தில் போக்கிடம் இல்லாமல் நின்றுகொண்டிருந்தவளை. காவலர்கள் அழைத்துவந்து விபச்சார வழக்கைப் பதிவுசெய்து, காவல்நிலையத்தில் சிறைவைக்கிறார்கள். மறுநாள் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்து சாட்சிக்கூண்டில் நிறுத்துகிறார்கள். அவளோடு விபச்சார வழக்கில் கைதுசெய்யப்பட்டு அழைத்துவந்த பல பெண்களும் நிற்கிறார்கள். அவளுடைய அழுகையையும் பதில்களையும் சிறிதுகூட பொருட்படுத்திக் கேட்காமல் விரசமாகக் கிண்டல் பேசியபடியே இருக்கிறார்கள் காவலர்கள். எல்லைமீறிப் போகும் ஒரு கட்டத்தில் கைதாகி வந்திருக்கும் அழகம்மை, "என்ன ஒரேடியாத்தான் பேசிகக்கிட்டே போறீய?..." என்று ஏட்டய்யாவைப் பார்த்துச் சத்தமாக அதட்டிப் பேசத் தொடங்குகிறாள். தன்னோடு தொழில் செய்கிற ஒருத்தியே கிண்டலாகப் பேசும்போது "பொத்திகிட்டு போ தூர..." என்று விரட்டியடிக்கிறாள். அவளுக்காக அபராதம் செலுத்தி, கேண்டினில் சிற்றுண்டி வாங்கிக்கொடுத்து, ஊருக்குச் செல்ல பஸ் சார்ஜ் கொடுத்து அனுப்பிவைக்கிறாள்.

ஒரு கதையில் பல பாத்திரங்கள் இடம்பெறுகிறார்கள். எல்லாரும் இப்படி ஒரு தரப்பின் குரலாக வெளிப்படுவதில்லை. அப்படிப் பொங்கிக் குமுறும் பாத்திரங்களுக்குக்கூட, அப்படி இயங்குவது இயல்பான ஒரு விஷயமல்ல. தற்செயலாக அக்கணம் வெடிக்கிறது. எளிய மனிதர்களுக்குள் இயங்கும் இந்த அறச்சீற்றத்தின் கணத்தைக் கண்டடைந்தவர் வண்ணநிலவன். எல்லாருமே ஏதோ ஒருவகையில் பாவப்பட்டவர்கள். தினசரி வாழ்க்கைப்பாட்டுக்கு தாளம் போடுகிறவர்கள். அவர்கள் நெஞ்சில்தான் இந்தச் சுடர் ஒளிவிட்டபடி இருக்கிறது. சீற்றத்தின் உச்சத்தில் ஆப்தவாக்கியத்தைப்போல அவர்கள் வெடித்துப் பேசுகிற சாதாரண சொற்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இடர்ப்பாடுகளில் தத்தளிக்கும் மனிதர்களின் சித்திரங்களை பலவிதங்களில் தீட்டிக்காட்டுகிறார் வண்ணநிலவன். அவற்றில் துன்பங்களால் துவண்டு வாடி ஒடுங்காத உத்வேகம் மிகுந்த பாத்திரங்கள் மறக்க முடியாதவர்கள். "துன்பக்கேணி" சிறுகதையில் இடம் பெறும் வண்டிமலைச்சி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. "எஸ்தர்" கதையில் இடம்பெம் எஸ்தர் மற்றொரு எடுத்துக்காட்டு. அலைகளைப் பொருட்படுத்தாமல் எதிர்நீச்சல் போட்டு கடந்துவிட முயற்சி செய்யும் வேகம் அவர்களிடம் வெளிப்படுகிறது. மறுகரையை அடைய முடியாதவர்களாகவே அவர்கள் வாழ்ந்து மறைந்து போனாலும், அவர்களுடைய வேகத்தின் காரணமாகவே, நம் நெஞ்சைத் தொட்டவர்களாகவும் நெஞ்சில் நிறைந்தவர் களாகவும் இருக்கிறார்கள்.

வண்டிமலைச்சி கருவுற்றிருக்கிறாள். கொலைக்குற்றத்துக்காக அவள் கணவன் சிறைக்குப் போயிருக்கிறான். வாழ்க்கைத்தேவைக்கான பணத்தை அவளே தேடிச் சம்பாதிக்கவேண்டிய நெருக்கடி. சாராயக் கேன்களை இரவோடு இரவாக சுமந்துபோய் நாசரேத்தில் சேர்க்கவேண்டும். துணைக்கு ஆண் ஆள்களோடு தேரிக்காட்டுக்குள் கேன்களைச் சுமந்து செல்கிறாள். துரதிருஷ்டவசமாக, காவலர்களிடம் பிடிபட்டு, திருச்செந்தூர் நீதிமன்றத்தில் உட்கார்ந்திருக்கிறாள். தொடக்கத்தில் கணவனின் முரட்டுத்தனமான கொலை வெறியால் அவள் ஆதரவில்லாமல் நிற்கவேண்டிய சூழல் உருவானது. எடுத்த வேலையை முடிக்கும் முன்பாகவே, களைப்பின் காரணமாக, துணைஆட்களின் சாராயம் அருந்தும் இச்சையால், நீதிமன்றத்தின் வாசலில் உட்கார்ந்திருக்க வேண்டிய சூழல் உருவானது. இரண்டு தருணங்களிலும் அவள் தரப்பில் எவ்விதமான பிழையும் இல்லை. ஆனால் சூழலின் காரணமாக, அந்த வேதனையை அவள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. வண்டி மலைச்சியைப்போலவே வாழும் வேகம் கொண்டவள் எஸ்தர். ஒரு நெருப்புக்குச்சிக்குக்கூட வழியில்லாமல் போய்விட்ட அவலநிலையில் தத்தளிக்கிறது அவள் குடும்பம். ஊரில் பிழைக்க வழியே இல்லை. உடல்உழைப்பாளர்களாக வெளியூரில் சென்றுதான் பிழைக்கவேண்டும். உந்துசக்தியாக இருந்து அவர்களுக்கு உழைக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறாள் எஸ்தர். முதுமையாலும் வியாதியாலும் படுத்தபடுக்கையாகித் தவிக்கிற பாட்டியை தம்முடன் எப்படி அழைத்துச்செல்வது என்கிற கேள்விக்கு விடைகண்டறிவது யாருக்கும் எளிதாக இல்லை. நீண்ட யோசனைக்குப் பிறகு, நள்ளிரவில் ஒரு வழியைக் கண்டடைகிறாள் எஸ்தர். மறுநாள் காலை பாட்டியின் ஈரம் நிரம்பிய கண்கள் கூரையைப் பார்த்து நிலைகுத்தி நிற்கின்றன. அவளை நல்லடக்கம் செய்ய மலிவுவிலையில் மரணப்பெட்டி வாங்கிவரப்படுகிறது. வாழும் உத்வேகம் எல்லையற்ற புள்ளிவரைக்கும் நீண்டுசெல்லும் அற்புதத்தை வண்ணநிலவன் நுட்பமாகக் கண்டடைகிறார்.

"ஆடிய கால்கள்" சிறுகதையில் இடம்பெறும் ரஞ்சிதம் வாழ்வை எதிர்கொள்ளும் விதத்தில் வேகமும் விவேகமும் இணைந்திருக்கின்றன. கொடைக்கு சலங்கை கட்டி ஆடுகிறவள் ரஞ்சிதம். மேடையில் அவளுக்குப் பொருத்தமான ஜோடியாக நின்று ஆடுபவன் சிதம்பரம். இருவருடைய ஆட்டத்தையும் கண்ட கண்கள் அவர்களைப் பொருத்தமான ஜோடி என்று சொல்லாமல் நகர்ந்ததில்லை. ஆனால் வாழ்க்கை அவர்களை ஒன்று சேர அனுமதிக்க வில்லை. வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவள் கூடை முடையத் தொடங்குகிறாள். கூடை முடையும் படிமம் கிட்டத்தட்ட தன் வாழ்வை தானே முடைந்து கொள்கிற படிமமாக விரிவடையும் ஆற்றல் உள்ளது. இதற்கு நேர்மாறாக, சிதம்பரம் தன் வாழ்வை சரியாக முடைந்துகொள்ளும் ஆற்றல் அற்றவனாக இருக்கிறான். ஓட்டலில் தண்ணீர் மொண்டு ஊற்றுகிறான். ஒரு தேநீர்

வாங்கித் தரும்படி சின்னப்பிள்ளைகளிடம் கையேந்து கிறான். சின்னப்பிள்ளைகள் அவனை புதிய பாட்டுக்கு நடனமாடச் சொல்லி அலைக்கழிக்கிறார்கள். முடைந்த கூடைகளைச் சுமந்துகொண்டு விற்பனைக்காக கடைத் தெருப்பக்கம் வந்தவளுடைய பார்வையில் இக்காட்சி தென்படுகிறது. சட்டென்று, அங்கே சென்று எல்லாரையும் விரட்டிவிட்டு அவனை அழைத்துச் சென்று ஓட்டலில் இட்லி வாங்கித் தருகிறாள். வாழும் ஆர்வத்தைத் தவிர, வேறெந்த வேகமும் இல்லாத அவள் மனத்தில் நிறைந்திருக்கும் இந்தக் கனிவும் கருணையும் முக்கியமானது.

இலக்கியத்தின் சாரம் என்ன என்கிற கேள்வி எழும்போதெல்லாம் இந்தக் கதையை நினைத்துக் கொள்வதுண்டு. அந்த நினைவு "தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி" என்னும் வள்ளலாரின் நெறியை உணர்த்தும் வரிவரைக்கும் அழைத்துச் செல்லும். கனிவும் கருணையும் வாழ்க்கைக்கு ஒளிகாட்டி நிற்கும் சுடர்கள். "எங்கே கருணை இயற்கையில் உள்ளன, அங்கே விளங்கிய அருட்பெருஞ்சிவமே, யாரே என்னினும் இரங்கு கின்றோர்க்குச் சீரே அளிக்கும் சிதம்பர சிவமே" என்னும் அருட்பா வரிகளும் தொடர்ந்து நினைவில் நகரும். ரஞ்சிதம் போன்ற பெண்கள் துறவிகள் அல்ல. படிப்பாளிகளும் அல்ல. பெரியபெரிய இலட்சியங்களை மனத்தில் கொண்டு, அவற்றை அடைய உழைப்பவர்களும் அல்ல. மிகமிகச் சாதாரணமானவர்கள். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இயல்பான வகையில் அவர்கள் கருணை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள்.

"திருடன்" கதையில் இடம்பெறும் அமலியிடம் வெளிப்படும் கருணையுணர்வு இன்னும் விசேஷமானது. ஆடிய கால்கள் சிறுகதைக்குள் சிதம்பரம் யார் என்கிற அறிமுகம் ரஞ்சிதத்துக்கு இருக்கிறது. சிதம்பரத்தின் உயர்வையும் தாழ்வையும் பார்த்தவளாக சித்தரிக்கப் படுகிறாள் ரஞ்சிதம். ஆனால் அந்தத் திருடனுக்கும் அமலிக்கும் இடையே அப்படி எந்த அறிமுகமும் இல்லை. காலையில் பாத்திரம் தேய்க்க வந்த பவுன் கிணற்றுக்குள் முனகும் சத்தம் கேட்டு, கிணற்றில் ஒளிந்திருக்கும் திருடனைப்பற்றிய தகவலை சர்ச்சுக்குள் பரப்புகிறாள். கூட்டம் கூடிவிடுகிறது. கிணற்றிலிருந்து வெளியேற வைத்து, அடித்து அறையில் அடைக்கிறார்கள். இரவு முழுதும் கிணற்றில் இருந்ததால் குளிர் தாள முடியாதவனாக குடிப்பதற்கு சூடாக ஏதாவது கேட்கிறான் திருடன். "திருட வந்த பயலுக்கு சூடா வேற கேக்குதாக்கும்..." என்று கேட்டுக்கொண்டே எட்டி உதைக்கிறார்கள். இருண்ட அறைக்குள் எங்கோ போய் விழுகிறான் அவன். கிராம முன்சீப்பிடம் தாக்கல் சொல்ல அனைவரும் கலைந்து போகிறார்கள். வீட்டிலிருந்து எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தபடி இருந்த அமலி யாரும் இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொண்டு அறைக்கதவைத் திறந்து அவன் கட்டுகளை அவிழ்த்து விடுதலை செய்கிறாள். "இந்தா.. காப்பிய குடி.. குடிச்சிட்டு வயக்காட்டு வழியாக ஓடிப் போயிரு...." என்கிறாள். அவன் கையெடுத்துக் கும்பிடுவதையோ அல்லது "நீங்க நல்ல இருக்கணும்.." என்று கண்கலங்கியதையோ அவள் கவனிக்கவே இல்லை. "சரி சரி, நீ போயிரு யாராவது வந்திரப் போறாங்க..." என்று அவசரப்படுத்துவதிலேயே குறியாக இருக்கிறாள். நன்றியை எதிர்பார்க்காத அக்கருணை அல்லவா இலக்கியத்தின் சாரம்.

"ஞானமானது வெளியில் நின்று கூப்பிடுகிறது, வீதிகளில் நின்று சத்தமிடுகிறது" என்னும் பைபிள் வரியொன்றை கதையின் போக்கில் எழுதிச் செல்கிறார் வண்ணநிலவன். அகக்காதை திறந்து வைத்திருப்பவர்களுக்கு அந்தக் குரல் கேட்கிறது. அமலியிடம் வெளிப்படும் கருணைக்கும் இவ்வரிக்கும் உள்ள தொடர்பு தற்செயலானது. ஞானம் மிகப்பெரிய செல்வம் என்பதில் ஐயமே இல்லை. ஆனால் கருணையில்லாத ஞானம் மிகப்பெரிய பாரம். கருணையில்லாத கண்ணும் இயைபில்லாத பாட்டும் பயனற்றவை என்பது வள்ளுவரின் வாக்கு. மிக இயல்பாகவே நம் நெஞ்சில் படிந்திருக்கிற உணர்வு கருணை. ஆனால் செத்தைகளும் பாசியும் ஆகாயத் தாமரையும் அடர்ந்து குளத்துநீரை மறைத்திருப்பதுபோல, நம் சமூகத்தகுதிகளும் செல்வமும் அகங்காரமும் அடர்ந்து, கருணையின் ஊற்றுக்கண்ணை மறைத்திருக்கின்றன. அவற்றை விலக்கி கருணையை அடையாளம் காட்டுகின்றன இப்படிப்பட்ட கதைத்தருணங்கள்.

அமலியிடம் வெளிப்படும் கருணையையும் அவள் கருவுற்றிருப்பதையும் இணைத்துப் பார்க்கலாம். மற்றவர்கள் எல்லோரும் அடிபடுபவனை ஒரு திருடனாகப் பார்த்து உதைக்கும்போது அவள்மட்டுமே ஒரு தாயாக நின்று அவனைக் கவனிக்கிறாள். அவள் தாய்மையின் காரணமா கவே அவன் குரல் அவள் நெஞ்சைத் தொட்டு அசைக்கிறது.

பெண்ணின் மனத்தில் இயங்கும் கருணையைச் சித்தரிக்கும் இன்னொரு சிறுகதை "அவன் அவள் அது". ஒரு சின்னக் குடும்பச்சித்திரமாகவே அக்கதை முன்வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்தில் இரண்டு ஆண்பிள்ளைகள். மூத்தவன் தாமஸ் குடிகாரனாக இருக்கிறான். இளையவன் யோசுவா குடும்பத்துக்காகச் சம்பாதிப்பவன். இளையவனுக்காக வாழ்க்கைப்பட்டு வந்தவள் பரிமளா. தன் மனைவி தனக்குரிய சேவைகளில் கவனம் செலுத்தினால்மட்டும் போதும் என்று நினைக்கிறது ஆண் மனம். அவனுக்குரிய சேவைகளில் எந்தக் குறையும் நேராதபடி பார்த்துக்கொள்கிறாள் பரிமளா. அத சமயத்தில் அகாலத்தில் வீடு திரும்பும் மூத்தவனுக்காகக் காத்திருந்து, கதவைத் திறந்துவிட்டு, சாப்பாடு போட்டு, பேசி அறைக்கு அனுப்புவதையும் அக்கறையோடு செய்கிறாள். அந்த அக்கறையும் கருணையும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவள் வரும்வரைக்கும் நெடுநேரம் காத்திருந்து அவனுக்கு செய்யவேண்டிய பணிவிடையெல்லாம் செஞ்சாச்சி இல்லே, பிறகு இன்னும் எதுக்கு உட்கார்ந்திருக்கே. பேசாம படு என்று குத்திக்காட்டுகிறான். ஆதரவில்லாத தன் அண்ணன்மீது அவள் காட்டும் கருணையைக் கண்டு உண்மையில் அவன் மகிழ்ச்சியடைவதே இயல்பாக இருக்கமுடியும். மாறாக, அவன் சீறிவிழுகிறான். உடைமையுணர்வு அவன் மனத்தைக் கல்லாக்கிவிடுகிறது. உடைமையாக ஆட்பட்டபோதும் அவள் மனம் கருணையால் நிரம்பியிருக்கிறது.

வண்ணநிலவனுடைய பாத்திரங்கள் வாழ்க்கைக்கான தேவைகளை நாடி நகர்ந்துகொண்டே இருப்பவர்கள். வாழ வழியில்லாத ஊரில், பத்து ரூபாய் பணத்துக்காக தரகனை நம்பி பட்டணத்துக்கு பிள்ளைகளை அனுப்பிவைக்கிற பெற்றோர்கள் முதல் (நரகமும் சொர்க்கமும்) எட்டுமாத வாடகைப்பாக்கியை கொடுக்கவும் முடியாமல் வீட்டைக் காலிசெய்து தரவும் முடியாமல் தவிக்கிற பெற்றோர்கள்

வரை (பிழைப்பு) ஏராளமானவர்கள் அந்தப் பாதையில் நடந்து செல்கிறார்கள். இளைப்பாற ஒரு மரத்தடி நிழலோ, தாகம் தீர்க்க ஒரு நீர்நிலையோகூட இல்லாத வறுமையின் ஒற்றையடிப்பாதையில் கொளுத்தும் வெயிலில் நடந்து கொண்டே இருக்கிறார்கள் அவர்கள். வலிமிகுந்த அவர்களுடைய வாழ்க்கைத் தருணங்களைக் கதையாக்கிய தற்காக மட்டுமல்லாமல், நெகிழ்ச்சியின் உச்சகட்டக் கணங்கள்வழியாக வெளிப்படும் மானுடஉணர்வை காட்சியனுபவமாக்கியதற்காகவும் வண்ணநிலவன் நம் பாராட்டுதல்களுக்கு உரியவராகிறார்.

"பிணந்தூக்கி" சிறுகதையில் இடம்பெறும் ரங்கன் பலவிதமான நெருக்கடிகளில் சிக்கித் தவிப்பவன். ஆனால் தன் பிள்ளை குப்புறப் புரண்டு படுத்தபோது போட்டோ எடுத்துக்கொடுத்துவிட்டு, அதற்குரிய பணத்தை வாங்கா மலேயே அனுப்பிய பாப்புப்பிள்ளை மரணமடைந்தபோது, பிணந்தூக்கி வேலை செய்துவிட்டு, கண்களில் கண்ணீரைத் தேக்கிக்கொண்டு காசு வாங்காமலேயே போகிறான். அவன் கடைப்பிடிக்கும் மௌனம் மிகவும் முக்கியமானது. மேலோட்டமான பார்வையில், காசு வாங்காமல் பாப்புப்பிள்ளை செய்ததற்கும் பிணத்தைத் தூக்கிவிட்டு காசு வாங்காமல் இவன் திரும்பியதற்கும் சரிசெய்து சமப்படுத்தியதுபோல ஒரு தோற்றம் தந்தாலும் அது உண்மையல்ல. சரிப்படுத்துவதுதான் அவன் எண்ண மென்றால் அவன் கண்ணீருக்கு என்ன பொருள்? ஒரு பிணந்தூக்கியாக, நாள்முழுக்க சுடுகாட்டில் உழல் கிறவனாக, அவ்வளவாக சமூககௌரவமில்லாத தொழிலைச் செய்பவனாக, ஊர்க்காரர்கள் அனைவரும் பார்த்த ஒரு தருணத்தில், அவனை ஒரு மனிதனாகப் பார்த்துப் பேசி படமெடுத்துக் கொடுத்தவர் அவர். தன்னை சகமனிதனாக நடத்தியவர் மறைந்துபோனதுதான் தாங்கமுடியாத பெருந்துயரமாக அவனை வாட்டி யெடுக்கிறது. அந்த மரணவீட்டில் சிந்தப்பட்ட ஒவ்வொரு கண்ணீர்த்துளிக்கும் ஏராளமான பொருளிருக்கும். கணவன், தந்தை, சகோதரன், நண்பன், கடைக்காரர் என பல உறவுநிலைகளில் அவரை வைத்துப் பார்த்தவர்கள், அந்த இழப்பை நினைத்து கண்ணீர்விட்டு அழுதிருக்கக்கூடும். அதைவிட, தன்னை சகமனிதனாக நடத்திய ஒருவரின் மறைவுக்காக அவன் சிந்திய கண்ணீர் மிகமுக்கியமானது.

வாழ்க்கைத் தருணங்களைக் கடந்து மனநுட்பங்கள் சிலவற்றையும் கலைப்படைப்புகளாக மாற்றியிருக்கிறார் வண்ணநிலவன். உடனடியாக நினைவுக்கு வருவது உள்ளும் புறமும் சிறுகதை. உள்ளே அன்பைத் தேக்கிவைத்தபடி, புறத்தில் வெறுப்புற்றவர்கள்போல சதாநேரமும் சண்டையிடும் நீலா - சங்கரன் தம்பதியின் சித்திரத்தை அக்கதையில் தீட்டிக் காட்டுகிறார் வண்ணநிலவன். ஒரு நிமிடம் ஆளைக் காணவில்லை என்றதும் எங்கே எங்கே என்று பதற்றத்தோடு தேடத் தொடங்குகிறான் சங்கரன். என்னதான் சண்டைபோட்டாலும் தன் கணவன் வாய்க்கு ருசியாக சாப்பிடவேண்டும் என்பதற்காக, இட்லிக்குத் தொட்டுக்கொள்ள எண்ணெய் வாங்க தனியாக கடைக்கு ஓடுகிறாள் நீலா. இப்படி உள்ளும் புறமும் மாறுபடும் உணர்வுகளில் எது உண்மை, எது போலியானது என்பதை அறிவது சிரமம். உண்மையில் இருவருமே ஒருவர்மீது ஒருவர் கட்டற்ற அன்புள்ளவர்கள். சண்டையிட்டு வாதிக்கும்போது வெளிப்படும் வார்த்தை களின் அடியோட்டமாக உள்ள அன்பின் ஈரம் மிகநுட்பமாகத் தொட்டுக் காட்டப்படுகிறது.

மனத்தின் ஒளிந்திருக்கும் வன்மத்தை அடையாளம் காட்டும் படைப்பு "மிருகம்". எல்லோரும் ஊரைவிட்டு வெளியேறிவிட்ட தெருவில் தனியாக இருக்கிறார் சிவனுநாடார். எல்லா வீடுகளும் பூட்டிக் கிடக்கின்றன. நார்ப்பெட்டியில் சுள்ளிவிறகுகளைச் சேகரித்துக்கொண்டு தெருவுக்குள் நுழையும்போது, தற்செயலாக சாத்திக்கிடக்கிற ஒரு கதவைத் தலையால் முட்டித் திறக்க முயற்சிசெய்கிற ஒரு நாயைப் பார்க்கிறார். அவசரமாக, அந்த வீட்டையடைந்து நாயைத் தொடர்ந்து அவரும் அந்த வீட்டுக்குள் நுழைகிறார். அடுப்பங்கரை, நெல்குதிர் என ஒவ்வொரு இடமாகப் பார்க்கும் அவர் கண்களில் ஒரு ஓவல் டின் தென்படுகிறது. ஆசையோடு திறந்து பார்க்கிறார். அடியில் கொஞ்சம் கருப்புக்கட்டித்தூள் கிடக்கிறது. இரண்டுவேளை காப்பிக்கு அது உதவக்கூடும் என்கிற எண்ணத்தில் டின்னில் மொய்த்திருக்கிற எறும்புகளை அப்புறப்படுத்துகிறார். அவ்வப்போது திறந்துமூடும் அடுப்படிக்கதவுக்குப் பின்னால் இருந்து நாய் எட்டிப் பார்ப்பது தெரிகிறது. அதன் பார்வை அவருக்கு உள்ளூர ஒருவித கூச்சத்தைக் கொடுத்திருக்கலாம். மெல்ல அதுவே வன்மமாக மாறுகிறது. கதவிடுக்கில் அது தலையைக் கொடுத்திருக்கும் சமயத்தில் சட்டென செயல்பட்டு கதவுகளை இறுக்கி அதைக் கொல்ல முயற்சி செய்கிறார். அசைவில்லாமல் விழுந்து கிடக்கும் கோலத்தையும் சிந்திய ரத்தத்துளிகளையும் பார்த்த பிறகு, அது இறந்து போயிருக்கலாம் என்ற முடிவோடு அந்த வீட்டைவிட்டு வெளியேறுகிறார். வீட்டுக்குள் நுழையும்போது இல்லாத வன்மம், எதிர்பாராத கணத்தில் அவனுக்குள் பொங்கியெழுந்ததை எப்படிப் புரிந்துகொள்வது? தனிமையும் வெறுமையும் மனிதனிடம் உள்ள மனிதஉணர்வை சிறுகச்சிறுக அப்புறப்படுத்தி மிருகமாக்கி விடுகிறதா? சமூகமாக வாழும்போதுமட்டுமே, அவன் மனிதனாக வாழ்வதாக எடுத்துக்கொள்ளலாமா? சிவனுநாடார் தன் வீட்டைநோக்கி வேகவேகமாக நடந்து வந்து, வீட்டுக்குள் நுழைந்து கதவை அவசரமாகச் சாத்திக் கொள்ளும் சித்தரிப்பு வேட்டையாடிய ஒரு மிருகம் தன் குகையைநோக்கி திரும்பிவரும் காட்சிக்கு நிகரானதாக உள்ளது.

"அயோத்தி" வண்ணநிலவனுடைய நுட்பம் மிகுந்த மற்றுமொரு படைப்பு. பால்டின் வாங்கிவரச் சென்ற கணவன் வெறுங்கையோடு வருவதைக் கண்டு எரிப்பது போலப் பார்க்கிற சந்திரா டீச்சரின் தோற்றத்தோடு கதை தொடங்குகிறது. அவள் எதிர்பார்ப்பதும் நடைபெறுவதும் ஏறுக்குமாறாகவே அமைந்துபோவதற்கு அக்காட்சி ஒரு சின்ன எடுத்துக்காட்டு. அதன் வழியாக நாம் நிறைய ஊகித்துக்கொள்ளலாம். அந்த ஊகங்களின் பின்னலை பாஸ் அத்தானைத்தான் கைப்பிடிக்கப்போகிறோம் என அவள் பருவவயதில் எதிர்பார்த்ததையும் சூழலின் காரணமாக பாஸ் அத்தானுக்குப் பதிலாக அவனைக் கைப்பிடித்ததையும் கொண்ட இறந்தகாலப் புள்ளிவரைக்கும் கொண்டுசெல்ல முடியும். தற்சமயம் பாஸ் அத்தான் ஊருக்கு வந்திருக்கிறான், அவனைச் சென்று பார்க்கவேண்டும் என்பது அவள் விருப்பம். வெளியே காற்றும் மழையுமாக இருக்கிறது. அந்த விருப்பம் கைகூடுமோ இல்லையோ என்கிற பதற்றம்தான் அவளை ஆத்திரம் கொள்ளவைக்கிறது. கடைக்கார நாயுடு இல்லை என்று திரும்பிவந்ததை ஒரு முகாந்திரமாகக்கொண்டு அவள் வெடித்துவிடுகிறாள்.

"சண்டாளப் பாவியோ.. இப்பிடி என்னய கொண்டுபோயி பாழுங்கெணத்துல தள்ளுனமாதிரி பண்ணிட்டாங்களே..." என்று மனம்குமுறி அழுகிறாள். அவள் அழுகையைக் காணப் பொறுத்துக்கொள்ள இயலாத அவன் அவளை நெருங்கி அமைதிப்படுத்துகிறான். "எந்திரி சந்திரா, பால் டின் வாங்கிகிட்டு, அப்பிடியே பாஸ் அத்தானையும் பாத்துட்டு வந்துரலாம்..." என்று அழைக்கிறான். அயோத்தி என்னும் தலைப்பு மனநுட்பத்தை உணர்வதற்கு ஒரு கூடுதல் உபகரணமாக விளங்குகிறது. பாஸ் அத்தானின் அன்புக்காக உள்ளூர ஏங்குகிறாள் சந்திரா. கைநழுவிப் போன அவனுடைய உறவுக்காக நெஞ்சுக்குள் கண்ணீர் வடிக்கிறாள். ஆனால் அந்த அன்பை ஓர் எல்லைக்குமேல் அவளால் வெளிக்காட்டமுடியாதபடி மரபின் தடை தடுக்கிறது. அயோத்தி என்ற சொல்லுக்கடியே அசோகவனமும் மறைந்திருக்கிறது. இரண்டோடும் தொடர்புடையவள் சீதை. அயோத்தியை நினைத்தபடி அசோகவனத்துத் துயரங்களை மறக்க முயற்சி செய்தவள் அவள். சந்திராவின் மனநெருக்கடியை உணர்த்த தலைப்பு ஒரு படிமமாகக் கையாளப்படுகிறது.

"பலாப்பழம்" சிறுகதை மென்மையான மனஉணர்வுகளின் சித்திரம். கர்ப்பிணிப்பெண்ணான செல்லப்பாப்பாவின் மனம் பலாப்பழத்துக்கு ஏங்குகிறது. அடுத்தவீட்டில் பழம் அறுக்கும் மணம் தடுப்பைத்தாண்டி அவள் பக்கத்துக்கும் வீசுகிறது. சுளைகளை உரிப்பதையும் போட்டி போட்டுக்கொண்டு அவர்கள் உண்பதையும் காதில் விழுகிற உரையாடல்கள் உணர்த்துகின்றன. சாயங்காலம் கிடைக்க இருக்கிற கடன்தொகையிலிருந்துதான் சில முக்கியச் செலவுகளைச் சமாளிக்க வேண்டும். பலாப்பழம் வாங்கிவந்து உண்ண வழியில்லை. கவனத்தை வேறெந்தப் பொருளின்மீதும் செலுத்த இயலாதபடி பக்கத்து வீட்டிலிருந்து பழவாடை வந்தபடி இருக்கிறது. பக்கத்து வீட்டுக்கார அம்மா அறிமுகம் உள்ளவர்தான். தனக்கும் சில சுளைகளைக் கொடுத்தனுப்பக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கிறாள். நேரம் கழிகிறதே தவிர, யாரும் வந்தபாடில்லை. வெகுநேரத்துக்குப் பிறகு, பக்கத்துவீட்டுச் சிறுமி வாசலில் வந்து நிற்கிறாள். சுளைகளைத்தாம் கொண்டுவந்திருக்கிறாள் என ஆவலுடன் பார்ப்பவள் கண்கள் ஏமாற்றத்தில் உறைகின்றன. வந்த சிறுமி, புட்டாரத்தி அம்மன் கோயிலுக்கு போலாமான்னு அம்மா கேட்டாங்க என்று கேட்டுவிட்டுச் செல்கிறாள். அவள் ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் காட்டிவிட்டு முடிகிறது கதை. வாசிப்பனுவபம் உள்ள வாசகன் ஒருவனால் அந்தத் திரியைத் தொடர்ந்து வெகுதொலைவு செல்லமுடியும். ஒரு பழத்தையே அறுத்துச் சாப்பிடுகிற குடும்பம் ஒரேஒரு சுளையைக்கூட ஏன் தன்னோடு நட்புகொண்ட பக்கத்து வீட்டுக்காரர்களோடு பகிர்ந்துகொள்வதில்லை என்பது முக்கியமான கேள்வி. இன்னொருவர் மனத்தில் தான் இல்லை என்பதை உணர்வதுபோன்ற வலி வேறெதுவும் இல்லை. புறக்கணிப்பின் துயரத்தை எவ்வளவுதான் அடக்கிஅடக்கி வைத்தாலும் அது பெருமூச்சாக, கண்ணீர்த்துளியாக வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு தளங்களில் வெளிப்பட்டபடியே இருக்கிறது. உலக அரங்கில் ஒரு நாடு செல்வச்செழிப்பில் திளைக்கிறது. இன்னொரு நாடு பட்டினியில் மடிகிறது. எல்லாவற்றையும் உணர்ந்திருந்தும் செல்வத்தில் திளைக்கும் நாடு, இல்லாத நாட்டுக்கு எதையும் பங்கிட்டுத் தரமுன்வருவதில்லை. கிட்டாத பலாப்பழம் அழகான குறியீடு. கிட்டாத செல்வம், கிட்டாத வெற்றி, கிட்டாத அன்பு என அதைப் பல தளங்களில் விரிவுசெய்துகொள்ளமுடியும்.

வண்ணநிலவன் எழுதத்தொடங்கி நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. இடைப்பட்ட காலத்தில் பலவிதமான தத்துவப்பார்வைகள் அறிமுகமாகி இலக்கியத்துடன் உறவாடி மறைந்துவிட்டன. அனைத்தையும் கடந்து, இன்றளவும் வண்ணநிலவனுடைய சிறுகதைகளை நம் மனம் நெருக்கமாகவே உணர்கிறது. அவருடைய சிறுகதைகளை தமிழின் முக்கியப்பங்களிப்பாகக் கருதவைக்கும் முக்கியமான அம்சம் மனிதர்கள்மீது அவர் வைத்திருக்கும் பார்வை. மிக எளிய மனிதர்களிடம் அபூர்வமான வெளிப்படும் ஒளிப்புள்ளிகளை அவர் கண்கள் இயற்கையாகக் கண்டடைகின்றன. பறத்தலின் ஊடே, அபூர்வமான உயரத்தைத் தொட்டு இறங்கும் பறவையின் பயணப்பாதையை, பறவை நோக்கர்கள் கண்டறிவது போல. அவர் படைப்புகள்வழியாக, அவற்றை நாம் மீண்டும் கண்டடைகிறோம்.

**வண்ணநிலவன் சமகால தமிழ் இலக்கியத்தின் அரிய சாதனையாளர்களில் ஒருவர். 'கண்ணதாசன்', 'கணையாழி' 'அன்னைநாடு', 'புதுவை குரல்', 'சுபமங்களா' ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றி உள்ளார். குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகள், ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், ஆறு நாவல்கள் முந்நூறுக்கும் மேல் கட்டுரைகள் என நிறைய எழுதியுள்ளார். 'கடல்புரத்தில்' நாவலுக்காக இலக்கியச் சிந்தனை விருதும், 'கம்பா நதி' நாவல் மற்றும் 'தர்மம்' சிறுகதைத் தொகுப்புக்காக, தமிழக அரசின் சிறந்த நூல்களுக்கான விருதுகளையும், புதுடெல்லி ராமகிருஷ்ணா ஜெய் தயாள் விருதையும் பெற்றுள்ளார். 'கடல்புரத்தில்' சென்னை தொலைக்காட்சியில் பதிமூன்று வாரத் தொடராக ஒளிபரப்பானது. 'அவள் அப்படித்தான்' திரைப்படத்தின் மூன்று வசனகர்த்தாக்களில் ஒருவராகப் பணியாற்றினார். பல ஆண்டுகளாக 'துக்ளக்' இதழில் பணியாற்றி வருகிறார்.**



# இந்தியப் பொருளாதார வளர்ச்சியில்
# உங்களின் பெருமைக்குரிய பங்களிப்பு.



இன்று கடன் வழங்குவதில் பல நவீன வழிமுறைகள் வழக்கத்தில் இருந்தாலும், ஒட்டு மொத்தமாக இன்றைய சூழலில் சிறு மற்றும் நடுத்தர தொழிலுக்கு நிதியுதவி வழங்குவதில் வெறும் கூச்சலும், குழப்பங்களுமே மிஞ்சியுள்ளன.

**காலத்தை வென்ற இந்திய அணுகுமுறை.**

சுமார் 3000 ஆண்டுகளுக்கு மேலாக எண்ணற்ற நிதிநிர்வாக முறைகளின் மூலம் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிகண்டு தொழில் துறையில் இன்று உலக நாடுகளால் மிகவும் மதிக்கப்படும் நாடாக விளங்குகிறது. இந்த சிறப்பான வளர்ச்சிக்கு மூலாதாரம் சிறு மற்றும் நடுத்தர தொழில் செய்பவர்களும், அவர்களுக்கு நிதி கிடைப்பதற்கு உங்களை போன்ற முதலீட்டாளர்களின் புத்திசாலித்தனமான முதலீடுகளுமே காரணம்.

சுமார் 3000 ஆண்டுகளாக சீட்டு சேமிப்புத் திட்டம் இந்திய மக்களிடைய நடைமுறையில் உள்ளது. நவீன காலத்தில் தோன்றிய பல முதலீட்டு முறைகள் மக்களின் நம்பிக்கையை பெற முடியாமல் போனாலும், பாரம்பரியமிக்க சீட்டு சேமிப்புத் திட்டங்களின் மூலம் பல இலட்சம் குடும்பங்களின் வாழ்வை வளமாக்கி மக்களின் நம்பிக்கைக்குரிய நிறுவனமாக விளங்குகிறது ஸ்ரீராம் சிட்ஸ்.

**உறுதியாக தொடரும் நிஜமான உறவுகள்.**

மூன்று தலைமுறைகளாக பல்வேறு நிதித்திட்டங்களின் மூலம் மக்களிடம் தொழில் ஆர்வத்தை ஊக்குவிப்பதால் வேலைத் தேடி அலையாமல் சுய தொழில் தொடங்கி பலரும் வேலை வாய்ப்புகள் பெற உதவுவதுடன் நல்ல வருமானமும் ஈட்ட முடிகிறது.

1974 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீராம் நிறுவனங்கள் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்து வருகிறது. தேவையற்ற கால விரையமின்றி, ஆராய்ந்து அந்தந்த கிளைகளிலேயே முடிவெடுத்து உடனுக்குடன் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. நெருக்கடி காலத்தில் நேசக்கரத்துடன் நிதியுதவி வழங்குவது மட்டுமின்றி, வாழ்நாள் முழுவதும் உறுதியாக தொடர்கின்றன இந்த நிஜமான உறவுகள்.

**நிதித்தேவைகள் அனைத்திற்கும் ஒரே இடத்தில் தீர்வு.**

நிர்வாகவியல் நிபுணர் ஷிவ் கேராவின் கூற்றுப்படி, வெற்றியாளர்கள் வெவ்வேறு செயல்களை செய்வதில்லை. ஆனால் தாங்கள் செய்யும் விதத்தில் வித்தியாசமான அணுகுமுறையை கையாண்டு வெற்றிப் பெறுகிறார்கள்.

அவ்வாறே, நிதித் தேவைகள் அனைத்திற்கும் ஒரே இடத்தில் தீர்வு அளிக்கின்றன ஸ்ரீராம் நிறுவனங்கள்: மாதந்தோறும் சேமிக்கவும், அதிலிருந்தே நிதியுதவி பெறவும் வகை செய்யும் இருவழி சீட்டுத் திட்டங்கள். டு-வீலர், கார் வாங்க வாகனக் கடன், ஃப்ரிட்ஜ், ஏசி, மைக்ரோவேவ், டிவி, வாஷிங் மெஷின் போன்ற வீட்டு உபயோக சாதனங்கள் வாங்குவதற்கு குறைந்த வட்டியில் நுகர்வோர் கடன், அவசரச் செலவுகளைச் சமாளிக்க தனிநபர் கடன், நிரந்தர வைப்பு நிதி, கடன் பத்திரங்கள், பரஸ்பர நிதி, சொத்து நிர்வகித்தல், நீண்ட காலப் பொருளாதாரப் பாதுகாப்புக்கு ஆயுள் காப்பீடு, வீட்டுச் சாதனங்களுக்கான காப்பீடு, தனிநபர் விபத்துக் காப்பீடு போன்ற நிதித்திட்டங்கள் மூலம் நிதித்தேவைகள் அனைத்திற்கும் ஒரே இடத்தில் தீர்வு அளிக்கின்றன ஸ்ரீராம் நிறுவனங்கள்.

**வளமைக்கு வழிகாட்டி.**

ஸ்ரீராம் திட்டங்களில் சேரும் சந்தாதாரர்களின் வாழ்வு வளமாகவும், குடும்பத்தின் எதிர்காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் திட்டங்களையும் அளிக்கிறது ஸ்ரீராம் நிறுவனங்கள்.

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். உங்கள் குடும்பத்தின் வளமான வாழ்வையும், பொருளாதாரப் பாதுகாப்பையும், சிறு தொழிலதிபராக வெற்றிபெறும் கலையையும் கற்றுக் கொள்ளுங்கள்.

வாருங்கள். 3000 வருடங்களாய் தொழில் துறையை
போற்றி பாதுகாக்கும் பாரம்பரியத்தில் ஒன்றாய் சேருங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு பிரைவேட் லிமிடெட்

கிரீம்ஸ் துகார், 149 கிரீம்ஸ் சாலை, சென்னை 6 • போன்: 4223 6000 • www.shriramchits.com

WORDCRAFT

# வல்லிக்கண்ணன் : வண்ணநிலவன்

இப்போதுகூட எழுதுவதை விடவும் படிப்பதுதான் இதமாகவும், சந்தோஷமளிப்பதாகவும் இருக்கிறது. நதிமூலம், ரிஷிமூலம் மாதிரி ஒவ்வொரு மனுஷருக்குள்ளும் அந்தர்வாகினியாய் ஒரு பிரதான உணர்ச்சி பிரவாஹமாக ஓடும். அந்த மாதிரி திருநெல்வேலி எங்களுக்கெல்லாம் அந்தர்வாஹினி.

திருநெல்வேலியை ஒவ்வொரு இலக்கியகர்த்தாவும் ஒவ்வொரு விதமாகக் காட்டுகிறார்கள். குற்றாலத்தை திரிகூடராசப்ப கவிராயரை விட இன்னொருவர் அவ்வளவு நளினமாகச் சொல்லிவிட முடியுமா என்றுதான், வண்ணதாசனின் "ஒரு அருவியும் மூன்று சிரிப்பும்' என்ற சிறுகதையையும், "ஒரு உல்லாசப்பயணம்' என்ற சிறுகதையையும் படிக்கிறவரை நினைத்துக் கொண்டிருந்தேன். மந்தியெல்லாம் மாங்கனியைப் பந்தாடிப் பல்லிளிக்கும் என்பது திரிகூடராசப்ப கவிராயரின் ஒரு கவிதை வரி. மொழியழகும், கவிராயரின் மனவுலகும் அதியற்புதமாக ஒன்றி லயப்பட்டிருக்கிற அந்த அனுபவத்தை அனுபவித்துதான் உணரமுடியும்.

ஆனால் கவிராயரிடம் கிடைத்த அதே சுகானுபவம் வண்ணதாசனின் மேற்கண்ட இரு சிறுகதைகளிலும் கூடக் கிடைக்கிறதே இது எப்படி? திரிகூட ராசப்பருக்கும் வண்ணதாசனுக்கும் பல தலைமுறைகளுக்கு மேற்பட்ட இடைவெளியாவது இருக்கும். ஆனால், இத்தனை வருஷ இடைவெளியையும் ஒன்றுமே இல்லாமல் போக்கிவிட்டுப் பிரவஹிப்பதன் பேர்தான் "இலக்கியம்'.

புதுமைப்பித்தனும் திருநெல்வேலியிலுள்ள கருப்பந்துறையைப் பற்றி எழுதியிருக்கிறார். தொ.மு. சிதம்பர ரகுநாதனும் அதே கருப்பந்துறையைப் பற்றி "ஆனைத்தீ' என்ற சிறுகதையில் எழுதியிருக்கிறார். வாசகனுக்கு இருவருடைய சித்தரிப்பிலும் சின்னச்சின்ன வித்தியாசங்கள், நுட்பமான வேறுபாடுகள் தெரிகின்றன. ஆனால், புதுமைப்பித்தனுடைய கருப்பந்துறையிலும், ரகுநாதனுடைய கருப்பந்துறையிலும் உள்ளே நின்று ஒளிரும் சுடர் ஒன்றுதான். அந்தச் சுடரின் பேர்தான் இலக்கியம். ஒரு அடையாளத்துக்காக ஒன்றை குத்து விளக்கின் சுடரென்றும் இன்னொன்றைப் பாவை விளக்கின் சுடரென்றும் வகைப்படுத்தும் வசதியை முன்னிட்டுச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், இரண்டுமே சுடர்தான்.

வால்மீகியின் சீதையும், இளங்கோவின் கண்ணகியும் காலத்தால் எத்தனையோ யுகங்கள் முன்னும் பின்னுமாக வாழ்ந்தவர்கள். இருவேறு வகைப்பட்ட துயரங்களை அனுபவித்தவர்கள். ஆனால், இருவருமே நெருப்பென வாழ்ந்து முடிந்தவர்கள். அந்த நெருப்புக் கனலைத்தான் இலக்கியம் என்கிறோம்.

"நான்' என்ற சொல்லே வராமல் எழுத வேண்டும் என்று ஆசை. ஆனால், விஷயங்களை விட்டு ஒதுங்கி, அவற்றை மனதிலிருத்திச் சலிக்காத நிலையில்தான் "நான்' என்பதைப் பிரயோகிக்க வேண்டிய அவசியம் எழாது. அந்த லட்சிய நிலையை அடையும் வரை "நான், எனது' என்ற ஒட்டுதல் இருப்பதைத் தவிர்ப்பதற்கில்லை.

எனக்கு இந்தப் புனைபெயரைச் சூட்டிய ஒரு பிரபல படைப்பாளியை முன்வைத்தே ஆரம்பிக்கலாம் என்று தோன்றுகிறது. அப்போது நான் வண்ணநிலவனில்லை. வெறும் ராமச்சந்திரன்.



இன்றைய இலக்கிய வாசகத் தலைமுறைக்கு காலச்சுவடு, தமிழினி, புதுமைப்பித்தன், காவ்யா போன்ற, புதுமையான படைப்புகளை வெளியிடும் பதிப்பகங்களின் பெயர்கள் அறிமுகமாகியிருக்கும். ஓரளவு அன்னம், அகரம், க்ரியா போன்ற பதிப்பகங்களின் பெயர்களும் நினைவுக்கு வரலாம். ஆனால், முப்பது வயதாகும் இன்றைய நவீன இலக்கிய வாசகருக்கு வாசகர் வட்டம், தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், பெர்ல் பப்ளிகேஷன்ஸ், நவயுகப் பிரசுராலயம், ஸ்டார் பப்ளிகேஷன்ஸ், அமுத நிலையம், மல்லிகை பதிப்பகம், ஜோதி பிரசுராலயம் போன்ற பதிப்பகங்களின் பெயர்கள் அனேகமாகக் கேள்விப்படாததாகவே இருக்கலாம். இவையெல்லாம் 50க்கள் முதல் 70க்கள் வரை மிகுந்த செல்வாக்குடன் இருந்தவை. (இவற்றில் சில இன்றும் கூட இருக்கின்றன). "பெர்ல் பதிப்பகம்' பம்பாயைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தது. இப்பதிப்பகம் ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, வில்லியம் ஃபாக்னர் போன்ற அமெரிக்க இலக்கிய கர்த்தாக்களின் பல முக்கியமான நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது. அப்படித் தமிழில் மொழியாக்கப்பட்ட நாவல்தான் "தாத்தாவும் பேரனும்'. இதை மொழி பெயர்த்தவர் வல்லிக்கண்ணன். ஃபாக்னரின் "மங்கையர் கூடம்' என்ற நாவலை க.நா.சு. மொழிபெயர்த்திருந்தார் என்று ஞாபகம்.

ஒன்பதாவது (அப்போது ஃபோர்த் ஃபார்ம்) படித்துக்கொண்டிருந்தபோது கணக்கு வகுப்புகளுக்குப் போகப் பயந்து இரண்டு மாதமாகப் பள்ளிக்கூடமே போகவில்லை. மாவட்ட மைய நூலகமே கதி என்று கிடந்தேன். ஏராளமான நாவல்களைப் படித்தேன். நாவல் படிக்கிற பழக்கம் நாலாவது ஐந்தாவது படிக்கும்போதே தொற்றிக்கொண்டிருந்தது. அமுதசுரபி, கலைமகளில் வல்லிக்கண்ணனின் சிறுகதைகள் ஒன்றிரண்டு தட்டுப் பட்டன. கதைகள் எல்லாம் நெல்லைத் தமிழில், அந்த வட்டாரத்தைப் பற்றியே இருந்தன. 'வல்லிக்கண்ணன்' என்ற பெயரின் மீது மிகுந்த மனநெருக்கத்தை அந்தக் கதைகள் ஏற்படுத்தின. பின்னர் புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமியின் சிறுகதைகளைப் படித்தபோதும் அவர்கள் கதைகளில் இருந்த வட்டார மொழியும், விவரங்களுமே என்னை அவர்கள் எழுத்தின் பக்கம் ஈர்த்தன. அழகிரிசாமி, ராஜநாராயணன் கதைகளைப் படித்தபோதும் ஆரம்பகால வாசகனான எனக்கு, அவர்கள் எழுத்துக்களின் மீது ஒரு பிடிப்பும், இலக்கியத்தின் மீது ஒரு அபிமானம் ஏற்படவும் இதுவே காரணம்.

*1965*ல் "தீபம்" பத்திரிகையை நா.பார்த்தசாரதி ஆரம்பித்தார். ஏற்கெனவே முத்துக்கிருஷ்ணன் என்ற

நண்பரின் மூலம் தாமரை அறிமுகமாகியிருந்தது. 'தீபம்' இதழை முத்துக்கிருஷ்ணன் தவறாமல் வாங்குவார். ஜங்ஷன் ஹிந்து ஹைஸ் கூலுக்கு எதிரே இருந்த இளங்கோ ஸ்டோர்ஸுக்குத்தான் தாமரையும், தீபமும் வரும். தீபத்திலும் வல்லிக்கண்ணனது சிறுகதைகள் வெளிவந்தன.

வல்லிக்கண்ணன் ஒன்று, திருநெல்வேலிக்காரராகத்தான் இருக்க வேண்டும் அல்லது, திருநெல்வேலிப் பகுதி பற்றி நன்கு பரிச்சயமானவராகவாவது இருக்க வேண்டும் என்பது என் முடிவு. திருநெல்வேலியில் எந்தத் தெருவில் இருப்பார்? தாமிரவருணி பற்றியெல்லாம் அவர் கதைகளில் வர்ணனைகள் வருகின்றன. ஒருவேளை, வண்ணார் பேட்டைக்காரராக இருப்பாரோ? இல்லை, கொக்கிர குளத்துக்காரரா? சிக்கிலிங் கிராமத்துக்காரராகவோ, சிந்து பூந்துறைக்காரராகவோகூட இருக்கலாம். மனம் அவ்வப் போது வல்லிக்கண்ணனை நினைத்து அலைபாய்ந்து தானே ஓய்ந்துவிடும். 62 வாக்கில் துவங்கிய இந்த மனத்தேடல் 70 வரை தொடர்ந்தது. தீபமும் தாமரையும் வாங்குகிற இளங்கோ ஸ்டோர்ஸ்காரரிடமே கூட கேட்டால் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால், ரொம்பப் பழகிய ஆட்களைத் தவிர அடுத்த மனுஷர்களிடம் வாய்திறந்து பேசத்தான் முடியாதே. நம் கொன்னல் (திக்குவாய்) வெளியே தெரிந்துவிடுமோ என்ற கூச்சம், பயம்.

அப்போது இன்லேண்ட் லெட்டர் பத்து பைசாதான். ஒரு இன்லேண்டில் வல்லிக்கண்ணனுக்குக் கடிதம் எழுதினேன். முகவரி, என்ன எழுதுவது? வீட்டுக் கதவிலக்கம், தெருப்பெயர் எதுவும் தெரியாது. அழைப்பிதழில் அதெல்லாம் எப்படி இருக்கும்? வெறுமனே திரு. வல்லிக்கண்ணன், எழுத்தாளர், ராஜவல்லிபுரம் திருநெல்வேலி தாலுகா என்று முகவரி எழுதித் தபாலில் சேர்த்தேன். எப்படியோ, நாலாம் நாளே முத்தான கையெழுத்தில் (இன்றும் வ.க.வின் கையெழுத்து அப்படியேதானிருக்கிறது.) வல்லிக்கண்ணனிடமிருந்து பதில் வந்துவிட்டது. சந்தோஷம் பிடிபடவில்லை. அன்று அந்தக் கடிதத்தை எத்தனை தடவை படித்தேனென்று நினைவில்லை. திரும்பத் திரும்பப் படித்துச் சந்தோஷப் பட்டேன். நான் பதிலெழுத, வ.க. பதிலெழுதவென்று எங்கள் நட்பு கடிதம் மூலம் தொடர்ந்து கொண்டிருந்தது. தேடுங்கள் கண்டடைவீர்கள். என்று பைபிளில் சொல்லி யிருக்கிறது. இது முக்காலும் உண்மை. என் வாழ்வில் நிதர்சனமாகப் பல சந்தர்ப்பங்களில் கண்டுணர்ந்த ஒரு பேருண்மை இது. நம்முடைய விருப்பம் ஆத்மார்த்த மானதாக இருந்தால், அது அப்படியே நிறைவேறத்தான் செய்கிறது. யாரோ நம் கையைப் பிடித்து அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவது போல், நாம் விருப்பம் நிறைவேறுகிறது. நான் வல்லிக்கண்ணனுடன் தொடர்பு கொண்டபோது அவர்களுக்கு ஐம்பது வயதிருக்கலாம். எனக்கு இருபது இருப்தோரு வயது. எங்கள் ஸ்நேகம் ஒரு ஆச்சரியமான ஸ்நேகம்தான்.

ஒரு விதத்தில் பார்த்தால் வல்லிக்கண்ணன் மூலம்தான் நம்பிராஜன் (விக்கிரமாதித்யன்), வண்ணதாசன், கலாப்ரியா, தி.க.சி., போன்ற இலக்கிய சிநேகம் எல்லாம் கிடைத்தது. வல்லிக்கண்ணனோடு கடிதத் தொடர்பு தவறாமல் நடந்து கொண்டிருந்தது. அந்தக் கடிதத்தையெல்லாம் வெகு காலத்திற்குப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். (பிறகு அவற்றை நண்பர் விக்கிரமாதித்யன் பெரிய மூட்டையாகக் கட்டி எடுத்துச் சென்றார்.)

வ.க.வுடன் கடிதத் தொடர்பு ஏற்பட்டு, சில மாதங்கள் கழிந்த பிறகுதான் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை, வ.க.வைப் பார்ப்பதென்று பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டேன். பெருமாள்புரத்துக்கும் ராஜவல்லி புரத்துக்கும் ஒரு டவுன் பஸ் உண்டு. ஆனால் அது எப்போது வருமென்று நிச்சயமில்லை. ஜங்ஷனிலிருந்து அடிக்கடி 9ஆம் நம்பர் பஸ் இருந்தது. அதனால் ஜங்ஷன் போய் பஸ் ஏறினேன். பஸ் புறப்படச் சற்று நேரமிருந்தது. மனமெல்லாம் இனம் புரியாத படபடப்பு. ஜங்ஷனிலிருந்து ராஜவல்லிபுரத்துக்கு 25 பைசாவோ, முப்பது பைசாவோதான்.

ரயில்வே கேட்களில் காத்திருப்பது ஒரு அருமையான, மனதுக்கு பிடித்தமான அனுபவம். ஒவ்வொரு ஊருக்கும், ஒவ்வொரு கோவிலுக்கும், தெருவுக்கும் ஒரு தனி முகமிருக்கிற மாதிரி, ரயில்வே கேட்களுக்கென்று ஒரு தனி அடையாளமுண்டு. ஒவ்வொரு ரயில்வே கேட்டுக்கும் ஒவ்வொரு அழகுண்டு. இக்கால வேகமான, சௌகரியம் தேடும் வாழ்வு பல அபூர்வமான விஷயங்களை இழந்து மூளியாகிவிட்டது. அவற்றிலொன்று ரயில்வேகேட்கள். குறுக்குத்துறை போகிற வழியிலிருக்கிற ரயில்வேகேட்டில் இரண்டு புறமும் மணல், செங்கல் ஏற்றி வருகிற மாட்டு வண்டிகள் காத்திருக்கும். அவற்றிலிருந்து குளித்து விட்டு வருகிற ஆண்களும் பெண்களும் ஈரத் துணிகளுடன் கேட்டுக்குள் நுழைந்து வருவார்கள்.

திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து ராஜவல்லிபுரம் போகிறபோது ஒவ்வொரு பயணியும் இரண்டு கேட்களைக் கடக்க வேண்டியதிருக்கும். அவற்றில் ஒன்று தச்சநல்லூர் ரயில்வே கேட் (இந்த இடத்தில் மேம்பாலம் வந்து விட்டது.) இன்னொன்று தாழையூத்து ஸ்டேஷனருகே உள்ள கேட். ஐம்பதுகளில் தினமலர் திருநெல்வேலியி லிருந்து அச்சாகி வந்தது. தினமலர் அலுவலகம் தச்சநல்லூர் ரயில்வே கேட்டினருகே உள்ள பழைய பிரிட்டிஷ் காலத்திய பிரம்மாண்டமான கட்டிடத்தில்தான் இயங்கி வந்தது. இந்தக் கட்டிடம் இன்றும் இருக்கிறதென்று நினைக்கிறேன். ரோட்டரி இயந்திரம் அதனுள் நிறுவப்பட்டிருந்தது. காம்பவுண்டினுள் இலவம் பஞ்சு மரங்கள் இருந்தன. கட்டிடத்தைப் பார்த்தாலே பழைய ஹிந்திப் படங்களில் வருகிற வில்லன்களின் ஜாகை போலிருக்கும். அப்போது அந்தக் கட்டிடம் மட்டுமே அந்த இடத்தில் தனியாக இருந்தது. எதிரிலும், பக்கத்திலும் வயல்கள். மேற்கே காம்பவுண்டுச் சுவரையட்டி ரயில்வே தண்டவாளம் சென்றது. கேட்டின் மேற்குப் பகுதியில் தச்சநல்லூர் ஊர் ஆரம்பமாகும்.

ஒரு ஜதை தண்டவாளங்கள்தான் இருந்தன. வடக்கே மதுரை, சென்னை செல்லும் ரயில்களும், கிழக்கே தூத்துக்குடி செல்லும் ரயில்களும் அந்தத் தண்டவாளத்தைத் தான் பயன்படுத்தி வந்தன. எப்போதாவதுதான் ரயில்கள் போகும். சாயந்திர நேரங்களில் கொஞ்சம் ரயில் போக்குவரத்து பரபரப்பாக இருப்பது போலிருக்கும். மற்றபடி அந்தத் தண்டவாளங்கள் சும்மாத்தான் கிடந்தன. ராஜவல்லிபுரம் பஸ் தச்சநல்லூர் கேட்டில் நின்றுவிட்டது. கேட் சாத்தப்பட்டிருந்தது. வயல் பக்கமிருந்து குளிர்ந்த காற்று வீசியது. பத்திரிகை, எழுத்து, கதை என்றாலே சிறு வயது முதல் கொள்ளை ஆசை. ஒரு அலாதியான சந்தோஷம். படிப்பில் ஏற்படும் லாகிரி, போதை என்றே சொல்ல வேண்டும். அந்தப் போதை இந்த ஐம்பத்தைந்து

வயதிலும் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. பக்கத்திலிருந்த தினமலர் அலுவலகத்தையும் பரவசத்துடன் பார்த்தேன்.

கல்யாண வீட்டுச் சளம்பல்களில் எரிச்சலில்லாத ஒரு பாந்தமான உணர்வு ஏற்படும். தெளிவாக இல்லாத அந்தப் பேச்சுக் குரல்கள் இல்லையென்றால் கல்யாண வீடே களை கட்டாது. அந்த மாதிரித்தான் பஸ்களில் பயணம் செய்யும் போது பயணிகள் பேசிக்கொள்ளும் சளம்பல்களும், வயல்காட்டுக் காற்றும், பிரயாணிகளின் சளம்பல்களும், வ.க. வைப் பார்க்கப் போகும் பரவசமும் இனம் காண முடியாத, கலவையான உணர்வுப் பெருக்காக உள்ளே பிரவஹித்துக் கொண்டிருந்தது. வ.க. எழுதிய கதைகளெல்லாம் மாறி மாறிச் சித்திரம் போல் ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தன. வ.க. கதைகளில் வரும் வயதான மனிதர்கள், குழந்தைகள், பெண்கள், திருநெல்வேலிப் பேச்சு வழக்கு எல்லாம் மனதில் புரண்டு கொண்டிருந்தன.

நாலு வார்த்தை பேசுவதற்குள் கொன்னல் வந்து பாடாய்ப் படுத்தும். இதனால் யாருடனும் பேசவே பயம். பஸ்ஸில் ஸ்டாப்பிங் பெயரைச் சொல்லி டிக்கெட் வாங்கிவிட்டாலே என்னைப் பொறுத்தவரை அது ஒரு பெரிய சாதனைதான். இரண்டே இரண்டு வேட்டிதான். 77வரை அநேகமாக ஸ்நேகிதர்களின் சட்டைதான் போடக் கிடைத்தன. அதனால் என் சட்டைகள் எல்லாமே தொள தொளவென்றிருக்கும். ஏற்கனவே உபயோகிக்கப்பட்டதால் சாயம் போயிருக்கும். ஆனால், எனக்கு அந்தச் சட்டைகள் கிடைத்ததே பெரும் பாக்யம். முப்பது ரூபாய் சம்பளம். இரண்டு வேளைச் சாப்பாடு. இரவு படுக்க இடம். இதுதான் என் வக்கீல்குமாஸ்தா வாழ்க்கை.

எஸ்.எஸ்.எல்.சி.யில் வெறும் 236 மார்க்தான். கதீட்ரல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் சொர்ணபாண்டியன் சர்ட்டிபிகேட் புஸ்தகத்தை கையில் கொடுக்கும்போது, "ஏலே, தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் போலிருக்கேல்லே" என்று என் மார்க்கைப் பார்த்துவிட்டு வருத்தத்துடன் சொன்னது இன்னமும் காதுக்குள் கேட்டுக்கொண்டிருக்கிறது. திருநெல்வேலியில் ஆயிரக் கணக்கான பேர் எந்தக் கதியுமில்லாமல், இரண்டு வேளை சாப்பிடுவதே பெரிய சாதனையாக, யோகமாகக் கருதி வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களில் நானும் ஒருவன். கடையனிலும் கடையன். என்னையும் ஒரு பொருட்டாக மதித்து கடிதங்கள் எழுதிய அந்தப் பெரிய மனுஷரை நினைத்து நினைத்துக் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது.

ராஜவல்லிபுரத்தில் ஊருக்குள் நுழைந்ததும் ஒரு நிறுத்தம் உண்டு. அதேபோல் ஊரின் கிழக்கொல்லையிலும் ஒரு நிறுத்தம் உண்டு. கடைசி நிறுத்தம்தான் வ.க. வீட்டுக்குச் சற்றுப் பக்கம். ஆனால், எனக்கு இது தெரியாததால் ஊரினுள் நுழைந்ததும், முதல் நிறுத்தத்திலேயே இறங்கிவிட்டேன். ""எழுத்தாளர் வல்லிக்கண்ணன் வீடு எது" என்று விசாரித்தேன். சரியாகத் தெரியவில்லை. இறங்கிய இடத்திலிருந்து நேரே தெற்கு நோக்கி நடந்தேன். சற்று அகலமான தெருதான். பாதையெங்கும் மழையில் கரைந்து போன கருங்கல் ஜல்லிகள், மேலே ஆட்டுப் புழுக்கைகளின் கொச்சை வாடை. வலதுபுறம் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை பச்சைப் பசலேன்ற வயல்வெளி. இடதுபுறம் மட்டுமே வீடுகள். ஓட்டுக்கை, மட்டப்பா போட்ட வீடுகள். பழைய கதவுகள், சிறு சிறு ஜன்னல்கள். ஆடுகளும், கோழிகளும் ஒரு அந்நியோன்ய உணர்வுடன் தெருவோரத்தில் திரிந்தன. எப்போதாவது ஒன்றிரண்டு பேர் தென்பட்டனர்.

ஒரு பழைய, சிதிலமாகித் தரையோடு தரையாய் உட்கார்ந்திருந்த தேருடன் அந்தத் தெரு முடிந்துவிட்டது. திருநெல்வேலி கோர்ட்டில் காப்பியிஸ்ட் (நகலெடுக்கும் அலுவலகம்) தனது வீட்டுக்கு அருகில்தான் இருக்கிறார் என்று வ.க. கடிதத்தில் எழுதியிருந்த நினைவு. அனேகமாகத் தினசரி ஒரு தடவையாவது வழக்குகள் சம்பந்தப்பட்ட தீர்ப்பு நகல்கள் காப்பியிஸ்ட் ஆபிஸ் போக வேண்டியதிருக்கும். பார்த்தால் ஏ.ஜி.எஸ். பிரியத்தோடு விசாரிப்பார். "மாமா (வ.க.) கிட்டே ஏதாவது தகவல் சொல்லணுமா?" என்று கேட்பார். தினசரி சைக்கிளில் ராஜவல்லிபுரத்திலிருந்து அவர் வந்து போய்க்கொண்டிருந்தார். அவர் வீட்டைத் தெரிந்து விட்டால் கூட வ.க. வீட்டுக்குப் போய்விடலாமே?

நினைத்துக் கொண்டிருந்தபோதே ஒரு வயதான பெரியவர் தோளில் துண்டுடன் வந்துகொண்டிருந்தார். "இங்கே எழுத்தாளர் வல்லிக்கண்ணன்னு..." என்று தயங்கிக்கொண்டே கேட்டேன். ஒரு கணம் யோசித்தார். பக்கத்தில் ஆறேழு வீடுகள் தள்ளித் திரும்பும் ஒரு முடுக்கைக் (சந்து) காட்டி "அதிலேதான் இருக்காஹ கேட்டாச் சொல்லுவாங்க" என்றார். ஒருவழியாகக் கண்டுபிடித்துவிட்டேன். சிறு முடுக்கின் இறுதியில் வ.க. வீடு இருந்தது. மட்டப்பா (மேல்தளம் செங்கற்கள் பதிக்கப்பட்டது) போட்ட வீடு. நீளமான திண்ணை. நன்றாக கொழுக்க கரைத்த சாணக்கரைசல் தெளிக்கப்பட்ட முற்றம். திண்ணையில் ஒரு நீளமான பெஞ்ச் கிடந்தது. அதன் மீது ஒரு முதியவர் உட்கார்ந்திருந்தார்.

"வல்லிக்கண்ணன் சார் வீடுதானே?"

"தம்பியைப் பார்க்கனுமா? உக்காருங்க வந்திடுவான்.. ஆத்துக்குப் போயிருக்கான்" என்று சொல்லிக்கொண்டே தோளில் கிடந்த துண்டினால் தட்டி பெஞ்சில் பக்கத்தில் உட்காரச் சொன்னார். உள்ளேயிருந்து தினமணி, தீபம் எல்லாம் எடுத்து வந்து தந்தார். வீட்டினுள்ளிலிருந்து வெள்ளைச் சேலை கட்டிய ஒரு வயதான அம்மாள் கூன் விழுந்த முதுகுடன் மெதுவாக வந்து கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார்.

"தம்பியை பார்க்க வந்திருக்காரு.." என்று அவரிடம் சொல்லிவிட்டு என்னிடம்

"எங்க அம்மா" என்றார் அந்த முதியவர். அவர் வல்லிக்கண்ணனின் மூத்த அண்ணன். கல்யாணி அண்ணாச்சி.

"உக்காருங்க ஐயா.. வார நேரந்தான்" என்றார் அவர்கள் தாயார்.

"எசக்கி போயிட்டாளா?" என்று மகனிடம் கேட்டார்.

"வீட்டுக்குத்தான் போயிருக்கா வந்துடுவா" என்றார் வ.க.வி.ன் அண்ணாச்சி. எல்லோருக்கும் மூத்தவர் அவர்தான். அவருக்கு அடுத்ததுதான் "அசோகன்' என்ற ரா.சு. கோமதிநாயகம். மூன்றாவது கடைக்குட்டி தான் "வல்லிக்கண்ணன்' என்ற ரா.சு. கிருஷ்ணசாமி. "இசக்கி' என்பது அவர்கள் வீட்டில் ஒரு நபராகவே ஆகிவிட்ட இசக்கியம்மாள்.

சிறிது நேரத்தில் வ.க. வந்துவிட்டார். வேட்டியும் துண்டும்தான். கல்யாணி அண்ணாச்சியை விடக் கொஞ்சம்

மாநிறம். நான் எழுந்து நின்று கை கூப்பினேன். "உக்காருங்க.. நீங்க பாளையங்கோட்டை உ.நா. ராமச்சந்திரனா?" என்று கேட்டார். "ஆமாமா.." எப்படி இவ்வளவு சரியாகச் சொன்னார் என்று ஆச்சரியமாக இருந்தது. சிறிது நேரம் பெஞ்சிலேயே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். "வாங்க உள்ள போயி உக்காருவோம்" என்று அழைத்துச் சென்றார். வலது புறம் நீளவாக்கில் ஒரு அறை இருந்தது. சுவரோடு சுவராக புஸ்தக ஷெல்புகள். துண்டு மர நாற்காலிகள். நாற்காலிகளிலும் வெள்ளை வெளேரென்று தூசி. தன் துண்டினால் தூசியைத் தட்டித் துடைத்துக் கொண்டே.. "ம், உக்காருங்க. சிமெண்ட் பேக்டரி தூசி.. ஊரெல்லாம் இப்பிடித்தான். வர்ற வழியிலே பாத்திருப்பீங்களே மரம் மட்டை, வயக்காடெல்லாம் வெள்ளை வெளேர்னு இருந்திருக்குமே.. உக்காருங்க" என்றார் (தாழையூத்து சிமெண்ட் பேக்டரியை வைத்து தாமரையில் "காளவாய்' என்ற அருமையான சிறுகதையை வ.க. எழுதியிருக்கிறார்).

ஷெல்பில் புஸ்தகங்கள் எல்லாம் காக்கி அட்டை போடப்பட்டு அழகாக வைக்கப்பட்டிருந்தன. நான் கையெழுத்துப் பத்திரிகை நடத்துகிறேன் என்றதும். வ.க. தான் நோட்டில் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பத்திரிகையை என்னிடம் காண்பித்தார்கள். "அப்பப்போ தோணுகிறதை எழுதி நானே பத்திரிகை மாதிரி பண்ணிடுவேன்" என்றார்.

அவர்கள் வீட்டில் எப்போதும் ரவா உப்புமா விசேஷம். கல்யாணி அண்ணாச்சி சாப்பிடக் கூப்பிட்டார்கள். பட்டகசாலையை அடுத்து இரண்டாங்கட்டு மாதிரி சிறு அறை. அதற்கு கிழக்கே சமையலறை. இரண்டாங் கட்டிலிருந்து இறங்கினால் நீளமான தாழ்வாரம். கிழக்கு மூலையில் கிணறு. சாப்பிட்டு விட்டு வந்து திரும்பவும் உட்கார்ந்து பேசினோம். ரொம்ப கூச்சசுபாவமும் தயக்கமும் உள்ள நான் கூட ரொம்ப சகஜமாகப் பேசினேன். எனக்கே அது ஆச்சரியமாக இருந்தது.

வ.க.வின் உரையாடல்களில் ஏராளமாகத் தகவல்களும், ஞாபகசக்தியை வியக்க வைக்கும் பல பழைய சம்பவங்களும் நினைவுகளும் இடம் பெறும். புதுமைப்பித்தன், கு.ப.ரா.வின் கதைகளில் பலவற்றைத் தலைப்புடன் வ.க.வினால் அப்படியே ஞாபகத்துக்குக் கொண்டு வர முடியும். இன்றும் இத்தனை வயதிலும் அவர்களது நினைவாற்றல் அப்படியேதானிருக்கிறது. (இதேபோல அபாரமான நினைவாற்றலுள்ள இன்னொரு இலக்கிய உலக நண்பர் ஜி.எம்.எல். பிரகாஷ். பிரகாஷ், மௌனியின் பல கதைகளை அப்படியே வரி பிசகாமல் சொல்வார்.)

பல பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களைப் பற்றிய நுணுக்கமான தகவல்கள்கூட வ.க.வுக்குத் தெரிந்திருக்கும். சினிமா குறித்து ஹிந்துவில் அவ்வப்போது எழுதும் "ராண்டர்கை' பற்றி 70களின் தொடக்கத்திலேயே வ.க. விபரமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்களது "ஆண்சிங்கம்' என்ற சிறுகதைத் தொகுப்பைப் படிக்கக் கேட்டு வாங்கிக் கொண்டு புறப்பட்டேன். பஸ் நிறுத்தம் வரை உடன் வந்து வழியனுப்பி வைக்கும் பழக்கம் வ.க.வுக்கு எப்போதும் உண்டு. ராஜவல்லிபுரம் பஸ் முப்பது, நாற்பது நிமிடங்களுக்கு ஒரு முறைதான் வரும். எவ்வளவு நேரமானாலும் பஸ் வரும் வரை நின்று பேசிக் கொண்டிருப்பார்கள். அன்றும் அப்படித்தான் நடந்தது.

பிறகு பலமுறை வ.க.வைச் சந்தித்தேன். சமயங்களில் கல்யாணியும் (வண்ணதாசனும்) நானும் கூடச் சேர்ந்தே போவோம். அப்போது எனக்கு இலக்கியம் பற்றிப் பெரிய அபிப்பிராயமெல்லாம் எதுமில்லை. இப்போதும் கூட இப்படித்தான். பொதுவாக வ.க. எந்தப் படைப்பை பற்றியும் நன்றாக இல்லை என்று சொன்னதில்லை. "இன்னும் நல்லா எழுதியிருக்கலாம்' என்று சமயங்களில் சொல்வதுண்டு. அதுதான் அப்படைப்பைப் பற்றிய விமர்சனம். பொதுவாக நல்ல அம்சங்களைப் பாராட்ட வேண்டும் என்பார்கள். இது அவர்களது வழிமுறை. வாசகனுக்குப் படைப்பிலுள்ள அம்சங்களை எடுத்துச் சொல்வதுதான் விமர்சகனின் வேலை என்பது வ.க. கட்சி.

"எழுத்து' பற்றி, சி.சு. செல்லப்பா பற்றியெல்லாம் வ.க.தான் சொன்னார்கள். ஒரு புது உலகத்தை "எழுத்து' இதழ்கள் என் முன்னே வரித்தன. அதுவரை நான் படித்த சிறுகதைகள், கவிதைகளுக்கும் "எழுத்து' சிறுகதைகள், கவிதைகளுக்கும் பெரும் வித்தியாசம் இருந்தது. பள்ளிநாட்களில் படித்த பெர்ல் பப்ளிகேஷன்ஸ், தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் மொழிபெயர்ப்பு நூல்களில் விட்ட கண்ணிகளை எழுத்து இதழ்கள் இணைப்பது போலிருந்தது. வ.க.வைப் பார்க்க செல்லும் போதெல்லாம் மனம் சிறகடித்துப் பறந்தது. ஏதோ ஒரு அபூர்வமான உலகினுள் நுழைந்துவிட்டது போலிருந்தது. 58, 59இல் ஸ்ரீவைகுண்டம் பஞ்சாயத்து லைப்ரரியில் படித்த எமிலி ஜோலாவின் "நாணா, நாணாவின் தாய்', ஜெர்மினால் போன்ற மொழிபெயர்ப்பு நூல்களில் தரிசித்த உலகுக்கும், எழுத்து இதழ்களின் பக்கங்களில் தரிசித்த படைப்புலகுக்கும் ஏதோவொரு தொடர்பிருப்பது புகைமூட்டம் போல் தெரிந்தது. அது என்ன தொடர்பு என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு ஒற்றுமை மனதில் தட்டுப்பட்டது.

சி. கனகசபாபதி பிச்சமூர்த்தி கவிதைகளைப் பற்றி எழுதியிருந்த கட்டுரைகளை எழுத்துவில் படித்துவிட்டு, பிச்சமூர்த்திமீது ஒரு பிரேமையே எழுந்தது. அந்த பிரேமை அவரது கதைகளில் இன்னும் இந்த 55 வயதிலும் அப்படியே இருப்பது விளங்கிக்கொள்ள இயலாத மனப்புதிராகத்தான் தோன்றுகிறது. பாளையங்கோட்டை மத்திய நூலகத்தில் படித்த நேருவின் தங்கை கிருஷ்ணா ஹத்திசிங்கின் அந்த தலைப்பு மறந்து போன புஸ்தகம், ஜிம் கார்பெட்டின் "குமாவும் புலிகள்' இதெல்லாம் ஏதோவொரு எழிலும் பரவசமுமிக்க வாசக அனுபவத்தை, அபூர்வமான லாகிரியை மனதில் மூட்டியிருந்தன.

அவையெல்லாம் தனித்தனிக் கண்ணிகளாக மனதில் புரண்டு கொண்டிருந்தன. வ.க.வுடனான தொடர்பும், அவர்கள் தந்த எழுத்து இதழ்களும், புஸ்தகங்களும் அந்தக் கண்ணிகளை இணைத்தன. இணைத்த அந்த ஆரம் என்னது? அந்தச் சங்கிலி என்னது? பதில்தான் தெரியவில்லை. சித்திரை வெயிலில் வந்தவுடன் ஒரு செம்பு தண்ணீரைக் குடித்ததும் மனதில் படரும் அந்தப் பேருவகை மாதிரித்தான் இதுவும்.

உரையாடல்கள் என்பவை பலவகைப்பட்டன. சிலருடன் பேசிக் கொண்டிருக்கும்போது, பேச்சுக்குப் பேச்சு தங்களுடைய அபிப்பிராயத்தை சொல்ல வேண்டும் என்று

நினைப்பார்கள். சிலர் எதிரே இருப்பவருடைய அபிப்பிராயம் எவ்வளவுதான் வித்தியாசப்பட்டாலும் அதை வெளியே சொல்லாமல் மௌனமாக இருப்பார்கள். சிலர் நாசூக்காகத் தாங்கள் நினைப்பதைச் சொல்லிவிட்டுச் சும்மா இருப்பார்கள். சிலருடன் பேசும்போதே, உரையாடல் என்பது முறுக்கேறி விவாதமாகி, இனி நேரில் பார்த்துப் பேச முடியாதபடி, பகையாகவே முற்றி விடும்.

வ.க. எதையும் ஆணித்தரமாக, முகத்திலடிக்கிற மாதிரி பேசவே மாட்டார்கள். அவர்களது கட்டுரைகள் கூட இப்படித்தான் இருக்கும். கட்சி கட்டி நிற்கிற உத்தேசமே வ.க.வுக்கு கிடையாது. எதையும் ஸ்தாபிக்க வேண்டும், தன் வாதத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணமே வ.க.வுக்குக் கிடையாது.

வ.க.வின் கட்டுரைகள் மேம்போக்கானவை, ஆழமில்லாதவை என்று கூறப்படுவதற்குக் காரணம், வ.க.விடம் வாதம் செய்கிற போக்கு அறவே இல்லாமல் போனதுதான். பெரும்பாலும் எல்லாவற்றையும் ரசிக்கிற மனோபாவம் வல்லிக்கண்ணனுடையது. தன்னைப் பற்றிய தகவல்களைக் கூட ஒரு மூன்றாவது மனிதன் சொல்வதைப் போலத்தான் வ.க. சொல்வார்கள். ஒரு விட்டேற்றியான மனம். அதேசமயம் பிறருடைய கஷ்டங்களைக் கண்டு உருகிவிடும் மனம் வ.க.வுடையது.

ஞாயிற்றுக்கிழமைகள்தான், அதுவும் ஞாயிற்றுக்கிழமை மதியத்துக்கு மேல்தான் எனக்குச் சொந்தமான நேரம். வ.க. தினசரி சாயந்திரம் ஆற்றங்கரை வரை வாக்கிங் போவது தப்பாது. ராஜவல்லிபுரம் ஊருக்கும் ஆற்றுக்கும் ஒரு மைலாவது இருக்கும். நான் சீக்கிரமாகப் போய்விட்டால், அவர்களுடன் சேர்ந்தே ஆற்றுக்குப் போவேன். தாமதமாகிவிட்டால் வீட்டில் போய் தேடிவிட்டு ஆற்றங்கரைக்குச் செல்வதுண்டு. சில சமயம் பாதி வழியிலேயே ஆற்றிலிருந்து திரும்பும் அவர்களை எதிர்கொள்ளவும் நேர்ந்திருக்கிறது.

ராஜவல்லிபுரம் ஆற்றுப் பகுதிக்குச் "செப்பரை' என்று பெயர். ஆற்றின் கரை மீது அழகான சிவன் கோவிலும், கோவிலின் முன்னே ஒரு ஓடாத தேரும் உண்டு. கோவிலைச் சுற்றி ஏராளமான பனைமரங்கள். அந்தக் கோவில் திருவாதிரை விழா ரொம்ப விசேஷம். அந்தக் கோவில், ஓடாத தேர், பனை மரங்கள், ஆறு இவற்றைத் தவிர அங்கே மனித சஞ்சாரமே கிடையாது. எப்போதாவது ஆடு மேய்க்கிறவர்களோ, வயல்களில் வேலை செய்பவர்களோ தென்படுவார்கள். மற்றபடி அவ்வளவு அமைதியான ஆற்றங்கரையைப் பார்ப்பது அபூர்வம். தூரத்தில் ஏதாவது பனையிலிருந்து, காய்ந்த ஓலை கீழே விழுகிற சத்தம் கூடத் துல்லியமாகக் கேட்கும் அமைதி அது. "நான், எனது' என்ற நம் மனதின் இருப்பையே அழித்துவிடும் பேரமைதி அது.

அப்படியொரு ஞாயிற்றுக்கிழமை மாலை ராஜவல்லிபுரம் சென்றிருந்தபோதுதான் வ.க.வின் வீட்டிலிருந்த கல்யாணி அண்ணாச்சி ""ஊர்லேருந்து செல்லப்பா வந்திருக்கார். அவரோட தம்பி ஆத்துக்குப் போயிருக்கான்" என்று சொன்னார்கள். வேக வேகமாக ஆற்றை நோக்கி நடந்தேன். வழக்கமாக வ.க. குளிக்கும் இடத்தில் வ.க.வும் அவருடன் இன்னொரு முதியவரும் ஆற்றில் இறங்கி குளித்துக் கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்தும் வ.க.வுக்கு ஒரே சந்தோஷம். செல்லப்பாவைக் காட்டி, ""இவர்தான் சி.சு. செல்லப்பா", என்று அறிமுகம் செய்து வைத்தார்கள். ""இவர் ராமச்சந்திரன். பாளையங்கோட்டையில் இருக்கார்". அவர்கள் குளித்துக் கரையேறும் வரை எனக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை. "எழுத்து' என்ற அந்த மகத்தான பத்திரிகையின் ஆசிரியர் இந்த மனிதர்தானா? அவ்வளவு பெரிய மனிதரை இவ்வளவு சர்வ சாதாரணமாக ஆற்றங்கரையில் பார்க்கிறபோது, இது சொப்பனமா, நிஜமா என்ற பரவசம் என்னை ஆட்கொண்டிருந்தது.

செல்லப்பா தொடங்கியிருந்த "எழுத்து பிரசுர'த்தின் புஸ்தகங்களை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விற்பதற்காகத்தான் அவர் வந்திருந்தார். ஒரு வாரமோ, பத்து தினங்களோ செல்லப்பா, வல்லிக்கண்ணன் வீட்டில் தங்கியிருந்தார். இருவரும் நெல்லை பகுதிகளிலும் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள கல்வி நிறுவனங்களுக்குச் சென்று எழுத்து பிரசுர நூல்களை விற்பனை செய்தனர்.

ஒருமுறை ராஜவல்லிபுரம் சென்றிருந்த போது, நான் எழுதி வைத்திருந்த இரண்டு சிறுகதைகளை எடுத்துச் சென்று வ.க.விடம் கொடுத்தேன். "கதை சரியாக வந்திருக்கிறதா?' என்று தெரிந்துகொள்ள ஆசை. ஒரு பத்து நாட்களுக்குப் பிறகு எனக்குத் தபாலில் தூத்துக்குடியிலிருந்து வெளிவரும் "சாந்தி' என்ற (அந்நாளைய பிளிட்ஸ், கரண்ட் போன்ற டேபுளாய்ட் சைஸ்) பத்திரிகை வந்திருந்தது. அதைப் புரட்டினேன். நான் வ.க.விடம் கொடுத்திருந்த சிறுகதையன்று "மண்ணின் மலர்கள்' என்ற தலைப்பில் சாந்தியில் வெளிவந்திருந்தது. எழுதியவர்: வண்ணநிலவன் என்று இருந்தது. கொடிய வறுமை, சரியான படிப்புமில்லை. உயிரோடு வாழ்வதே பெரிய சமாச்சாரம் என்ற நிலையிலிருந்த ஒரு மனிதன், கதை எழுதி அது பிரசுரமும் ஆகும் என்றால் அதை எப்படி நம்புவது என்ற நிலையில்தான் இருந்தேன். வ.க.வுக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் எழுதினேன். அவர்கள் உற்சாகப்படுத்தி ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார்கள். ராமச்சந்திரன் வண்ணநிலவனாகி விட்டான்.

நான் எழுதுவது இலக்கியமா அல்லது வெறும் பிதற்றலா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்திருந்த எழுத்துதான் இன்றும் ஏதோவொரு வடிவில் எனக்குச் சோறு போடுகிறது. அதற்காக இந்த பாஷைக்கும், "வண்ணநிலவன்' என்று ஒரு விலாசத்தைக் கொடுத்த வல்லிக்கண்ணனுக்கும் என்றென்றும் நான் கடன்பட்டவன்.

*(நன்றி: தமிழ்சிஃபி.காம்)*

திரு. நாஞ்சில் நாடன்
எழுத்தாளர்

# இலைமறை காய்

எழுத வந்தபோது, 1975இல் பம்பாய் வாசியாக இருந்தேன். என் சம வயது அல்லது ஒன்றிரண்டு ஆண்டுகள் இளைய மற்றும் மூத்த பத்துப் பன்னிரண்டு பேர் அப்போது நவீன இலக்கியப் பரப்பில் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த னர். ஏற்கனவே, ராஜபாட்டையாக இல்லாவிட்டா லும், அடர் கானகத்துள் ஒற்றையடித் தடங்கள் பதித்தும் விட்டிருந்தனர். ஒருவர் பாதிப்பு மற்றவரி டம் இல்லாமல் அவரவர் தனித்த ஆளுமைகளுடன் எழுதி வந்தனர்.

இராஜேந்திர சோழன், பா. செயப்பிரகாசம், வண்ணதாசன், பூமணி, விக்கிரமாதித்யன், பிரபஞ்சன், கந்தர்வன், வேல. ராமமூர்த்தி, ராஜமார்த் தாண்டன், கலாப்ரியா, அம்பை, தேவதேவன், ஆதவன், வண்ணநிலவன், தமிழ்ச்செல்வன், சமயவேல் என்போர் அவருள் முக்கியமானவர். இதில் ஏதேனும் பெயர்கள் விடுபடல் இருந்தால் அது தற்செயல், திட்டமிடல் அல்ல.

இன்று போல் சக எழுத்தாளர் மீது பகை பாராட்டுதல் முப்பத்தைந்து ஆண்டுகள் முன்பு இல்லை. ஆற்றல் சார்ந்த பொறாமை இருந்திருக்கக் கூடும், ஆனால் அது ஆரோக்கியமானதாக இருந்தது.

1989 இறுதி வரையிலும் நான் சேண்மையில் வாழ்ந்த காரணத்தால் அன்றாடப் பழக்கமோ, சந்தித்து உரையாடும் வாய்ப்போ, ஆழ்ந்த நட்போ எனக்கு எவரோடும் இருந்ததில்லை. எனது இயல்பான கூச்சம் ஒரு காரணம், தொலைவு மற்றொரு காரணம். ஆண்டுக்கு ஒரு முறையே விடுப்புக்கு ஊருக்கு வருவதால், எவரையும் ஓடியோடிப் போய் பார்ப்பதும் வாய்த்ததில்லை. இரண்டு விதிவிலக்குகள் சொல்லலாம். ஒன்று பம்பாயில் வாழ்ந்த அம்பை, என்னைக் கடிதங்கள் மூலம் வெகுவாக ஊக்குவித்த வண்ணதாசன் மற்றும் யாவரையும் நெருக்கமாக நான் உணர்ந்தது அவர்கள் எழுத்து வாயிலாகத்தான்.

அனைவரிலும் மிக முக்கியமான, எனக்கு மிக நெருக்கமோ, ஆத்மார்த்த நண்பனாக நான் உணர்வது வண்ணநிலவனை. அவர் புதுமைப்பித்தன் எனும் மேதையின் தாய்வீட்டுச் சீதனமாக எழுத்தாற்றல் பெற்ற படைப்பாளி.

அவரது கதைகள் மயான காண்டம், மிருகம், எஸ்தர், பாம்பும் பிடாரனும், மழை போன்றவை தமிழ்ச் சிறுகதையை உலகத் தரத்துக்குக் கொண்டு சென்றவை என நம்புகிறேன். நான் உலகத்துச் சிறந்த சிறுகதைகளை ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பு களின் வழி ஓரளவுக்கு வாசித்து அறிந்தவன் எனும் தகுதியின் அடிப்படையில் இந்தக் கூற்றை நான் முன் வைக்கிறேன்.



சிறுகதைகள் மாத்திரம் என்றில்லை, பக்க அளவில் சிறியவையாக இருந்தாலும் கம்பா நதி, கடல்புரத்தில், ரெயினீஸ் ஐயர் தெரு எனும் நாவல்களும் அவரது சாதனைகள்தாம். கல்லூரி மாணவர்க்கு சிறுகதைகள் பற்றி உரையாற்ற நேர்ந்தால் தவறாது நான் குறிப்பிடும் இரண்டு கதைகள் - ஒன்று வண்ணநிலவனின் 'மிருகம்', மற்றது ஜெயமோகனின் 'திசைகளின் நடுவே'.

நான் முதன்முதலாக அவரைச் சந்தித்தது நேரில், அவரது மகள் திருமண வரவேற்பு அல்லது மறுவீடு, கோவையில் நடந்தபோது. 2005 ஆக இருக்கலாம். ஒரு திருமண வரவேற்பில், அதுவும் சொந்த மகள் திருமண வரவேற்பில் என்ன உரையாடி என்ன அறிந்து கொள்ளக் கூடும். தவிர்த்து, அவருடன் நின்றபடி ஒரு தேநீர்கூட நான் பருகியதில்லை.

எனவே அவது அறிமுகம் பெரும்பாலும் அவர்பற்றி வண்ணதாசன், கலாப்ரியா உரையாடல் கள் மூலமாகவே எனக்குள் நடந்தது மற்றும் அவரது எழுத்துக்கள். கடந்த இருபது ஆண்டுகளாக நான் தமிழ்நாட்டில் வாழ்ந்தாலும் அசப்பில் பார்த்துக் கை குலுக்கியதன்றி, அமர்ந்து உரையாட வாய்ப்பற்றுப் போன இன்னொரு எழுத்தாளர், நான் மிகவும் மதிக்கும் கவிஞர் யூமா வாசுகி.

1970 முதல் 2000 வரை, முப்பது ஆண்டுகளில் வண்ணநிலவன் எழுதிய சிறுகதைகள் 88தான். 1975 முதல் 2005 வரை, முப்பது ஆண்டுகளில நான் எழுதிய சிறுகதைகள் 85. இந்த ஒன்றைத் தவிர மற்ற எந்த விதத்திலும் சிறுகதைகளில் நான் வண்ண நிலவனுடன் ஒப்பிடத் தகுந்தவனில்லை.

சிறுகதைகன் மூலம் உருவாகித் திரண்டு என்னுள் எழுந்துள்ள வண்ணநிலவன் படைப்பாளுமை மிக உயர்வானது.

தனக்கென எந்த இடமும் கோரிப் பெறாதவர் அவர். தகுதி அடிப்படையில் தமிழ்ச் சமூகம் அத்தனை எளிதில் ஒரு படைப்பாளியைக் கண்டு கொள்வதில்லை. ஒரு கலைமாமணிக்கே போக்கில்லை, சாகித்ய அகாதமி எனும் சொர்க்க வாசல் திறப்ப தென்று? திறமை சால் எழுத்தாளனின் அவயம் இது. சாதி, பணம், பருவ இதழ்களின் ஆதரவு, அரசியல் தலைவர்கள் சிரசு மேல் கைவைத்து வழங்கிய ஆசி என்ற செல்வாக்கு களினால் ஊதிக் காட்டப்படும் உருவங்களாக நொய்மைப் படைப்பாளிகள் உலாவரும் காலத்தில், வண்ணநிலவனின் அமைதியான சாதனை எனக்கு அதிசயமாகப்படுகிறது.

☯

# ரெயினீஸ் ஐயர் தெருக்காரர்களும் சாணை பிடிப்பவனும்



**வண்ணநிலவன்**

**நா**ங்கள்
நீண்டநாட்களாய்
சாணைப் பிடிப்பவனைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.
பழைய சோற்றுக்கு,
பத்து பைசா நாணயத்துக்கு,
அப்பாவின் கிழிந்த சட்டைகளுக்கு,
சாணை பிடித்துக் கொடுப்பான்.
மழை வந்து
மேஜைக் கத்தி, கத்திரிக்
கோல்களின் முனைகளெல்லாம்
துருப் பிடித்து
மிக மோசமாய்
மழுங்கிக் கிடக்கின்றன.
எங்கள் நினைவுகளில்
முன்பிருந்த வெண்மைச் சுடர்
பளிச்சிடுகிறது.
அவன் வந்தால்
இதையெல்லாம் தீப்பறக்கத் தீட்டி,
அதன்,
வெண் பளிங்கு முனைகளில்
இரு விரல்களோட்டி
கூர் பார்த்துத் தருவான்.
மழை நாட்களில்
எங்கள் ரெயினீஸ் ஐயர் தெரு
பார்க்க அழகாயிருக்கும்.
எங்கள் தெருவிலிருக்கிற
சர்ச் மணிக் கூண்டில்,
சில மாடப் புறாக்கள்
மழையை வேடிக்கை பார்ப்பதுண்டு.
முன்பொரு மழை நாளில்தான்
சாணைக்காரன் வந்தான்
மழையில் நனைந்து வெடவெடத்தான்
என்கிற நினைவுகளை விட
மழையைப் பிளந்து
ஒலித்த
அவன் கட்டைக் குரலே
இன்னும் நினைவிலிருக்கிறது.
அவனும் சாணை மிஷினும்
அன்று மிகவும் நனைந்து போயிருந்தார்கள்.
அவர்களுக்கு மிகச் சிறிய
இடமே போதுமானது.
ஆடுகள் ஒதுங்கி நிற்கிற
கூரையடிகள்,
'சன்ஷேடு'களின் கீழிடங்கள்
இருவருக்குமே போதுமானவை.
அந்த மழையிலும்
அவனது சாணைக்கல்
தீப்பொறியிட்டது.
கூர் இழந்த
எங்கள் ஆயுதங்கள்
கூரடைந்தன.
அவனொரு மந்திரக்காரன்
இன்னும்
மழை பெய்து
எங்கள் ரெயினீஸ் ஐயர் தெரு
நனைந்து போய்
பார்க்க அழகாயிருக்கிறது.
எங்கள் தாத்தாவுக்கு
அவன் கட்டைக்குரலை
நன்றாகத் தெரியும்.
அடையாளம் கண்டு கூப்பிடுவதற்காகத்
தாத்தாவைத் திண்ணையில்
காத்திருக்கச் செய்திருக்கிறோம்.
தாத்தாவைத் தவிர
பழைய சோறு,
பத்து பைசா நாணயம்
அப்பாவின் கிழிந்த சட்டை
எல்லாம்
அவனுக்காகக் காத்திருக்கின்றன.



# இந்தக் கதையைப் பற்றி

வண்ணநிலவன்

*(1977ஆம் ஆண்டு கடல்புரத்தில் முதல் பதிப்புக்கு எழுதிய முன்னுரை)*

சொல்லுகிறதுக்கு எவ்வளவோ இருக்கிறது. ஓரத்தில் ஒதுங்கி நின்று எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துப் பார்த்து இன்னும் அலுக்கவில்லை. எல்லோரையும் போலத்தான். 'இந்த வாழ்க்கையில் ஏதோ இருக்கிறது' என்று தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன். நான் எழுதவென்று ஆரம்பித்து, 'இவனும் ஏதோ சொல்லுகிறானே' என்ற ஒரு நிலையும் ஏற்பட்டுப் போயிருக்கிறது.

எல்லாம் பெரிய விஷயங்கள்தான்; எல்லோரும் உயர்வானவர்கள்தான். மனிதர்களுக்கு அன்பு என்கிற பெரிய வஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது. மனிதனை நெருங்குகிறதுக்கு எவ்விதத் தடையுமில்லை. எவ்வளவோ இழந்தாலும் பெறுகிறதற்கும் ஏதாவது இருந்துகொண்டேதான் இருக்கிறதென்று நினைக்கிறேன். ஸ்ரீ சுந்தர ராமசாமி சொன்னது மாதிரி, 'எதையாவது இழந்துதான் எதையாவது பெறுகிறோம்' என்பது திரும்பத் திரும்ப நிரூபிக்கப்படுகிறது.

நானும் எழுதுகிறவர்களில் ஒருத்தனென்று ஆகிப்போனதால், இலக்கியத்தைப் பற்றி மனம்விட்டுப் பேசுகிறேன்.

கலை, மனம் சம்பந்தப்பட்டது; ரசனை பூர்வமானது; உண்மையோடு நெருங்கிய சம்பந்தமுள்ளது. நல்ல கலைஞன் ஜனங்களிடம் பொய்சொல்ல மாட்டான். கலைக்குப் பொய் ஆகாது.

இந்தக் கதையைப் பற்றி நான் சொல்ல வேணுமோ?

இந்தக் கதையில் வருகிற மணப்பாட்டு ஊர்க்காரர்களை நினைத்தால் வெகு வியப்பாக இருக்கிறது. மனத்தில் அன்பிருந்தால் பேசுகிற சொற்கள் மந்திரம் போலாகும். மணப்பாட்டு ஜனங்கள் பேசுகிறது தேவபாஷையாகத்தான் எனக்குப் படுகிறது. கொலை செய்தார்கள்; ஸ்நேகிதனையே வஞ்சித்தார்கள்; மனைவி, புருஷனுக்குத் துரோகம் நினைத்தாள், சண்டையும் வந்தது. ஆனாலும் எல்லோரிடமும் பிரியமாக இருக்கவும் தெரிந்திருந்தது அவர்களுக்கு.




மனம் உய்ய வேண்டும்; இதற்குத்தான் இலக்கியம் உதவும். மனத்தை உய்விக்கிற இலக்கியத்தை, எப்போதாவது 'அன்புவழி'யைப் போன்ற ஒரு நாவலை எழுதிவிட முடியுமென்று நினைத்துத்தான் எழுதிப் போகிறேன்.

இந்நாவலுக்கு முதல் ரசிக நண்பர்கள் கல்யாணியும் (வண்ணதாசன்) நம்பிராஜனுமாவர்.

'கணையாழி' பத்திரிகையில் இது தொடராக வெளிவந்தது. அதன் ஆசிரியர் ஸ்ரீ கி. கஸ்தூரி ரங்கனுக்கும், இந்த நாவலை என்னிடமிருந்து டெல்லிக்கு எடுத்துச் சென்ற நண்பர் ஸ்ரீ இந்திரா பார்த்தசாரதி அவர்களுக்கும் என்னுடைய நன்றி உரியது.

எப்பொழுதும் தமிழ் வாசகர்கள் எல்லோருமே எனக்குச் சம்பந்தமுள்ளவர்கள்தான்.